# மலைத்தென்றல்

வான் புகழ் கொண்ட தமிழ்

2023



வெளியீடு

ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழக மாணவர்கள்

பதுளை

UWU
Uva Wellassa University

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைத்தென்றல்

வான் புகழ் கொண்ட தமிழ்
2023



11277(P)

முப்பொழுதும் முத்தமிழ்

எத்திசையும் எங்கள் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன் முகம்

நூல் ~ மலைத்தென்றல்

நூலின் தன்மை ~ சிறப்பு ஆண்டு மலர்

ஆலோசனை ~ மா. ரூபவதனன்
சி. ஸ்ரீகாந்த்
மு. ரமாசினி

மலராசிரியர்கள் ~ சு.கலையரைசன்
(14ஆம் தலைமுறை, விலங்கு உற்பத்தியும் உணவுத் தொழில்நுட்பமும் கற்கைநெறி)

உ.கபியங்கா
(14ஆம் தலைமுறை, விருந்தோம்பல் சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் கற்கைநெறி)

நூல் வடிவமைப்பு ~ சி.சிறிநிருபன்
(14ஆம் தலைமுறை, விஞ்ஞானமும் தொழிநுட்பமும் கற்கை நெறி)

சி.தனீசன்
(14ஆம் தலைமுறை, விஞ்ஞானமும் தொழிநுட்பமும் கற்கை நெறி)

வெளியீடு ~ ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழக தமிழ் மாணவர்கள்

ஆண்டு ~ 2023

நூலின் அளவு ~ B5

பிரதிகள் ~ 100

பக்கங்கள் ~ 152

அச்சுப் பதிப்பு ~ ஆதித்தியா அச்சகம், பதுளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னைய பதிவுகள்

மலைத்தென்றல்
வான் புகழ் கொண்ட தமிழ்
2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னைய பதிவுகள்

மலைத்தென்றல்
வான் புகழ் கொண்ட தமிழ்
2023




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னைய பதிவுகள்

மலைத்தென்றல்
வான் புகழ் கொண்ட தமிழ்
2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னைய பதிவுகள்

மலைத்தென்றல்
வான் புகழ் கொண்ட தமிழ்
2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்வழியே




கண்வழியே 2023


1



2




3



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கழிவுப்பொருளாக்கம்



1

2





3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு 2023



இடமிருந்து வலமாக :-

**இருப்போர்:** ப. தமிழ்ப்பிரியன் (பொருளாளர்), தி. தாரணி (செயலாளர்), சி. ஸ்ரீகாந்த் (விரிவுரையாளர்), மா. நீபவதனன் (முதுநிலை விரிவுரையாளர்), ஜே. எல். ரட்ணசேகர (துணைவேந்தர்), து. பிரதீபன் (பல்கலைக்கழக பதில் நூலகர்), கு. அபிராம் (விரிவுரையாளர்), கு. மோகன்சிங் (தலைவர்), க. கீர்த்திகா (உப தலைவர்), நா. அருள்பிரசாத் (உப செயலாளர்)

**நிற்போர்:** நா. கிறிஸ்ரன் ச. ஜெயஷரூபன், சு. கலையரசன், சி. தனீசன், சி. சிறிநிருபன், நா. நதிசாங்கன், சி. லிகிர்தன், சி. சாதுரிகா, உ. கபியங்கா, சி. ரதீசனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாக்குழு 2023




இடமிருந்து வலமாக :-

**இருப்போர்:** ப. தமிழ்ப்பிரியன் (பொருளாளர்), தி. தாரணி (செயலாளர்), சி. ஸ்ரீகாந்த் (விரிவுரையாளர்), மா. ரூபவதனன் (முதுநிலை விரிவுரையாளர்), ஜே. எல். ரட்னசேகர (துணைவேந்தர்), து. பிரதீபன் (பல்கலைக்கழக பதில் பதிவாளர்), கு. அபிராம் (விரிவுரையாளர்), கு. மோகன்சிங் (தலைவர்), க. கீர்த்திகா (உப தலைவர்), நா. அருள்பிரசாத் (உப செயலாளர்)

**நிற்போர்:** பா. தர்மியா, நா. மாதுசன், க. மிதுர்சன், இ. அருள்குமரன், ம. நிதுஷன், ஜெ. இந்துஜன், க. சில்வியா, சே. அஜித்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

பாடலாசிரியர்: மகாகவி சுப்ரமணிய பாரதியார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைத்தென்றல் கருப்பொருள் பாடல் 2023

ராவணன் ஆண்ட தொன்மொழி - சேர சோழ பாண்டியரின் திருமொழி..
ஔவை வள்ளுவனின் ஆதி மொழி,
ஆயுதம் கொண்ட போர் மொழி

நிஸ நிஸ / மதநி ஸஸஸஸா//
ஸரிகம
பாத பாத பம பதா /
பாத பாத பம பத பமா//

தமிழின் புகழ் என்றும் அணையாது
அழகின் மொழிக்கென்றும் அழிவிங்கு ஏது
இனிக்கும் தமிழுக்கு நிகரேது
உலகில் உன்னை விஞ்சும் மொழி இங்கு ஏது…

சீறும் கடலை போலே புயலாய் எழுவோம்
வாழும் வரையில் தமிழை பாடி மறைவோம்
(தமிழின் புகழ்….)

அண்டம் நடுங்கிடும் ஓசையும் நீ
அகிலம் அருண்டிடும் வார்த்தையும் நீ
அலைகள் முழங்கிடும் கோபமும் நீ
அன்பின் தீயிலே காற்றாய் நீ

மலையில் குதித்தெழும் அருவிகள் நீ
மருதம் மயங்கிடும் நெல்மணி நீ
பரவை பாடிடும் மீனிசை நீ
பாலைவனத்திலோர் முல்லையும் நீ

ஐந்து நிலங்களில் உன் ஆட்சி
அகிலம் அறிந்திடுமே..
ஆயகலைகளும் உந்தன் சாட்சி
காலம் உணர்த்திடுமே..
(தமிழின் புகழ்……)

உன்னாலே .. உயர்வோமே…
உயிராலே…. உணர்வோமே..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயே!!
தமிழே!!
உயிரே!!
உறவே!!

சுட்ட பால் அது சினந்தெழுந்து
அந்த தீயின் சுடரினை அழித்திவிடும்
காலம் சமயத்தில் பதில் சொல்லும்
எங்கள் கன்னி தமிழ் அது பார் வெல்லும்

குட்டக்குட்ட அட நீ குனிந்தால்
உன்னை குட்டி கொண்டு தான் இருப்பார்கள்
எதிர்த்து எட்டு வைத்து நீ நடந்தால்
உன்னை எட்டி நின்று தான் வியப்பார்கள்

தமிழன் என்று சொன்னால் இந்த
தரணி அதிர வேண்டும்
தமிழை மென்று தின்றே -உந்தன்
மூச்சும் உதிர வேண்டும்..

அகரம் முதலாய் னகரம் இறுவாய் சிகரம் தொட்ட மொழியே!
இயலும் இசையும் இனிதாய் கூத்தும் வளர்த்தாய் என் கவியே!
குமரி கண்டம் வளர்த்த அந்த குமரிபெண்ணும் நீயே!
குறிஞ்சி நிலம் கண்ட அந்த குமுதப் பெண்ணும் நீயே!

பேதையாய் நீ பிறந்து போதையாய் என்னில் வளர்ந்தாய்
பெதும்பையாய் நீ மாறி மங்கையாய் என்னை மணந்து கொண்டாய்

ஈரடியில் உறைய வைத்தாய்
நாலடியில் நளினம் கொண்டாய்
காவியக் கூத்துக்களில் கச்சிதமாய் அமர்ந்து கொண்டாய்

தங்கத் தட்டிலே உனை பொறித்தான் செப்பேட்டிலே!
கீழடி சுவடுகளில் கிடைத்தாய் கல்வெட்டிலே!
மடந்தை தான் ஈற்றிலே நீ பெண்ணாய் ஆனாய் பாட்டிலே!
பதித்தோம் ஏட்டிலே உன்னை என்றும் காப்போம் நாட்டிலே!

செம்மொழி யாவிலும் சிறந்தவளே!
அம்மொழிக்கெல்லாம் அன்னை அவளே!
முப்பொழுதும் அவள் கற்பனையே!
எத்திசை எங்கிலும் எந்தன் தமிழே

வரிகள்
சு.கலையரசன்
க.கிசோபிகன் , சி.வினித்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழக தமிழ் மாணவ மாணவிகளின் கைவண்ணத்தில் உருவாகிய "மலைத்தென்றல்" எனும் 2023ற்கான வருடாந்த சிறப்பிதழ் அனைவருக்கும் பயன் பெறும் வகையில் அமைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

"சுபமஸ்து"

சிவஸ்ரீ பால லட்சுண குருக்கள்
முருகன் கோவில் - பதுளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



உங்கள் அனைவரது முயற்சிகளும் உழைப்புகளும் குறைவேயின்றி இறையாசீர் முழுமையாக கிடைக்கப்பெறுவதாக!

கலாசாரம் என்பது மனித செயற்பாட்டுக் கோலங்களையும் அந்த செயற்பாடுகளுக்கு சிறப்பு தன்மைகளையும், முக்கியத்துவத்தையும் அமைப்பை அதன் வாழ்வியலோடு இணைத்து சமூகக்கட்டமைப்பை சிறந்த கலாசாரத்தின் சாயல்களுடன் உருவாக்க வேண்டுமெனும் நோக்கத்துடன் வருடந்தோறும் ஊவாவெல்லஸ்ஸப் பல்கலைக்கழக தமிழ்மாணவர் ஒன்றியத்தால் நடாத்தப்படும் கலாசார நிகழ்வையொட்டி வெளிவரும் வாழ்த்து சஞ்சிகைக்கு எனக்கு கிடைத்த சந்தர்ப்பத்திற்காக மகிழ்ச்சி அடைவதுடன், பல்கலைகழக மாணவர்களின் கலாசாரம் தொடர்பான மாற்று சிந்தனைகளும் கலசாரத்தை முன்னேற்றும் முயற்சிக்கும் இறையாசீர் வேண்டி பிரார்த்திப்பதோடு எதிர்கால சந்ததியினருக்கு கலாசாரத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் சிறந்த பிரஜைகளாக திகழும் பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் அனைவருக்கும் இறைவனின் அருள் முழுமையாக கிடைக்கும் எனும் நம்பிக்கையுடன் உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து இக்கலாசார நிகழ்வு சிறப்பாக இடம்பெற தேவையான இறையாசீர் வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

அருட்தந்தை.பாலநாதன்
இணை பங்குத் தந்தை
புனித மரியாள் பேராலயம் பதுளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message of the vice chancellor



It gives me great pleasure in sending greetings to the annual cultural event Malaithenral, organized by the UWU students. Malaithenral, Tamil cultural event initiated in 2014, Provides a golden opportunity for UWU students to showcase their talents and capabilities in performing arts.

In addition, the publication of a magazine along with the event enhances the creative writing skills of students.

While, displaying the unity and diversity of UWU family, the Malaithenral programme promotes the social and ethnic harmony within UWU. It is my considered opinion, that this type of cultural programmes should be an integral part of the university life. I highly appreciate the effort taken by the organizing committee of the Malathenral - 2023 add value to the UWU life.

I wish the Malaithenral - 2023 all the success.

Professor Jayantha Lal Ratnasekara

Vice Chancellor

Uva Wellassa University of Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழை முடிதனிலே சுமந்துவரும் மலைத்தென்றல்



"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு" என்று பாவேந்தர் பாரதிதாசன் குறிப்பிட்டது போன்று, தமிழைத் தமது வளமாகப் போற்றி அதன் தனித்துவத்தை முத்தமிழால் சுமந்துவரும் ஆற்றுகைப் பெருவிழாவில் தங்களை அர்ப்பணித்த அனைவருக்கும் பாராட்டுகள் உரித்தாகட்டும்.

ஊவா வெல்லஸப் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களின் தனிப்பெரும் அடையாளமாக பெயர்பெற்றுள்ள மலைத்தென்றலெனும் பண்பாட்டு அடையாள ஆற்றுகைப் பெருவிழாவானது, புதுப்பொலிவுடன் மீண்டும் வீசுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். உயர் கல்விச் சமூகமொன்றிற்கு இருக்கவேண்டிய சமூகப் பொறுப்பின் பரிணாமங்களை விட்டுவிடாமல் தமக்குரிய தனித்துவங்களைப் பேணிக்கொண்டிருக்கும் ஊவாவெல்லஸப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

தமிழர் பண்பாட்டின் தனித்துவத்தை ஆற்றுகைகளால் அலங்கரிக்க, மாணவர்களால் எடுக்கப்பட்ட முயற்சியின் வெற்றி அதன் தொடர்ச்சியில்தான் உள்ளது. தமிழ் மொழியின் சிறப்புப் பற்றிக் கூறிய நம் நாட்டின் தமிழ்ப் பேரறிஞர் பேராசிரியர் கா.சிவத்தம்பி தனது கருத்தியல் ஒன்றிலே "தமிழின் சிறப்பு அதன் தொன்மையில் இல்லை, அதன் தொடர்ச்சியில் இருக்கிறது," எனக் கூறியது போன்று, எமது மாணவர்களின் பொக்கிஷங்களில் ஒன்றான மலைத்தென்றல் நூற்றாண்டு கடந்து முத்தமிழின் எழுச்சிக்கு வழிவகுக்குமென திடமாக நம்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக வாழ்க்கையில் மாணவர்களுக்கு இருக்கின்ற சமுதாயக் கடமை உணர்வைத் தூண்டி, அவர்களுக்கான ஆற்றல்களை ஆற்றுகையாய் வெளிப்படுத்த சிறந்த களமாகவும் தளமாகவும் மலைத்தென்றல் வலம் வருகிறது. உன்னதமான நோக்கோடு நடந்துவரும் நிகழ்வாயினும் பல சவால்களைக் கடந்தேயாகவேண்டும் எனும் நிலை, மாணவர்களுக்கு பல்வேறுபட்ட அனுபவப் புரிதல்களைக் கொடுக்கின்றது. அத்தகைய புரிதல்களும் அனுபவங்களும் அடிப்படை முகாமைத்துவப் பண்பினை நோக்கி மாணவர்களை வளப்படுத்துகின்றது. ஆக்கபூர்வமான திட்டமிடலையும், ஒருங்கிணைந்து செயற்படுவதற்கான சந்தர்ப்பத்தையும் வழங்குகிறது.

பல்கலைக்கழக கற்கைச் செயற்பாடுகள் போட்டுள்ள கட்டையும் கடந்து தமிழர் பண்பாட்டின் மிகப்பெரும் கருவூலமாக மலைத்தென்றலை முத்தமிழும் சங்கமிக்க வீறுகொண்டெழச் செய்துகொண்டிருக்கும் ஊவா வெல்லஸப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் அனைவரையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

கலாநிதி துரையப்பா பிரதீபன்,
பல்கலைக்கழக பதில் நூலகர்,
ஊவாவெல்லஸப் பல்கலைக்கழகம்,
பதுளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ந்து வீசுக மலைத்தென்றல்!



உலகளாவிய கோவிட் 19 எனும் கொரோனா பெருந்தொற்று, நாடளாவிய அரசியல் குழப்பநிலை மற்றும் பொருளாதார நெருக்கடிகள் என்பவற்றால் கடந்த மூன்று ஆண்டுகள் நடைபெறாதிருந்த ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழக மாணவர்களின் மலைத்தென்றல் இவ்வருடம் பதுளை மண்ணில் அரங்கேறுகிறது.

பல்கலைக்கழக வாழ்வில் தமது கற்கைநெறிகளுக்கு மத்தியில் தம்மிடமுள்ள திறமைகளையும் வெளிக்கொணரவும், வெவ்வேறு பீடக் கற்கைநெறிகளைச் சேர்ந்த மாணவர்களுடன் பழகுவதற்கும், தனிமனித ஆளுமைக் குணாம்சங்களை வளர்த்துக்கொள்வதற்கும், நிகழ்வு முகாமைத்துவம் மற்றும் நிர்வகிப்பு பற்றி அறிந்துகொள்வதற்கும் மாணவர்களால் ஒழுங்கமைத்து நடத்தப்படுகின்ற நிகழ்வுகள் வழிசமைக்கின்றன.

ஆனால், 2019 மார்கழியில் மலைத்தென்றல் நடந்தபோது முதலாம் வருடத்திற்கு வந்த மாணவர்கள் 2023 இல் நான்காம் வருடத்தில் கல்விகற்கின்ற நிலையில், தமது பல்கலைக்கழக வாழ்வில் எந்தவித நிகழ்வுகளிலும் பங்குபெறவில்லை அல்லது தமக்குப் பின்வந்த கனிஷ்ட மாணவர்களுக்கு எதனையும் விட்டுச்செல்லவில்லை என்ற அவர்களின் கவலையை நிவர்த்திசெய்யும் வகையில் நான்கு வருட மாணவர்களும் சேர்ந்து மலைத்தென்றல் - 2023 ஐ அரங்கேற்றுவது மனமகிழ்ச்சியைத் தருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை முகங்கொடுத்துக்கொண்டிருக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் மத்தியில் மாணவர்களின் மரபுபேணுகை முயற்சி பாராட்டுதற்குரியது. இதற்காக உழைத்த அனைத்து சமகால மாணவர்களுக்கும், பக்கபலமாக நிற்கும் பழைய மாணவர்களுக்கும், தம்மாலியன்ற தானமிடுகின்ற தனவந்தர்களுக்கும், தோள் கொடுத்துத் துணைநிற்கும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகுக!

ஹைபிறிற் முறைமைகள் பலவற்றிலும் ஊடுருவியுள்ள எண்ணிம உலகில் முதன்முறையாக மலைத்தென்றல் இதழும் முதன்முறையாக நுழைந்து வரலாறு படைப்பதை எண்ணி ஊவா குடும்பம் பெருமிதம் அடையலாம்.

மலைத்தென்றலை ஒட்டி நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட கருத்தாடல் எனும் விவாதப்போட்டி, புத்தாக்கப் போட்டிகள், ஆக்க இலக்கியம் மற்றும் புகைப்படப் போட்டிகள் என்பவற்றை முன்னின்று நடத்திய மாணவர்கள், அவர்களை வழிநடத்திய விரிவுரையாளர்கள், மாணவர்களுக்குப் பல வழிகளிலும் உதவிய பெருந்தகைகள் அனைவருக்கும் தமிழுலகு கடமைப்பட்டிருக்கிறது.


ஊவா மண்ணிலிருந்து உலகெங்கும் தமிழ் மணம் பரப்ப வெளிவரும் மலைத்தென்றல் 2023 இதழ் வான்புகழ் கொண்டு வலம்வர வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி!

வாழ்க தமிழ்! வளர்க கலை! வீசுக மலைத்தென்றல்!

மா. ரூபவதனன்
முதுநிலை விரிவுரையாளர்
ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகம்
பதுளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் உள்ளத்திலிருந்து..



பர்வதங்கள் பூத்த பதுளையில் பட்டித் தொட்டி எங்கிலும் தன் புகழை பரப்பி கர்வத்தோடு வீற்றிருக்கும் ஊவா வெல்லஸ்ஸத் தாயின் பிள்ளைகள்

எம்மால் ஆண்டுதோறும் தமிழரின் பாரம்பரியங்களையும் கலாசாரங்களையும் வெளிக்கொணரும் முகமாக மலைத்தென்றல் என்னும் மாபெரும் கலைச்சங்கமம் செயற்பட்டு வருகிறது. இது ஆரம்பிக்கப்பட்டு இற்றைக்கு ஒன்பது ஆண்டுகள் கடந்தாலும் எந்த விதமான தொய்வும் இன்றி தமிழரின் பண்பாடு, கலாசாரம், விழுமியங்கள் அனைத்திலும் கோலொச்சி மாணவர்களின் திறமைகளையும் அவர்களது ஒழுக்கங்களையும் பறைசாற்றி வருகிறது.

அந்தவகையில் இதனை நிறுவிய புகழ் மிக்க சான்றோர்களுக்கும் இதனை ஆண்டுதோறும் சிறப்பாக நடாத்தி வருகின்ற மாணவ மாணவிகளுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் எமது மலைத்தென்றல் என்னும் கலைச்சங்கமம் சிறப்பான முனைப்புடன் செயல்பட வழிகாட்டி வரும் கல்விச்சமூகத்தினருக்கும், கல்விசாரா ஊழியர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்த வருடமும் “முப்பொழுதும் முத்தமிழ் எத்திசையும் எங்கள் தமிழ்” என்னும் தொனிப்பொருளோடு மலைத்தென்றல் கலைச்சங்கமம் நடைபெற்றது.

முத்தமிழ் திறமையுடைய அறிஞர்களினதும் மாணவர்களினதும் திறமைகளை வெளிக்கொணர்வதற்கு மலைத்தென்றல் ஓர் களமாக வருடந்தோறும் திகழ்கிறது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு கலை விழாவிற்கு மேலும் புகழ் சேர்க்கும் விதமாக வெளியிடப்படும் மலைத்தென்றல் எனும் இதழ் இவ்விழாவிற்கு பெரும் சிறப்பாக அமைகின்றதை ஒட்டி பெருமிதம் கொள்கிறேன். நமது இதழ் வெளியீட்டில் பங்கெடுத்து பொன்னான ஆக்கங்களை தந்துதவிய அனைவரின் அன்பிற்கும் ஆதரவிற்கும் நன்றி நவில கடமைப்பட்டுள்ளேன்.

மலைத்தென்றல் சிறப்பாக நடந்தேற உதவி மற்றும் நன்கொடை வழங்கிய அனைத்து நல் உள்ளங்கள் அனைவருக்கும் எனது அகம் மகிழ்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு இடர்களுக்கு மத்தியில் 2023 மலைத்தென்றல் இதழுக்கு ஆக்கங்களை சேகரித்து அதனை உருப்பெறச் செய்த இதழ் ஆசிரியர்களை பாராட்டுவதோடு எமது மலைத்தென்றல் எனும் மாபெரும் கலைச்சங்கமம் மூலம் தமிழர் பாரம்பரியம் மறைந்து போகாமல் இருக்கவும் எதிர்காலத்தில் மலைத்தென்றல் இதழ் துளிர்த்து சிறந்த அறுவடை நிகழவும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

கு.மோகன்சிங்
தலைவர்
விழாக்குழு (மலைத்தென்றல் -2023)
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர்களின் அகத்திலிருந்து..





நான்கு பக்கங்களிலும் நீரால் சூழப்பட்டது இலங்கையின் சிறப்பு. நான்கு பக்கங்களிலும் மலைகளால் மூடப்பட்டது பதுளையின் சிறப்பு. இப்படிப்பட்ட இயற்கை அழகு நிறைந்த பதுளையில் அனைத்து இன மாணவர்களையும் அழைத்து தன் குழந்தைகளாய் கருதி அறிவு புகட்டி மகிழ்கின்றாள் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைத்தாய்.

அப்படிபட்ட சிறப்பு வாய்ந்த பல்கலைக்கழகத்தில் வருடா வருடம் தமிழர் பழமைகளையும், கலை கலாசாரங்களையும் பிரதிபலிக்கும் முகமாக நடாத்தப்படும் மாபெரும் மலைத்தென்றல் எனும் கலைச்சங்கமம் இந்த முறையும் வெகு கோலாகலமாக கொண்டாடப்பட்டது. அந்தவகையில் இந்தக் கலைச்சங்கமம் இந்த வருடம் "முப்பொழுதும் முத்தமிழ் எத்திசையும் எங்கள் தமிழ்" எனும் தொனிப்பொருளோடு நடாத்தப்பட்டது.

மலைத்தென்றல் கலைச்சங்கமத்தை மேலும் சிறப்பிக்கும் முகமாக வெளியிடப்படும் மலைத்தென்றல் மலர் மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாக விளங்குகிறது. இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த இந்த மலரை வெளியிடுவதில் நூலாசிரியர்கள் என்ற வகையில் கர்வமும் பெருமிதமும் அடைகிறோம்.

அத்தோடு இந்நூலுக்கு பரிபூரண ஒத்துழைப்பை வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

அந்தவகையில் இந்த வருடம் மலைத்தென்றல் இதழுக்கான ஆக்கங்கள் மாணவர்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் முகமாக பெற்றுக்கொண்டோம். அத்துடன் பாடசாலை மாணவர்களின் திறமைகளை பறைசாற்றும் முகமாக பாடசாலை மட்டங்களுக்கு இடையிலான கவிதைப் போட்டி மற்றும் கழிவுப்பொருள் ஆக்கப்போட்டி என்பவற்றை நடாத்தியதோடு இவ்வருடமும் புகைப்படப்போட்டி ஒன்றையும் நடாத்தி இருந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கண்வழியே” புகைப்படம் என்னும் தொனிப்பொருளில் இவற்றில் மிகச்சிறந்த முதல் மூன்று ஆக்கங்களை மலைத்தென்றல் இதழுடன் இணைத்து வெளியிடுவதில் பெருமை கொள்கின்றோம்.

இந்நூல் உருவாக்கத்திற்கு தமது முழு ஒத்துழைப்பையும் நல்கிய அனைத்து பிரிவு மாணவ மாணவியர் மற்றும் ஆசிச்செய்தி வழங்கிய துணைவேந்தர் கலாநிதி J.L ரட்னசேகர, சிரேஸ்ட விரிவுரையாளர் மார்க்கண்டன் ரூபவதனன், நூலகர் சு.பிரதீபன், சிவஸ்ரீ பால லட்சுண குருக்கள் பதுளை முருகன் ஆலயம், அருட்தந்தை பாலநாதன் பதுளை பிரதான பேராலயம் மற்றும் இந்நூல் தலைமுறை சிரேஸ்ட தமிழ் மாணவர்கள் மற்றும் ஆக்கங்கள் தந்துதவிய அனைவருக்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

இலக்கிய சுவையும், கற்பனைத் திறனும், சமூக அக்கறையும் கொண்டமைந்த இந்நூலானது படிப்பவர்கள் வாழ்க்கையை பட்டை தீட்டும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இந்நூலை சிறப்பாக வெளியிட பல்வேறு விதத்திலும் உதவி புரிந்த ஆதித்யா அச்சகம் பதுளை, விளம்பரதாரர்கள், அனுசரணையாளர்கள் அனைவருக்கும் ஊவாவெல்லஸ்ஸ பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் சார்பில் பேரன்புடன் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் இந்த வெளியீடானது இத்தோடு நின்றுவிடப்போவதில்லை. தொடர்ந்து அடுத்தடுத்து வரும் தலைமுறையினரும் இவ்விதழை சிறப்பாக வெளியிட வேண்டுமென்பதை எதிர்பார்க்கின்றோம்.

தமிழே எம் அறம்
அதுவே எம் வளர்ச்சிக்கு உரம்.
தமிழ் மெல்ல இனிச்சாகும்.

சு. கலையரசன்
இதழாசிரியர்
மலர்க்குழு (மலைத்தென்றல் -2023)
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

உ.கபியங்கா
இதழாசிரியர்
மலர்க்குழு (மலைத்தென்றல் -2023)
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் எண்ணத்திலிருந்து.........



"தமிழுக்காக தலை வணங்கும் என் சிரம் தமிழ் வளர என் உடல் ஆகட்டும் உரம்"

என்று என் தாய்மொழியைத் தலைவணங்கி அம்மொழி வழிவந்த தமிழ் மாணவர்களாகிய நாம் "மலைத்தென்றல்" என்ற சஞ்சிகையை வெளியிடுவதில் மன்றத்தின் செயலாளராகிய நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இம் மலைத்தென்றல் சஞ்சிகையானது பல துறை சார்ந்த கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் மற்றும் ஆக்கங்கள் என்பவற்றுடன் பல்வேறு வகையான ஆளுமைகளை வெளிக்கொண்டு வரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இச்சஞ்சிகையானது மாணவர்களுக்கும், ஏனைய துறை சார்ந்தவர்களுக்கும் பயன் மிக்கதாக அமையும் என்பது எனது எண்ணமாகும்.

கடந்த முறை மலைத்தென்றல் 2019 நிகழ்வினை பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகர (துணைவேந்தர் ஊவா வெல்லச பல்கலைக்கழகம்) அவர்கள் பிரதம விருந்தினராகவும். "தேசநேத்திரா" கலாகீர்த்தி பேராசிரியர் சி. தில்லைநாதன், ஓய்வுநிலை தமிழ்ப் பேராசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகம், கௌரவ விருந்தினராகவும், கந்தசாமி ரமேஷ்குமார் சட்டத்தரணி பதில் நீதவான் நீதிமன்றம், கலாநிதி வு.பிரதீபன், தலைவர், இசைத்துறை கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை, வு. கஜேந்திரகுமார், பிரதி மாநகர ஆணையாளர், பதுளை மாநகரசபை அவர்கள் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டு நிகழ்வினை சிறப்பித்தனர். கடந்த முறை நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் பார்வையாளர்களால் பேசப்பட்டதும், சிறப்பாக நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது. அழகிற்கு அழகு சேர்க்கும் வகையில் இவ்வருடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகளில் வில்லுப் பாட்டு, சொல்லிசை தமிழா, சிறப்பு கலை ஆற்றுகை, நாட்டிய நாடகம்  போன்ற  புது நிகழ்வுகள் இணைக்கப்பட்டுள்ளன.

மற்றும் இம் முறை மலைத்தென்றல் - 2023 நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் கௌரவ யு. அரவிந்தகுமார் அவர்கள் பிரதம அதிதி ஆக கலந்து கொள்ளவுள்ளார். அடுத்ததாக பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர (துணைவேந்தர் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்) அவர்கள்  கௌரவ அதிதி ஆக கலந்து கொள்ளவுள்ளார்.பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கென்னடி ( சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம் கிழக்கு பல்கலைக்கழகம்),  திரு ஹிபத்துல் கரீம் (பதிவாளர் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்) அவர்களும்  சிறப்பு அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளார். திரு மா.ரூபவதனன் (சிரேஷ்ட விரிவுரையாளர் முகாமைத்துவ பீடம் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்) அவரும் கலந்து சிறப்பிக்க உள்ளார்.

அத்துடன் வழமையாக கலைத்திரள் கவிதை போட்டிகளும்,கண்வழியே புகைப்பட போட்டிகளுமே நடை பெற்றுவந்தன. இம் முறை கருத்தாடல் எனும் நாமத்தில் விவாத போட்டியை அறிமுகப்படுத்தி உள்ளோம். இப் போட்டியானது இணைய வழி ஊடாக நடைபெற்று அதில் நான்கு அணிகள் இறுதி தீர்மானத்திற்கு தெரிவு செய்யப்படும்.

இதே போன்று ஒவ்வொரு வருடமும் புதுப்பொலிவுடன் "மலைத்தென்றல் " வெளிவர வேண்டும் என்பது எல்லோரினதும் அவாவாகும். இந்த வகையில் இந்த சஞ்சிகை தொடர்ந்தும் வெளிவர எங்கள் சங்கரத்தை பத்திரகாளி அம்மாளின் பாதார விந்தங்களை பணிந்து நிற்கின்றேன் .

மேலும் இம் முயற்சிக்கு ஆதரவாக இருந்த மாணவர்களுக்கும் அத்துடன் இச் சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்கியவர்களுக்கும் ,நிதியுதவி வழங்கியவர்களுக்கும், வாழ்த்து செய்தி வழங்கியவர்களுக்கும், அச்சிட்டு உதவியவர்களுக்கும் எம் மன்றத்தின் சார்பில் நன்றியினைக் கூறிக் கொள்வதில் சிறியோனாகிய நான் அளவில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

தாரணி திருச்செல்வம்
செயலாளர்
விழாக்குழு (மலைத்தென்றல் -2023)
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னைத் தமிழே!!..

ஆதியில் பிறந்து
ஔவை மடியில் தவழ்ந்து..
முச்சங்கத்தில் உயர்ந்து...
பாட்டன் வள்ளுவன் முப்பாலில்
புணைந்து..
கம்பன் கவிதையில் கடைந்து..
பாரதியிடம் பெண்விடுதலை கோரி..
மூன்றெழுத்தில் மூச்சாகி
தமிழர் பேச்சாகி உயர்ந்து
நிற்கும் மொழியே..
எம் உடலின் ஒவ்வொரு செல்லும்
செப்பிடும்
தமிழென்று ஒவ்வொரு நொடியும்
உனை மென்று கக்கிடும்..
எம் உடம்பு ஆகட்டும் தீக்கிரை
அது வரை எம் நா உச்சரிக்கும் தமிழ்
என்னும் போர்ப்பறை..

- கு.குயிந்தன் -

14ஆம் தலைமுறை
கணினி விஞ்ஞானமும்
தொழில்நுட்பமும் கற்கைநெறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

1. தமிழின் தமிழகரம் ........................................................................1
2. இலங்கையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப பாவனையினால் ஏற்படும் விளைவுகளும் பாதுகாப்பு பொறிமுறைகளும் ........................................................................5
3. நறுமுகையே... ........................................................................19
4. நரபலி... ........................................................................22
5. மனிதமே கடவுள்.......!!!!!!! ........................................................................28
6. விஞ்ஞானத்திற்குள் இறைவனின் உருவகம்.. ........................................................................30
7. "தீ " க்கு இரையான யாழ் நூலகம் ........................................................................33
8. தொட்டிலுக்குள் வா..! ........................................................................37
9. ஏமாற்றாதே ஏமாறாதே ........................................................................40
10. என் மரணசாசனம்.. ........................................................................43
11. மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு... ........................................................................45
12. இலங்கையின் சுற்றுலாத்துறையின் தற்காலப் போக்கு.. ........................................................................47
13. ஒரு நிமிடம்..! ........................................................................50
14. வட்டத்திற்குள் பறக்க மறுத்ததே இல்லை, ........................................................................52
15. நாட்டார் பாடல்கள் ........................................................................55
16. முதல் முத்தம் உனக்காக ........................................................................59
17. குண்டர் வாழ்க்கை ........................................................................61
18. விடுதி வாழ்க்கை ........................................................................63
19. பெண்... ........................................................................67
20. உள்முக சிந்தனையாளர்களும் வேலையுலகும் ........................................................................70
21. மனித வள அபிவிருத்தி ........................................................................73
22. அறிவியலே ! ........................................................................76
23. நான் பார்த்து வியந்த மனிதர் ராவணன் ........................................................................78
24. தமிழர் பண்பாட்டில் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கு ........................................................................81
25. ஆசை முகம் மறந்து போச்சே.... ........................................................................84

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. நம்பிக்கையே விதையாக... ........................................................86
27. கோணல்களின் முடிவில் வாழ்க்கை.. ...........................................87
28. உயிர்முறைமைகள் தொழில்நுட்பமும் கற்கைநெறியும் தொடர்பான பார்வை........................................................................90
29. எம்மொழி ..........................................................................................93
30. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் கற்கைநெறி ............................94
31. வாழ்க்கையில் தோல்விக்கு இடமே இல்லை....................................98
32. "இந்த" விஷயத்தில் கவனம் தேவை... வெற்றி நமக்கானது தான்..!.......................................................98
33. தமிழர் அறக்கருத்துக்களும் பதினெண் கீழ்கணக்கு நூல்களும். ...........................................................100
34. பல்கலைப்பயணத்திலிருந்து ..........................................................104
35. யாழ் (இசைக்கருவி)......................................................................106
36. எங்கே நீ செல்கின்றாய் .....?..........................................................108
37. முதற் பிள்ளை................................................................................110
38. சிறகு உதிர்ந்த பறவை..... ..........................................................112
39. பரதம்...............................................................................................117
40. என் உயிர்த்தமிழின் தமிழ் பண்பாடு..........................................118
41. அவளும் தாயாவாள்... ....................................................................120
42. மனம் ஒரு குழந்தை .......................................................................123
43. பாடசாலை மட்டங்களுக்கு இடையிலான கவிதை போட்டியில் வெற்றியீட்டிய ஆக்கங்கள்..............................126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின் தமிழகரம்

க.விமோசன்
13ஆம் தலைமுறை
விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் கற்கைநெறி

ஆங்கே உலக வரலாற்றினில் ஆதிமொழிக்கான தேடல் பார்வைகள் சீனவரலாறு மொகஞ்சதாரோ மொசப்பதேனியா கிரேக்கவரலாறு சிந்துவெளிநாகரீகம் என மாறுபட்டுக்கொண்ட நேரங்களில் எல்லாம் அனைத்து உலகநாகரீகங்களுக்கும் பிதாமகனாகிவிட்டு எதுவித ஆர்ப்பாட்டங்களுமின்றி இந்தியப் பெருங்கடலினுள் இன்றும் துயின்று கொண்டிருக்கும் லெமூரியாவில் கர்ப்பம் தரித்து உலகெங்கும் பேரொளி வீசிய தமிழ்மொழியின் மிகப்பெரும் ஒரு தனித்துவ அடையாளமே ழகரமாகும்....

வரலாற்றின் புரட்டப்பட்ட பக்கங்களிலெல்லாம் நடைமுறையில் உள்ள மொழிகள் ஏராளம். ஆங்கே மொழிகளுக்கு இடையில் பல உடன்பாடுகள் மேற்கொள்ளப்படுவது வழமையே. அதாவது மொழிபெயர்ப்பு, உதாரணமாக ஒரு மொழியின் சிறந்த பதிப்பினை சுவைமாறாது இன்னொரு மொழியாக பெயர்ப்பு செய்வதாகும். ஆனால் இங்கேதான் தமிழ் தன் எல்லையில்லா உயரத்தில் நிற்கிறது......

அதாவது உணர்ச்சி, பொருள், வடிவம், நயம் எனும் நால்வகை இயல்புகள் உடைய தமிழின் பாடலினை சற்றும் சுவைகுன்றாது வேறு ஒரு மொழியாக பெயர்ப்பு செய்வது என்பது இன்றளவும் இயலாத ஒன்றாகவே இருக்கிறது. அதுவேதான் தமிழ். அந்த நால்வகை இயல்புகளையும் நங்கூரமாய் நிலைப்படுத்திவிடுவதில் ழகரம் மிகப்பெரிய பங்காற்றுகின்றது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல் வரலாற்றின் புரட்டப்படாத பக்கங்களினுள்ளும் கீழடியின் கீழேயும் உறங்கியிருந்த தமிழின் சிறிய நாணயக்குற்றியே வட இந்தியாவின் மொத்த வரலாற்றை ஒரே இரவில் 2300 ஆண்டுகள் பின்னோக்கிக்கொண்டு சென்றது என்றால் மீதமாய் புதைந்து கிடக்கும் ழகரங்கள் உலகவரலாற்றை இன்னும் எத்தனை ஆண்டுகள் பின்னோக்கி கொண்டுசெல்லப்போகிறது என்பதே இன்றைய கேள்வி....

எத்தனை எத்தனையோ மொழிகள் இருந்தாலும் "இயற்கையின் மொழி" என்ற சொல்லிற்கு முற்றிலும் பொருத்தமான மொழி தமிழே. ஒவ்வொரு சின்னச்சின்ன விஷயத்தையும் இயற்கையோடு பின்னிப்பிணைக்கப்பட்ட மொழிவரி வடிவமாய் இன்றும் மிளிர்ந்துகொண்டிருக்கிறது தமிழ். இந்த புள்ளிகளில் ழகரத்தின் பங்களிப்புக்கள் அளப்பரியது.

சிறிய உதாரணம் ஒன்று என்னவெனில், உடலியல் தொழிற்பாடுகளில் மூன்றாவது கண் என வர்ணிக்கப்படும் ஒரு அங்கமே மனிதமூளையில் காணப்படும் பீனியல் சுரப்பி. இதனது உடலியல்சார் தொழிற்பாடுகள் மிக முக்கியமானவை. பெண்களின் உடலியல் சார் தனித்துவங்களாயினும் சரி ஆண்களின் உற்சாகங்களிலாயினும் சரி இச்சுரப்பி பெரும் பங்காற்றுகின்றது. மேலும் சிறுகுழந்தைகளிலும் இச்சுரப்பியின் அளவுபெரியதாகவும் தொழிற்பாடு அதிகமாகவும் இருக்கும். பின் குழந்தை வளரும் போது இதன் பருமன் குறைவடையும். மேற்படி விடயங்களை அன்றே அறிந்தனர் எங்கள் இனம். குழந்தையிலேயே பீனியலை தூண்டுவதற்கான மருந்தை அவன் தன் வீரமொழியினுள் புதைத்தான்.... ஆங்கே உருவாகியது "ழ"..

நாக்கினை மேல் அண்ணத்துடன் முட்டும் படி மடித்து அடித்தொண்டையால் உருவாக்கப்படும் ழ உச்சரிப்பின் போது பீனியல் சுரப்பி தூண்டப்படுகின்றது. குழந்தைகள் அதிகமாக ழ உச்சரிக்கும் போது இன்னும் அதிகமாக சுரப்பி தூண்டப்பட்டு பல உடலியல்சார் நன்மைகள் ஏற்படுகின்றது. இதுவே இயற்கையின் மொழியின் அணையில்லா ஆற்றல்...

பிறமொழி இனங்களிலிருந்து தனித்துவமாகவும் அவ்வளவு அறிவாற்றலுடைய படைப்புக்களுக்கு உரித்துடையதாகவும் எட்டியும் பிடிக்கமுடியாத நிலையில் ஆதித்தமிழினம் இருந்தமையின் பின்னணி தமிழிலே மாத்திரம் இருந்த இந்த ழகரம் பீனியல் சுரப்பியை அடிக்கடி தூண்டிக்கொண்டு இருந்தமையே என்பது எனது தனிப்பட்ட கருத்து... ஏனெனில் பிறமொழிகளில் ழகரம் இல்லை. மேலும் இன்றைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்சமூகத்தின் பின்னடைவிற்கும் காரணம் சரியாக உச்சரிக்கப்படாத ழகரமாகவும் இருக்கலாம்......

ஆதித்தமிழன் ஒவ்வொரு சிறிய சிறிய நடைமுறைச்சொற்களிலும் ழகரத்தைப் புதைத்தான்.

ஒழுக்கம் - ழகரம்

மழை - ழகரம்

உழவு - ழகரம்

வாழ்க்கை - ழகரம்

அழகு - ழகரம்

என வாழ்வின் அனைத்திலும் ழகரத்தை வைத்த தமிழனின் மொழி கூட ஒரு வைத்தியரே...

எங்காவது வைத்தியமொழி என்று கேள்விப்பட்டீர்களா?

நாங்கள் சொல்கிறோம் கேளுங்கள் எங்கள் மொழி வைத்தியமும் பார்க்கும்...

மேலும் வணிகமொழி ஆங்கிலம், சட்டமொழி இலத்தீன்

இசைமொழி கிரேக்கம் என வரலாறு பிரித்துக்கொண்டாலும் அனைத்து வகைகளையும் வாரிச்சுருட்டிய ஒரு ஆல்ரவுண்டராக இருக்கிறது எங்கள் தமிழ்மொழி......

எங்காவது

திருவள்ளுவரின் ஒரு திருக்குறள் இருக்கிறது

“யாழினிது குழலினிது என்பர் மழலைச்சொல் அறியாதவர்” இதில் ழகரத்தின் உண்மையான தார்ப்பரியத்தை திருவள்ளுவர் மறைமுகமாக வெளிப்படுத்தியிருக்கக்கூடும்......

இப்படியாக பல சினிமாப்பாடல்களும் ழகரத்தின் சிறப்புக்களை சுமந்திருந்த போதிலும் இன்றைய சமூகம் அதன் சிறப்புக்களைக் காணாது கடப்பது தான் வேதனைக்குரியது....

நான் நூல்களில் வாசித்த ஒரு விடயம் அமிழ்தினும் இனியது தமிழ் எனும் ஒரு வசனம் உண்டு. எங்கே நீங்கள் அமிழ் எனும் சொல்லை விடாது திரும்ப திரும்ப கூறிப்பாருங்கள் .....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது ஆங்கே தமிழாகச்சென்று முடியும். இதுதான் தமிழும் ஆயுளைக்கூட்டும் ஒரு மருந்தே. அதிலும் குறிப்பாக அந்த ழகரம்.......

ஒரு நிமிடத்தில் 15 மூச்சுவிடும் மனிதன் ஒரு மணித்தியாலத்தில் 900 மூச்சும் ஒரு நாளில் 21600 மூச்சும் விடுகின்றான்.... இதை அன்றே கண்டறிந்த தமிழினம் பூச்சியத்தின் பெறுமதிகளை விலக்கி 216 எனும் எண்ணை தனது உயிர்மெய் எழுத்தின் எண்ணிக்கை ஆக்கிக்கொண்டான்.

சற்றுச் சிந்தியுங்கள்....

மொழிகளை இயற்கையோடு இணைத்த எம் இனத்தின் நுட்பத்தினை....

மேலும் நாம் விடும் மூச்சுக்களின் சராசரி எண்ணிக்கையை குறைத்துக்கொண்டால் மனித ஆயுள் கூடும். இது விஞ்ஞானமாக ழகரத்தினை நாம் அதிகமாக உச்சரித்தால் நாம் விடும் மூச்சுக்களின் எண்ணிக்கை குறையும் என்பதை அறிந்து அதிக சொற்களில் ழகரத்தைப் பயன்படுத்தி தன் இனத்தின் காலச் சக்கரத்தை ழகரத்தை பயன்படுத்தி பின்னோக்கிச் சுழற்றினான் ஆதித்தமிழன்....

ஆக ழகரம் என்பதை ஒரு எழுத்தாக மாத்திரமே தெரிந்த எமக்கு அதன் உண்மைப்பிரம்மியங்கள் தெரியவில்லை. வரலாற்றில் அதியுச்ச ஆளுமைகள் எல்லாம் ஏதோ சம்மந்தமே இல்லாதது போலவே வெளிப்பார்வைக்கு தெரியும். அதனுள்ளே உறங்கும் பிரகாசங்கள் ஏராளம்.

அப்படி ஒன்றே இந்த ழகரம்..........

உலகில் அதிக மக்களால் பேசப்படும் சீனமொழி பல கிளைகளாக பிரிந்துவிட்டது. ஆனால் குமரிக் கண்டத்தில் தொடங்கிய எங்கள் மொழி இன்றளவும் கிளைகளாகவில்லையெனில் சற்றே யோசித்துப்பாருங்கள் அதன் அடித்தளத்தின் பிரம்மிப்பினை..........

இதயத்தால் பேசி இதயத்தால் உணரப்படும் எங்கள் தமிழ் என்பது பெரும் வரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப பாவனையினால் ஏற்படும் விளைவுகளும் பாதுகாப்பு பொறிமுறைகளும்

சி.ஶ்ரீகாந்த்
ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகம்.
உதவி விரிவுரையாளர்

இன்றைய மானுட வாழ்வுதனில் பண்பட்ட வளர்ச்சியினை ஏற்படுத்தும் துறைகளில் கணினியோடு இணைந்த தொழிநுட்பங்களின் வகிபாகமானது இன்றியமையாததாகும். இவை சாதாரண மனித செயற்பாடுகள் முதல் சர்வதேச செயற்பாடுகள் வரை தனது ஆதிக்கத்தினை செலுத்துகின்றன. இன்றைய மனிதன் தமக்கான எல்லைகளினை கடந்து தகவல்களினை பெற்றுக்கொள்ளவும், வளங்களினை பகிர்ந்துகொள்ளவும், பாதுகாப்பினை மேம்படுத்தவும், புத்துருவாக்க சிந்தனைகளினை விருத்தி செய்து அத்துறையில் வினைத்திறன்மிக்க செயற்பாடுகளினை மேற்கொள்ளவும் கணினி மற்றும் பிற தொழிநுட்பங்களின் பயன்பாடானது முக்கியத்துவம் பெறுகின்றமை இலங்கைக்கும் ஏற்புடையதே. இத்தொழிநுட்ப வளங்களிலும் வளர்ச்சியிலும் மேலைத்தேய நாடுகள் முன்நிலை வகிப்பதோடு, வளர்ச்சியடைந்து வருகின்ற நாடுகளாக மூன்றாம் உலக நாடுகளும் காணப்படுகின்றன. இந்நிலைமையில் இந்நாடுகளில் காணப்படுகின்ற தொழிநுட்ப வளர்ச்சி, தேவைப்பாடுகள், தொழிநுட்ப பாவனையினால் மனித வாழ்வில் ஏற்படுகின்ற நேர் மற்றும் எதிர்மறையான விளைவுகள் போன்ற பல விடயங்களினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பிடுகின்ற பொழுதே எதிர்காலத்தில் தொழிநுட்பங்களினூடே நிலைப்பேண்தகு வளர்ச்சியினை ஏற்படுத்த முடிவதோடு இத்தொழிநுட்பங்களினால் ஏற்படும் பாதகமான விளைவுகளினை கட்டுப்படுத்தவும் முடியும். ஆகவே, இத்துறை குறித்து ஆய்வுகளினை மேற்கொள்வதானது காலத்தின் தேவையாகும்.

இலங்கையில் 22.18 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இவர்களுள் சராசரியாக, 48.42% ஆண்களும் 51.58% பெண்களும் உள்ளடங்குவதோடு 18.8% நகரத்திலும் கிராமம் மற்றும் தோட்டங்களில் 81.2% வீதமானவர்களும் வசிக்கின்றனர் (மத்திய வங்கி ஆண்டறிக்கை, 2022). கணினி அறிவு தொடர்பில் சர்வதேச ரீதியில் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்ற நிலையில் இலங்கையிலும், புத்திஜீவிகள் மற்றும் சில நிறுவனங்களால் கடந்த காலங்களில் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை தொகைமதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் 2004ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை சராசரியாக 25,000 வீட்டு அலகுகளையும் 5-69 வயதிற்கு இடைப்பட்ட நபர்களையும் மாதிரிகளாகக் (Samples) கொண்டு ஆய்வு செய்யப்படுகின்றன.


இவ் ஆய்வுகளின்படி, கணினி அறிவு (Computer Literacy) என்பது, 5 வருடங்கள் தொடக்கம் 69 வருடங்கள் வரையிலான வயதினை கொண்டவர்களில் ஒரு நபர் தனக்கென சொந்தமான ஒரு கணினியை கொண்டிருப்பதோடு அதனை பயன்படுத்துபவராயின் அந்நபர் கணினி அறிவுடைய நபராக கருதப்படுவார். உதாரணமாக, பத்து வயதினையுடைய ஒரு குழந்தை தனக்குரிய கணினியில் கணினி விளையாட்டுக்களில் ஈடுபடுமாயின் அக்குழந்தை கணினியறிவுடையதாக கருதப்படும். அந்தவகையில் 65 வயது நிரம்பிய வயோதிபர் ஒருவர் தனது கணினியின் மூலம் முகநூல் பாவிப்பாராயின் அவர் கணினியறிவுடையவராக கருதப்படுவார். மொத்த சனத்தொகையில் கணினி அறிவுடைய சனத்தொகையின் எண்ணிக்கையினை சதவீதமாக கணிப்பிடுதல் கணினி அறிவு வீதம் எனப்படும். இலக்கமுறை அறிவு (இலத்திரனியல் அறிவு - Digital Literacy) என்பது ஒரு குறித்த நபர் (5-69 வயது) தனக்கென சொந்தமான ஒரு கணினியை (Computer), மடிக்கணினி (Laptop), கைக்கணினி (Tablet) அல்லது திறன்பேசியை (Smartphone) கொண்டிருப்பதோடு அதனை பயன்படுத்துபவராயின் அந்நபர் இலக்கமுறை அறிவுடைய நபராக கருதப்படுவார். மொத்த சனத்தொகையில் இலக்கமுறை (இலத்திரனியல் அல்லது டிஜிட்டல்) அறிவுடைய சனத்தொகையின் எண்ணிக்கையினை சதவீதமாக கணிப்பிடுதல் இலக்கமுறை அறிவு வீதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்படும் (கணினியறிவு வருடாந்த அறிக்கை 2021, இலங்கை தொகைமதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், இலங்கை).

இலங்கையில் 2001ஆம் ஆண்டுக்கு முன்னர் கணினி அறிவு வீதம் ஏறக்குறைய 6.0 வீதத்திற்கும் குறைவாக காணப்பட்டுள்ளதோடு, 2021ஆம் ஆண்டில் இலங்கையில் கணினி அறிவு 34.3% வீதமாக காணப்படுகின்றது. இது ஏனைய உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் கணினி மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப விடயங்கள் பின்னடைவிலேயே இருக்கின்றமையினை அடையாளப்படுத்துகின்றது.

வரைபடம் 01: இலங்கையில் கணினி அறிவின் நிலைமை




*Source: கணினியறிவு வருடார்ந்த அறிக்கைகள் - DCS*

துறைகளின் அடிப்படையில் அவதானிக்கின்றபொழுது, நகர்த்துறையில் கணினியறிவு அதிகமாகவும் கிராமப்புறங்களில் குறைவாகவும், பெருந்தோட்டப்புறங்களில் மிகவும் குறைவாகவும் காணப்படுகின்றதோடு அதன் வளரச்சிப்போக்கிலும் முன்னேற்றமின்மையையே அறியமுடிகின்றது. 2021ஆம் ஆண்டின் தரவுகளின்படி, பத்து நபர்களுக்கு நகர்புறங்களில் (49%) ஐவரிடமும் கிராமப்புறங்களில் (32.3%) மூன்றுக்கு மேற்பட்டவர்களிடமும் பெருந்தோட்டப்புறங்களில் (13.9%) இரண்டு நபர்களிற்கும் குறைவானவர்களிடமுமே கணினியறிவு காணப்படுகின்றது.

இலங்கையில் கணினியறிவு வீதத்தை விட இலத்திரனியல் அறிவு வீதம் அதிகரித்தே காணப்படுகின்றது. இதற்கு, தனிப்பட்ட கணினியிலிருந்து திறன்பேசி அல்லது கைக்கணினி பாவனையில் ஏற்பட்ட வளர்ச்சியே காரணமாகும். 2016ஆம் ஆண்டிலிருந்து 2021 வரையில் கணினியறிவின் வளர்ச்சி 6.7 வீதத்தால் அதிகரித்துள்ள அதேவேளை இலத்திரனியல் அறிவானது 23.4 வீதத்தால் அதிகரித்துள்ளது. கடந்த வருடங்களில் கணினியறிவை விட இலத்திரனியல் அறிவானது நான்குமடங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்துள்ளது. இது கணினி பாவனையில் ஏற்படும் அதிகரிப்பை விட திறன்பேசி/கைக்கணினி பாவனையில் ஏற்படும் அதிகரிப்பு உயர்வடைந்துள்ளதை வெளிக்காட்டுகின்றது. அதாவது, 2021ஆம் ஆண்டு 100 நபர்களில் நகரத்தில் 72 நபர்களுக்கும், கிராமத்தில் 55 நபர்களுக்கும் பெருந்தோட்டங்களில் 38 நபர்களுக்கும் இலத்திரனியல் அறிவு காணப்படுவதானது திறன்பேசி/கைக்கணினிகளின் பாவனையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பினை பிரதிபலிக்கின்றது.

இலங்கையில் கணினியை கொண்டுள்ள வீட்டுத்துறையினரின் எண்ணிக்கையானது 2004ஆம் ஆண்டளவில் 3.8% ஆகவும் 2021ஆம் ஆண்டு 22.9% ஆகவும் அதிகரித்துள்ளது. இலங்கையில் 100 வீடுகளுக்கு 2004இல் நான்கு வீடுகளிலும் 2021இல் 23 வீடுகளிலும் மாத்திரமே கணினிகள் காணப்பட்டுள்ளன. கடந்த 15 வருடங்களில் கணினி அல்லது மடிக்கணினியை கொண்ட வீட்டு அலகுகளின் எண்ணிக்கை 19.1% ஆல் மாத்திரமே அதிகரித்துள்ளது. மாகாணங்களின் அடிப்படையில் 100 வீடுகளுக்கு மேல் மாகாணத்தில் 36 வீடுகளிலும் ஏனைய மாகாணங்களில் 20 வீடுகளுக்கும் குறைவாகவும், ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் மிக குறைவான வீடுகளிலேயே கணினிகள் காணப்படுகின்றன. துறைகளின் அடிப்படையில் கணினியைக் கொண்டுள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை மற்றும் வளர்ச்சிப் போக்கினை வரைபடம் 2 குறிப்பிடுகின்றது.

வரைபடம் 02: இலங்கையில் கணினி அல்லது மடிக்கணினியை சொந்தமாக கொண்டுள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை




*Source*: கணினியறிவு வருடாந்த அறிக்கைகள் - *DCS*

துறைகளின் ரீதியில் அவதானிக்கையில் ஏனைய துறைகளினை விட நகரத்துறையில் கணினிகளை கொண்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுவதோடு 2021ஆம் ஆண்டு 38.3% ஆகவும் கிராமங்களில் 20.7% ஆகவும், தோட்டங்களில் மிக குறைவாக 4.1 வீதமாகவும் பதிவாகியுள்ளது. இதன்படி 2021ஆம் ஆண்டு நகரத்தில் ஐந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகளுக்கு இரண்டு வீட்டிலும், கிராமங்களில் ஐந்து வீடுகளுக்கு ஒரு வீட்டிலும் தோட்டங்களில் இருபது வீடுகளுக்கு ஒரு வீட்டிலும் மாத்திரமே கணினிகள் காணப்படுகின்றன.

தகவல் தொழிநுட்பம், இணையம் மற்றும் மின்னஞ்சல் பாவனையானது இன்று உலகளவில் மிக விரைவாக ஒருவரை ஒருவர் தொடர்பு கொள்ளவும் தகவல்களினை பரிமாறிக்கொள்ளவும் உதவுகின்றது. இதனால் உலகத்தில் காணப்படுகின்ற பல்வேறு துறைசார்ந்த தகவல்களினை அறிந்துகொள்ளவும் இவற்றினூடே தமது அறிவினை விருத்திசெய்து கொள்ளவும் முடிகின்றது. இ-கல்வி, இ-வணிகம், இ-மருத்துவம், இ-பொருளாதாரம், இ-விவசாயம் மற்றும் பிற துறைகளும் இணையத்தினால் புதிய தொழிநுட்பங்களினை உள்வாங்கி முன்னேற்றமடைந்து வருகின்றன. இத்துறைகளின் சேவைகளினை இணையமே எல்லையற்று மனிதனின் கைகளிற்கு கொண்டு சேர்க்கின்றது.

நடைமுறை உலகில் காணப்படுகின்ற முக்கிய பிரச்சினைகளான வேலையின்மை, போக்குவரத்து நெரிசல், சூழல் மாசடைவு, காலநிலை மாற்றம், இயற்கை அனர்த்தங்கள் உள்ளிட்ட பல்வேறு சவால்களினை வெற்றிகொள்ளவும் அவற்றினுடைய தகவல்களினை உடனுக்குடன் அறியத்தருவதிலும் இணையம் முக்கிய பங்காற்றுகின்றது. மின்னஞ்சல் முறைமை இன்று ஒரு பாதுகாப்பான மற்றும் அதிகாரபூர்வமான தகவல் பரிமாற்று முறைமையாக மாற்றமடைந்துள்ளது. இதனால் தனிநபர் முதல் ஒரு நாட்டினுடைய அரசாங்கம் வரை தனித்துவமான மின்னஞ்சல் முகவரியினை பயன்படுத்துவதோடு தகவல்களினை பாதுகாப்பான முறையில் பரிமாற்றவும் முனைகின்றன. இலங்கையில் இணையம் மற்றும் மின்னஞ்சல் பாவனையினை நோக்குகின்றபொழுது, 2021ஆம் ஆண்டு வருடத்திற்கு ஒரு தடவையேனும் இணையத்தினையும் மின்னஞ்சலினையும் பயன்படுத்தியவர்களின் எண்ணிக்கையானது, முறையே 44.5% மற்றும் 17.8% ஆக பதிவாகியுள்ளது. துறைகளின் அடிப்படையில் நோக்கும் போது, நகரத்துறையிலே அதிகளவாக இணையமும் (2021- 61.2%) மின்னஞ்சலும் (2021 - 30.3%) பயன்படுத்தப்படுவதோடு ஏனைய துறைகளில் மிக குறைவாகவே பயன்படுத்தப்படுகின்றது. 2021ஆம் ஆண்டின் படி குறிப்பாக தோட்டப்புறங்களில் 100 நபர்களில் 26 பேர் இணையமும் 4 நபர்கள் மின்னஞ்சலும் பயன்படுத்துவதோடு கிராமப்புறங்களில் 100 நபர்களில் 42 பேர் இணையமும் 16 நபர்கள் மின்னஞ்சலும் பயன்படுத்துகின்றனர். இவர்களில், இணையம் மற்றும் மின்னஞ்சலை பயன்படுத்திய 100 நபர்களில் 77 பேர் திறன்பேசி மூலமும் 20 பேர் கணினி/ மடிக்கணினி மூலமும் இரண்டு நபர்களிலும் குறைவானவர்கள் கைக்கணினி மற்றும் சாதாரண


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசி மூலமும் இணையத்தினை பயன்படுத்துகின்றனர். இதற்கு நடைமுறையில் அதிகளவானோர் திறன்பேசிகளை பயன்படுத்துவதோடு சமூக ஊடக பாவனைக்காக இணையத்தினை பயன்படுத்துவதும் காரணமாகும்.

இலங்கையில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப வீழ்ச்சியில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளாக, பெருந்தோட்ட மற்றும் கிராமியத்துறைகளில் காணப்படும் பாரிய பின்னடைவுகள், கணினி உட்பட்ட தொழிநுட்ப சாதனங்களின் விலை உயர்வாக காணப்படுதல், கல்வி மற்றும் ஆங்கிலமொழி அறிவில் காணப்படும் பின்னடைவுகள், சுயகற்றலில் முன்னேற்றமிருந்தும் அதற்கான வாய்ப்பு மற்றும் வளங்களின் பற்றாக்குறை, கைக்தொழில் மற்றும் சேவைத்துறைகள் போதியளவு கணினிமயப்படுத்தப்படாமை, தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தை மேம்படுத்துவதற்கான போதியளவு உட்கட்டமைப்பு வசதிகளின்மை, பாடசாலைகளில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பாடத்தை முக்கியத்துவப்படுத்தாமை, தொழிநுட்பங்களினை நோக்கிய அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்களின் பற்றாக்குறை, சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் திட்டங்களில் போதியளவு தொழிநுட்ப விடயங்கள் உள்வாங்கப்படாமை போன்றனவற்றை குறிப்பிடலாம்.

நவீன தொழிநுட்பங்களினூடே பல்வேறு வளர்ச்சிகளை நோக்கி நகர்கின்றபொழுதிலும் இத் தொழிநுட்பங்கள், இணையம் மற்றும் மின்னஞ்சல் பாவனையினூடே ஏற்படுகின்ற பாதகமான தாக்கம் மற்றும் பிற விடயங்களினையும் தவிர்க்க முடியாதுள்ளது. குறிப்பாக, போலியான தகவல்களின் பரிமாற்றம் மற்றும் நம்பகமற்ற தரவுகள், இணையத்திருட்டு ஊடாக தனிநபர் முதல் அரசாங்கத்தினுடைய தகவல்கள் மற்றும் பிற வளங்கள் கொள்ளையடிக்கப்படுதல் மற்றும் ஏமாற்றப்படுதல், இணையவசதியிற்கு தேவையான அடிப்படை வசதிகளற்ற பிரதேசங்களில் பாரிய பின்னடைவு மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுதல், இணையம் மற்றும் மின்னஞ்சல் சேவைக்கான கட்டணங்கள் அதிகரித்துக்கொண்டு செல்லுதல், கலாசாரம் மற்றும் தனிமனித ஒழுக்கவியல் சீர்குலைதல், இணையத்தினை அடிப்படையாக கொண்ட கணினி விளையாட்டு, இலத்திரனியல் சமூக ஊடக பாவனை போன்றவிடயங்களுக்கு குழந்தைகள் மற்றும் பிற நபர்கள் அடிமையாகுதல் போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

தகவல் தொழிநுட்ப வளர்ச்சி, இணையத்தளம் மற்றும் சமூக ஊடகங்களின் பாவனையானது பல்வேறு துறைசார்ந்த நன்மைகளினையும் வளர்ச்சியினையும் ஏற்படுத்துவதாக இருப்பினும் பல்வேறு எதிர்மறையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கங்களும் ஏற்பட வழிசெய்கின்றன. அவற்றினை பொதுவாக பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- தீங்கான மென்பொருள் மற்றும் தொழிநுட்பங்கள்
- சூழல் மாசடைவு
- சமூகப் பிரச்சினைகள்
- விழுமியப் பிரச்சினைகள்
- சட்டப் பிரச்சினைகள்
- உடலியற் பாதிப்புகள்
- பௌதீக பிரச்சினைகள்

இத்தொழிநுட்ப மற்றும் இணையப்பாவனையினால் ஏற்படும் பாதிப்புகளிற்கு உதாரணமாக, இலங்கையின் தேசிய கணினி அவசர தயார்நிலை குழுவின் (CERT) ஒருங்கிணைப்பு நிறுவனத்தினுடைய வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் தரவுகளின்படி பின்வரும் தாக்கங்களினை அடையாளப்படுத்த முடியும்.

வரைபடம் 03: இலங்கையில் தொழிநுட்ப பாவனையினூடே ஏற்பட்ட முறைகேடான சம்பவங்கள்





*Source: CERT - நிறுவனம், வருடார்ந்த அறிக்கைகள்*

இலங்கையில் 2010-2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் CERT நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட முறைகேடான சம்பவங்களினை அவதானிக்கின்றபொழுது, 2010ஆம் ஆண்டு 151 முறைப்பாடுகளும் 2020 ஆம் ஆண்டு 16,376 சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இந்த முறைப்பாடுகள் 2019ஆம் ஆண்டிற்கு பின்னர் தொடர்ச்சியாக அதிகரித்துவருகின்ற தன்மையே காணப்படுகின்றது. முக்கியமாக அதிகாரமற்ற நிலையில் தகவல்களினை அணுகுதல் மற்றும் மாற்றங்களினை மேற்கொள்ளுதலுடன் தொடர்புடைய முறைப்பாடுகள் முறையே 2017-803, 2018-693, 2019-715 மற்றும் 2020ஆம் ஆண்டு 1115 ஆக அதிகரித்துள்ளது. மேலும், சமூக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகப் பாவனையினால் ஏற்பட்டுள்ள முறைகேடான சம்பவங்கள் அதிகரித்து செல்வதனை பின்வரும் வரைபடம் காட்டுகின்றது.


வரைபடம் 04: இலத்திரனியல் சமூக ஊடக பாவனையினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள்




*Source: CERT - நிறுவனம், வருடார்ந்த அறிக்கைகள்*

2021 இன்படி, சமூக ஊடகத்தின் முறைகேடான பாவனை தொடர்பில் மாதாந்தம் சராசரியாக 1000 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதற்கு கொவிட்-19 தொற்றின் முடக்க நிலைமை காரணமாக சமூக ஊடகப்பாவனையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பும் ஒரு பிரதான காரணமாகும். கடந்த காலங்களில் துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தல்களுடன் (Cyber Harassment) தொடர்புடைய சம்பவங்களின் எண்ணிக்கையினை பின்வரும் வரைபடம் தெளிவாக காட்டுகின்றது.

வரைபடம் 05 : கணினி தொழிநுட்ப பாவனையினால் ஏற்பட்டுள்ள பிரதான பிரச்சினைகள்




*Source: CERT - நிறுவனம், வருடார்ந்த அறிக்கைகள்*

2017-2020 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் பிரதானமாக முகநூல் போன்ற போலியான கணக்குகளின் எண்ணிக்கை மற்றும் சிறுவர், பாலியல், வன்முறைகளுடன் தொடர்புடைய சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு வினைத்திறனான நடவடிக்கைகளின் மூலம் குறைவடைந்து செல்கின்றமையினையும் அவதானிக்க முடிகின்றதோடு பெரும்பாலான குற்றங்களை வெளிக்கொணராத நிலைமையும் காணப்படுகின்றது. பின்வரும் அட்டவணையானது 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கையின் அதிகரித்த தன்மையினை காட்டுகின்றது.

அட்டவணை 01 : CERT நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் 2019-2020

| Incident Type | No of Incidents 2019 | No of Incidents 2020 |
|---|---|---|
| DDOS | 2 | 1 |
| Ransomware | 6 | 24 |
| Abuse/Hate/Privacy violation | 307 | 70 |
| Malicious Software issues | 8 | 9 |
| Phone Hacking | 1 | 6 |
| Scams | 5 | 157 |
| Phishing | 5 | 17 |
| Website Compromise | 175 | 85 |
| Financial/Email frauds | 7 | 57 |
| Intellectual property violation | 1 | 1 |
| Server Compromised | 2 | 6 |
| Social media | 2662 | 15895 |
| Other | 364 | 48 |
| ***Total*** | ***3,545*** | ***16,376*** |

*Source: CERT - நிறுவனம், வருடாந்த அறிக்கை - 2020*

2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020ஆம் ஆண்டு சமூக ஊடகங்களில் முறைகேடான சம்பவங்கள் ஐந்து மடங்காக (2019-3545, 2020-16376) அதிகரித்துள்ளதோடு பொதுவான மோசடிகள் (157), நிதி.·.மின்னஞ்சல் மோசடிகள் (57) என்பனவும் அதிகரித்துள்ளன. அதேவேளையில் துஷ்பிரயோகம்/வெறுப்பு/இரகசியத்தன்மை மீறல்கள் மற்றும் வலைத்தள முறைப்பாடுகள் என்பன 2019ஐ விட 2020ஆம் ஆண்டு குறைவடைந்திருப்பினும் ஒட்டுமொத்தமாக அவதானிக்கின்ற பொழுது தகவல் தொழிநுட்பங்களின் வளர்ச்சி மற்றும் இலத்திரனியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயமாக்கத்தினால் ஏற்படும் எதிர்விளைவுகள் அதிகரித்து செல்கின்றமையையே தரவுகள் தெளிவூட்டுகின்றன.

நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளுக்கான இன்றைய உலக நகர்வுகளில் இலங்கை கணினியையும் தொடர்பாடல் தொழிநுட்பங்களையும் அபிவிருத்தி செய்வதானது சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் செயற்றிறனான வளர்ச்சிக்கு வழிவகுப்பதோடு கொவிட்-19 போன்ற முடக்கமான சூழ்நிலைகளில் வீட்டிலிருந்தே தமது செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்து செல்லவும் வழிவகுக்கும். அதேநேரத்தில், தொடர்பாடல் தொழிநுட்ப வளர்ச்சியை நோக்கிய நகர்வுகளில் ஏற்படுகின்ற எதிர்விளைவுகளை கட்டுப்படுத்த சிறந்த சட்ட நடைமுறைகள், கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு பொறிமுறைகளினை வினைத்திறனாக்குவதும் இன்றியமையாததோடு இது அரசாங்கம் மற்றும் தனிநபரிற்குரிய கடமையுமாகும்.

**தகவல் தொழிநுட்ப மற்றும் இணையத்தள பாவனையினால் ஏற்படும் விளைவுகளை தடுப்பதற்கான அல்லது கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள்.**

- கணினி மற்றும் ஏனைய தொழிநுட்பங்களில் நச்சுப்பொருள் (வைரஸ்) தாக்குதல்களுக்கு உள்ளாகாத வகையில் பாதுகாப்பான நடவடிக்கைகளினை பின்பற்ற வேண்டும். உதாரணமாக வைரஸ் தடுப்பு மென்பொருள்களினை நிறுவுதல், தீச்சுவர் பயன்பாடு, பாதுகாப்பான வலைத்தள சேவையை அணுகுதல் போன்றனவற்றை குறிப்பிடலாம்.
- கணினி மற்றும் இணைய தொழிநுட்பங்களின் பாதுகாப்பான பயன்பாடுகள் தொடர்பாக பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் மற்றும் சமூக மட்டங்களில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளினை மேற்கொள்ள வேண்டும்.
- மின்னஞ்சல் முகவரி கடவுச்சொல், வங்கிக் கணக்கு உள்ளிட்ட ஏனைய தனிநபர் தொடர்பான விடயங்களினை இரகசியமாக பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மின்னஞ்சல் முகவரியினை பாதுகாப்பற்ற வலைத்தளங்களிற்கும் செயலிகளிற்கும் உள்ளிடுவதனை தவிர்த்தல் வேண்டும். சட்டரீதியாக அனுமதியற்ற மென்பொருள்கள் (Software) மற்றும் தொலைபேசி செயலிகளினை (Mobile App) தரவிறக்கம் செய்வதனை தவிர்த்தல் வேண்டும். அவ்வாறில்லையெனின், அவற்றினை நிறுவுகின்ற போதும் பயன்படுத்துகின்ற போதும் இரகசியமான தகவல்களினை உள்ளீடு செய்வதனை தவிர்த்தல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாதுகாப்பற்ற வகையில் இணையத்தள சேவைகளை அணுகுதல் மற்றும் நிகழ்நிலை கொடுக்கல் வாங்கல்களினை மேற்கொள்ளல் போன்றனவற்றை தவிர்த்தல் வேண்டும்.
- சமூக ஊடகப்பாவனை தொடர்பில் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும். குறிப்பாக, இரகசிய தகவல்களினை பகிர்ந்துகொள்ளுதல், தெரியாத நபர்களுடன் மிகவும் நெருக்கமாக தொடர்பாடுதல் போன்றனவற்றையும் தவிர்த்தல் வேண்டும்.
- குழந்தைகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஏனையவர்கள் கணினி விளையாட்டுக்கள், சமூக ஊடகப்பாவனை போன்றனவற்றில் அதிகளவு நேரத்தினை செலவிடுவதனால் அடிமையாகும் நிலைமை காணப்படுகின்றது. இதனால் அவர்களது கல்வி நிலைமை பாதிப்படைவதோடு உளவியல் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. ஆகையால், தொலைபேசி, கணினி, இணையம் போன்ற தொழிநுட்பங்களினை பயன்படுத்தும் போதும் சமூக ஊடக பாவனையின் போதும் சுய கட்டுப்பாடுகள் மற்றும் நேர வரையறைகளினை பின்பற்ற வேண்டும்.
- குழந்தைகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் இவற்றினை பயன்படுத்தும் போது பெற்றோர்கள், ஆசிரியர்கள், உறவினர்கள் அவற்றினை கண்காணிக்க வேண்டும். கணினிகளை வெளிப்படையான இடங்களில் வைத்து முறையான வழியில் பயன்படுத்த வேண்டும். தொலைபேசி பாவனைகளினை தேவைகளுக்கு மாத்திரம் வழங்குவதோடு இணையத்தளம் மற்றும் சமூக ஊடகப்பாவனை விடயங்களில் தொடர்ச்சியாக இவர்களினை கண்காணிக்க வேண்டும்.
- அரசாங்கத்தினால், தொழிநுட்பத்தினை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்படும் குற்றங்களினை தடுப்பதற்கான சிறந்த சட்டங்களோடு தகுந்த தண்டனைகளினை விதிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முறைப்பாடுகளை தெரிவிப்பதற்கான வழிமுறைகள்

- சமூக ஊடகப்பாவனை, இணையத்தளங்களினூடே ஏதேனும் பாதிப்புகள் ஏற்பட்டால் உடனடியாக தொடர்புடைய நிறுவனம் மற்றும் பொலிஸ் பிரிவிற்கு அறிவிக்க வேண்டும். இலங்கையில் இணைய மற்றும் சமூக ஊடகப்பாவனையினால் ஏற்படும் மோசடிகள் உள்ளிட்ட பாதிப்புகளினை முறையீடு செய்வதற்காகவும் வினைத்திறனான நடவடிக்கைகளினை மேற்கொள்ளவும் இலங்கையில் பல்வேறு நிறுவனங்கள் செயலாற்றுகின்றன. உதாரணமாக, பின்வரும் நிறுவனங்களினை குறிப்பிடலாம்.
  - Institutions for Information Security of Sri Lanka
  - Information and Communication Technology Agency - ICTA
  - Sri Lanka Computer Emergency Readiness Team - CERT
- இலங்கையில் பின்வரும் உத்தியோகபூர்வ இணையத்தளங்களினூடாக கணினி தொடர்பான தகவல்களினையும் சேவைகளினையும் பெற்றுக்கொள்ள முடியும்.
  - http://www.gov.lk/web
  - http://www.engage.icta.lk
  - https://www.techcert.lk/si
- சமூக ஊடக பாவனையுடன் தொடர்புடைய விடயங்களினை தொலைபேசி அழைப்பினூடாக முறையிடுவதற்கும் உடனடியாக தொழிநுட்பம் சார்ந்த தீர்வினை பெற்றுக்கொள்வதற்கும் CERT நிறுவனத்தின் உதவியுடன் முகவர் நிலையம் ஒன்று புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் நிறுவனத்திற்கு நேரடியாக செல்லாமல் தொலைபேசி அழைப்பினூடாக அல்லது மின்னஞ்சல் முறைமையினூடாக முறைப்பாடுகளினை தெரிவிக்க முடியும். (அரச விடுமுறை தவிர்ந்த வாரநாட்களில் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணிவரையில் தொடர்பு கொள்ள முடியும்).
  - njhiyNgrp ,y : 011 2691692
  - kpd;dQ;ry; Kftup :report@cert.gov.lk
  - ,izaj;jsk; :https://www.onlinesafety.lk
- சமூக ஊடக பாவனையுடன் தொடர்புடைய விடயங்களுக்கான சட்ட ரீதியிலான ஆலோசனைகளினையும் உதவிகளினையும் பெற்றுக்கொள்ள குற்றப்புலனாய்வு துறையின் "இணைய குற்றப்புலனாய்வு பிரிவை" (Cyber Crime Investigation Division of the Criminal Investigation Department) தொடர்புகொள்ள முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தொலைபேசி இல :011-2432746 / 011 - 2337432
- மின்னஞ்சல் முகவரி : report@cid.police.gov.lk / socialmedia@cid.police.gov.lk

**References**


Anura Dissanayake, *ICT IN EDUCATION IN SRI LANKA*, Secondary Education Modernization Project, Ministry of Education, Sri Lanka.

Central Bank, Sri Lanka. (2023). *Annual Report* – 2022.

Chandima H. de Silva (2009), *ICT Curriculum in Sri Lankan Schools: A Critical Review*, Conference ICL, Austria.

Computer Literacy Statistics (2014-2020), Dept. of Census and Statistics, Sri Lanka.

CSUB, *Computer Literacy and Information Competency*. 1998, California State University at Bakersfield Information Competency Committee.

Department of Census and Statistics - Sri Lanka. (2008). *Household computer literacy survey of Sri Lanka: 2006-2007*. Colombo.

Department of Census and Statistics - Sri Lanka. (2019). *Sri Lanka Labour Force Survey Annual Report* – 2019.

Dr Sarath Dasanayaka, *Technology, poverty and the role of new technologies in eradication of poverty:* the case of sri lanka ,South Asia Conference on Technologies for Poverty Reduction, New Delhi, 10 – 11 October, 2003.

Halaris, A. and L. Sloan. *Towards a Definition of Computer Literacy for the Liberal Arts Environment*. In Technical Symposium on Computer Science Education. 1985, New Orleans.

Information and Communication Technology Agency of Sri Lanka. (2010). *ICT usage in government* survey.

Johnson, J.T. Goalsfor and Lessonsfrom *a Computer Literacy Course*. In Technical Symposium on Computer Science Education. 1987. St. Louis.

Koschmann T. *Medical education and computer literacy: learning about, though, and with computers*. Academic Medicine 1995; 70: 818–21.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nurit Zaidman, David G. Schwartz and Dov Te'eni (2008) *"Challenges to ICT implementation in multinationals"*, Vol. 1 No. 4, pp. 267-277, Emerald Group Publishing Limited.

Pádraig Wims and Mark Lawler (2007), *Investing in ICTs in educational institutions in developing countries: An evaluation of their impact in Kenya*, International Journal of Education and Development using Information and Communication Technology (IJEDICT), Vol. 3, Issue 1, pp.5-22.

Statistical overview report June-Q22021, TRCSL.

Y.V. Abeywickrama, S.Degamboda, K. Manchanayake (2020), Review Paper – Literature Research of Factors Limiting the Growth of Sri Lanka's ICT / BPM Industry, International Journal of Latest Engineering and Management Research (IJLEMR) ISSN: 2455-4847 www.ijlemr.com || Volume 05 - Issue 11 || November 2020 || PP. 01-10.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நறுமுகையே...

உ.ஷர்மினி
14ஆம் தலைமுறை
கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம்
கற்கைநெறி

தலைப்பை பார்த்தவுடன் பெரும்பாலும் அனைவருக்கும் 1997ஆம் அகவையில் வெளியான இருவர் எனும் படத்தில் இடம்பெற்ற, நறுமுகையே நறுமுகையே நீயொரு நாழிகை நில்லாய் எனும் பாடல் நினைவை எட்டி இருக்கும். கவிஞர் வைரமுத்து அவர்களின் வரிகளில் இசைப்புயல் ஏ.ஆர். ரகுமான் இசையமைக்க பாடகர் உன்னிகிருஷ்ணன் மற்றும் பாடகி பாம்பே ஜெயஸ்ரீ அவர்களின் குரல்களில் அமைந்த ஒரு உன்னதமான பாடல். நளின காந்தி ராகத்தில் பாடப்பட்ட இப்பாடல் பெயருக்கு ஏற்றாற் போல் நளினமானது. அனைவரும் கேட்டு ரசித்த இப்பாடலின் வரிகளில் இடம்பெறும் பல சொற்களின் உண்மை பொருளை இங்கு அறிந்தவர் சிலரே. அறிந்துக் கொள்ள முனைந்தவரும் சிலரே.

முதல் வரியின் முதல் சொல்லை தன்னுள் ஆழ்ந்த அர்த்தத்தை கொண்டுள்ளது. நறுமுகை என்றால் என்ன என்று பார்ப்பதற்கு முன் முற்குறிப்பாய் ஒரு விடயம் ஒரு பூவின் 7 படிநிலைகளாக அரும்பு, மொட்டு, முகை, மலர், அலர், வீ, செம்மல் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இதில் முகை என்பது மொட்டு பருவத்திற்கும் மலர் பருவத்திற்கும் இடைப்பட்டது.

நறுமணம் மிக்க புதிதாய் பூக்க தயாராக இருக்கும் நிலையே இது. ஆக இங்கு தலைவன் தலைவியை நறுமுகையே என்று விழிப்பதன் மூலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ந்த மலரை விட அழகான முகை போன்ற இளம் பெண்ணே என்று குறிப்பிடுகின்றார்.

தொடர்ந்து நாழிகை என்பது 24 நிமிடங்களை குறிக்கும். வரியினை கூறி பார்த்தால் தலைவன் தலைவியை ஓர் 24 நிமிடங்கள் பேசுவதற்காக நிற்க சொல்கின்றார். இவ்வரிகளில் மறைந்துள்ள ஓர் ஆச்சரியத்திற்குரிய விடயம், முகை என்கிற பருவத்திலிருந்து மலர் எனும் நிலைக்கு மாற தேவைப்படும் கால அளவும் 24 நிமிடங்களே ஆகும்.

பாடல் வரிகளில் கவிஞர் வைரமுத்து அவர்கள் புறநானூறு இலக்கியத்தில் 112 ஆவது பாடலாக வரும்.

"அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவின் எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர்கொளார் இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவின் வென்றெறி முரசின் வேந்தர் எம் குன்றும் கொண்டார்லாம் எந்தையும் இலமே....

எனும் பாடலின் முதல் வரியை பயன்படுத்தியுள்ளார்.

இப்பாடலானது புறநானூற்றில் வேள்பாரி மன்னனின் மகள்களான அங்கவை, சங்கவை இருவரும் அவர்களது தந்தையையும் நாட்டையும் மூவேந்தர்களிடம் போரில் இழந்ததை நினைத்து துயர்படுவதை விளக்குகிறது. இதில் அற்றைத்திங்கள் அவ் வெண்ணிலவில் என்பது, அன்றொரு நாள் "முழுமதி தினத்தன்று" என்று பொருள்படும். இத்திரைப்பட பாடல் வரியினை முழுதும் நோக்கும் போது,

"அற்றைத்திங்கள் அந்நிலவில் நெற்றித்தரல நீர்வடிய கொற்ற பொய்கை ஆடியவள் நீயா...." என்றமைகிறது.

அதாகப்பட்டது, அன்று ஒருநாள் முழு வெண்ணிலவின் ஒளியில் அரசனுக்கு சொந்தமான அரசனுடைய பொய்கைக் குளத்தில் நெற்றியில் முத்து போல நீர் வடிய நீராடிய பெண் நீயன்றோ? என தலைவன் தலைவியை பார்த்து வினவும் கோணத்தில் அமைந்துள்ளது.

தொடர்ந்து, பின் அமையப்பெற்ற பாடல் வரியில், பாண்டினாடனைக் கண்டு என் உடல் பசலைக் கொண்டதென்ன.... என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் வரும் பசலை என்பது காதல் வயப்பட்ட பெண்களை தாக்கும் ஒரு வகை நோய் என அர்த்தப்படுகிறது. இந்நோயால் பெண்கள் உடல் மெலிந்து பொலிவு இழந்து போவார்களாம். மேலும் பாடலில் தொடர்ந்து "வரும் ஓர் வரியானது பின்வருமாறு அமையப் பெற்றுள்ளது,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைத்தேன் துடித்தேன் பொறுக்கவில்லை. இடையினில் மேகலை இருக்கவில்லை...

இதில் மேகலை என்பது பெண்களின் இடையில் அணியக்கூடிய ஒரு வகையான ஆபரணம் ஆகும். இருவரிகளின் பொருளை இணைத்து பார்த்தோமானால், தலைவனை காணாது துயரத்தில் தலைவி பசலை நோய் கொண்டு உடல் மெலிந்து சென்றதால் ஆபரணம் அவள் இடையில் தங்கவில்லை என பொருள்படும். இந்த மேகலை ஆபரணம் பற்றி கம்பர் தமிழில் எழுதிய கம்பராமாயணத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளமை சிறப்புக்குரியது.

கவிஞர் வைரமுத்து அவர்கள் புறநானூறு இலக்கிய பாடலை பயன்படுத்தியதோடு நிற்காமல் மேலும் பாடலுக்கு சிறப்பு சேர்க்க எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான குறுந்தொகை இல் 40வது பாடலாக இடம்பெற்ற “ யாயும் ஞாயும் யாராகியரோ? ” எனும் பாடலின் வரிகளையும் இப்பாடலில் பயன்படுத்தியுள்ளார். அவ்வரிகள் பின்வருமாறு,

யாயும் ஞாயும் யாராகியரோ நெஞ்சு நேர்ந்ததென்ன

யானும் நீயும் எவ்வழியாலும் உறவு சேர்ந்ததென்ன... செம்புலம் சேர்ந்த நீர்த்துளி போல் அன்புடை நெஞ்சம் கலந்தென்ன…

அதாவது என்தாயும் உன்தாயும் எந்தவிதத்திலும் தொடர்புபடாதவர்கள் ஆனாலும், நம் இருவரது இதயமும் ஒன்றாக கலந்தது எவ்வாறு?

நானும் நீயும் எந்த விதத்திலும் தெரிந்தவர்கள் இல்லை ஆனாலும் நமக்குள் இந்த உறவு எவ்வாறு ஏற்பட்டது? நீர் மண்ணோடு கலந்து எவ்வாறு பிரிக்க முடியாததாய், ஆகின்றதோ அப்படி நம் நெஞ்சங்கள் இணைந்தது எவ்வாறு ? என்று மேற்குறிப்பிட்ட வரிகள் பொருள்படும்.

இவ்வாறு பல திரைப்பட பாடல்களில் நாம் அறியாத அர்த்தங்களை உள்ளடக்கிய சொற்பதங்களும் வரிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு சங்க இலக்கியங்களில் இடம்பெற்ற பாடல்களின் தழுவல்களையும் காணலாம். திரையிசைப்பாடல் வரிகளில் சங்க கால இலக்கியங்களின் பாடல்களையும் சொற்களையும் பயன்படுத்துவது ரசிக்கக்கூடியது மட்டுமல்லாமல் பாராட்டிற்குரிய முயற்சியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரபலி...

ஜெ.துஷிதா
14ஆம் தலைமுறை
கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம்
கற்கைநெறி

காலங்கள் கடந்து கொண்டே இருந்தன. கவிதா சிறை வாசலில் அமர்ந்து எதையோ சிந்தித்து கொண்டு இருந்தாள். ஏன் என்றால் இன்னும் ஓரிரு தினங்களில் கவிதாவிற்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்படவுள்ளது என கடதாசி வந்துவிட்டது. அவள் மேன் முறையீடு செய்த மனுக்கள் அத்தனையும் நிராகரிக்கப்பட்டுவிட்டது. வேண்டிய கடவுள்கள் அனைத்தும் அவளை கைவிட்டு விட்டார்கள். ஆம் அவள் செய்தது மூன்று கொலை ஆச்சே! கடவுள் எப்படி அவள் பக்கம் இருப்பார். எப்போதும் நல்லவர் பக்கம் கடவுள் பார்த்தது கூட கிடையாது அல்லவா... பிறகு எப்படி கவிதா பக்கம் பார்ப்பான். ஆம் கவிதாவின் வாழ்க்கை கதையை சொல்கிறேன் நீங்களே முடிவு செய்யுங்கள் கவிதா செய்தது தப்பா? சரியா? கவிதா நல்லவளா? கெட்டவளா? என.

சரி கவிதாவின் கதைக்குள் போவோம் அழகுபுரம் எனும் அழகிய கிராமம் அதுதான் கவிதா பிறந்தது வளர்ந்தது படித்தது எல்லாமே அங்கு தான். பெயருக்கு ஏற்றால் போல் அழகான கிராமம் சுற்றிலும் மரங்கள், மலைகள், வயல்கள், நதிகள், பறவைகள் என இயற்கை அன்னை அள்ளித்தெளித்த அழகு கிராமம். அங்கு தான் பிறந்தாள் கவிதா. கவிதாவின் தாய் சோழபட்டியை சேர்ந்தவள் தந்தை, பாம்பன் புரத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தவன். கவிதா தாயின் பெயர் நல்லம்மால். பாவம் அவள் பெயருக்கு ஏற்றால் போல் நல்லவள் தான் தந்தை பெருமாள் இவன் பெயரில் பெருமாளை வைத்தாலும் குணத்தில் இடியமீனை விட கொடியவன்.

கவிதாவின் சிறுவயதிலேயே தாய் தவறி விட்டாள். தாய் இறந்து ஒரிரு ஆண்டுகளுக்கு பிறகு பெருமாள் மறுமணம் செய்து கொண்டான். இரண்டாவது மனைவி பெயர் "சரசு" அவள் தான் இத்தனைக்கும் காரணம். கவிதாவிற்கு ஐந்து வயது இருக்கும் அப்போது ஓர்நாள் நல்லம்மால் சமையல் அறையில் சமைத்துக் கொண்டு இருந்தாள். தீடீர் என அடுப்படி தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது. அக்கம் பக்கத்தில் இருந்து வந்த எல்லோரும் அணைக்க போராடியும் நல்லாமாலை காப்பாற்ற முடியவில்லை. கவிதாவின் கண் முன்னே தீக்காயங்களோடு துடிதுடித்து இறந்து போனாள்.

பெருமாள் கதறி அழுதான் துடிதுடித்து வாயிலும் வயிற்றிலும் அடித்து கொண்டான். வாழ வேண்டிய வயதில் தன்னையும் கவிதாவையும் தனித்து விட்டு எங்கே சென்றாய் தனிமரமாய் என ஒப்பாரி வைத்து அழுதான். கவிதாவும் கதறி துடித்தாள் பாவம் தலைகோதிய விரல்கள் தீயில் கருகி வெந்து போயின, அம்மா என அடையாளம் காணாத அளவிற்கு அவள் முகம் தீயில் கருகிப் போனது.

அக்கம் பக்கத்தினர் எல்லோரும் கவலை பட்டனர். "பாவம் பெருமாள் அந்த சின்ன குழந்தையை வைச்சு என்ன பாடு பட போறானோ" என ஒரு சிலரும் பொடியன் என்றாலும் அவன் ஏதோ சமாளிச்சிடுவான் இந்த பொட்டச்சிய வைச்சு படாத பாடு படப்போறான் என கவலை பட்டு கொண்டார்கள்.

நல்லம்மால் இறுதிச்சடங்கு எல்லாம் முடிந்தது. காலங்கள் உருண்டோடியது நல்லம்மால் இறந்து இரண்டு ஆண்டுகள் ஓடிப்போயின அதற்குள் பெருமாள் படும் கஷ்டங்களை பார்த்து உறவுகள் எல்லோரும் அவனை மறுமணம் செய்து கொள்ளும் படி கட்டாயப்படுத்தினார்கள். ஆனால் பெருமாள் வேண்டாம் என மறுத்து விட்டான் நான் கடைசி வரை வாழுற என்டா புள்ள கவிதாக்கு மட்டும் தான் இனி என்னோட வாழ்க்கையில் பெண் ஒன்னும் வேண்டாம் என உறுதியாய் சொல்லி விட்டான்.

"சரசு" பக்கத்து வீட்டுக்காரன் கலியாணத்திட மகள். பெருமாள் எங்கு வெளியே சென்றாலும் வேலைக்கு போனாலும் கவிதாவை அங்க தான் விட்டு போவான். அவள் கவிதாவை தன் பிள்ளை மாதிரி பார்த்துக் கொள்வாள். அக்கம் பக்கம் இருப்பவர்கள் எல்லாம் " சரசு உன்னோட பிள்ளைய நல்லா தானே பார்த்துக்கிறாள் நீ அவளையே கட்டு அவள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசி வரை உங்க ரெண்டு பேரையும் நல்லா பார்த்துக்குவாள் என்று பேச தொடங்கி விட்டார்கள்.

ஏதோ பிடிக்காதவன் போல் சம்மதம் தெரிவித்தான். சரசுவை இரண்டாம் தாரமாய் திருமணம் செய்து கொண்டான் நாட்கள் நகர்ந்தது அவன் எண்ணியது போல தீட்டிய திட்டங்கள் அத்தனையும் யாராலும் கண்டு பிடிக்க முடியாத கட்சிதமான காய் நகர்த்தல்கள். இதுதான் நல்லம்மால் இறப்பை விபத்து என எல்லோரையும் நம்ப வைக்க உறுதுணையாக இருந்தது. ஆரம்பத்தில் கவிதாவிற்கு சரசு அம்மாவாக இருந்தது உண்மை. திருமணத்திற்கு பிறகு அவர்கள் நடத்தையில் மாற்றம் ஏற்பட்டது எது எடுத்தாலும் கவிதா மீது கடிந்து கொள்வது, எரிந்து விழுந்தாள், அடி , பேச்சு என அவள் ஒரு வயசுக்கு வந்த பெண் என்று கூட பார்க்காமல் துன்புறுத்தினாள். அவர்கள் இருவரின் அடுத்த பிளான் கவிதாவையும் அவள் அம்மாவோடு அனுப்பி வைப்பது என்பதுதான்.

இது கவிதாவிற்கு சந்தேகத்தை தந்தது ஓர் நாள் நல்லம்மாலும் கவிதாவும் தாத்தா வீட்டுக்கு சென்று திரும்பிய போது பெருமாள், சரசு ஒரே வீட்டில இருந்தாங்க என்று எதிர்த்த வீட்டு கீரைக்கிழவி சொன்னாள். இதை நல்லம்மால் நம்பவில்லை. இருந்தும் நல்லம்மாலே இருவரையும் நேருக்கு நேர் கண்டு கொண்டாள். அதில் இருந்து குடும்பத்தில் தகராறு. கவிதாவிற்கு நல்லம்மாலை விட பெருமாளையே அதிகம் பிடிக்கும் அடிக்கடி திட்டுவாள் ஏன்னம்மா அப்பாவோட சண்டை பிடிக்கிறாய் சும்மா இரு என்பாள். ஆனால் திருமணத்திற்கு பிறகு பெருமாளின் மாற்றத்தை சற்றும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை கவிதாவால் அப்பாவா இப்படி என்று அடிக்கடி மன வேதனைப்பட்டிருப்பாள்.

ஒரு நாள் அவள் தாயின் பழைய பெட்டி ஒன்றை திறந்து தாயின் ஒவ்வொரு பொருளையும் பார்த்துக் கொண்டு இருந்தாள். கவிதாவிற்கு தாயின் நினைவு வந்தால் அதைத்தான் செய்வாள். தாயின் இன்னொரு பெட்டியை திறந்தாள் அதில் தான் தாய் கைபட எழுதிய டயரி ஒன்று இருப்பதை கண்டு கையில் எடுத்து படிக்க தொடங்கினாள். அதில் தாயின் வாழ்க்கை வரலாறு அத்தனையும் இருந்தது. நல்லம்மாலுக்கு படிப்பு சரியா வாராது ஆனால் டயரி எழுதும் அளவிற்கு படித்திருந்தாள். ஒவ்வொரு நாளும் அவள் கவலை, மகிழ்ச்சி அன்றாட நிகழ்வுகள் அத்தனையும் டயரியில் எழுதுவதை வாடிக்கையாக வைத்திருந்தாள்.

அதில் தான் எழுதியிருந்தாள் நல்லம்மால், மகளே! உன் தந்தை நீ நினைக்கும் அளவுக்கு நல்லவன் கிடையாது. இதைப் நீ புரிந்து கொள்ளும் தருணத்தில் நான் உயிருடன் இருக்க மாட்டேன் என. இந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி கவிதாவை தூக்கி வாரி போட்டது ஏன் என்றால் கவிதா ஒருபோதும் நல்லம்மாலை புரிந்து கொள்ள முயற்சிக்கவில்லை. அப்படி முயற்சித்திருந்தால் நல்லம்மாளின் அன்பு கிடைத்திருக்குமோ என்னமோ கவிதாவிற்கு.

இதற்குள் கவிதாவிற்கு திருமணம் செய்து வைக்க முடிவு செய்தான் பெருமாள். அதற்கு அவன் நண்பனின் மகன் காசியை பேசி முடிப்பதற்கு தீர்மானித்தான். கவிதாவிற்கு சற்றும் அந்த திருமணத்தில் விருப்பம் கிடையாது. இருந்தும் இவர்களிடம் இருந்து தப்பித்துக் கொள்ள அவனை திருமணம் செய்து கொள்ள ஒப்புக்கொண்டாள்.

ஆனால் இதுவும் பெருமாளின் திட்டம் என்பதை கவிதா சற்றும் அறிந்திருக்கவில்லை. நிச்சயித்த படி கவிதாவிற்கு குறித்த நாளில் திருமணம் நடந்தேறியது. கவிதாவை அழைத்து செல்ல கார் வந்திருந்தது கவிதா தாயின் இல்லத்தை பிரிந்து பறந்து சென்றாள். ஆம் பெண்கள் எல்லோருமே பறவைக்குஞ்சுகளை போன்றவர்கள் இறக்கை முளைக்கும் வரை தான் கூட்டில் தங்குவார்கள்.

கவிதா புது வீட்டில் வலது கால் வைத்து நுழைந்தாள் சொர்னா அவர்களை ஆராத்தி எடுத்து அழைத்து சென்றாள். சொர்னா காசியின் தாய் கவிதாவின் மாமியார். ஒரிரு நாட்கள் காசி அணிந்த முகமூடிக்கு ஏற்ப அவனும் நன்றாகவே நடித்திருந்தான். ஓரிரு வாரங்களுக்கு பிறகு காசி தன் நிஜ முகத்தை கவிதாவிற்கு காட்டினான். கவிதாவை கொடுமைப்படுத்த ஆரம்பித்தான். “பாவியர் போகுமிடம் எல்லாம் பள்ளமும் புட்டியும்” என்ற பழமொழி போல் தான் கவிதாவின் வாழ்க்கையும்.

காலங்கள் உருண்டோடின அதற்குள் காசியின் கொடுமை அவளால் பொறுத்துக் கொள்ள இயலாத நிலையை அடைந்தது. இதற்கு காரணம் எல்லாம் பெருமாள் என தெரிந்தும் கவிதாவால் ஏதும் செய்து கொள்ள முடியவில்லை. காரணம் பெருமாளின் மகள் இல்லை கவிதா. நல்லம்மால் பெருமாளை திருமணம் செய்து கொள்ள முன்னர் முருகனை காதலித்து இருந்தால் ஆனால் பெருமாள் நல்லம்மாலை ஒருதலையாய் காதலித்து வந்தான். முருகன் நல்லம்மால் இருவரின் காதலும் எல்லைதாண்டி சென்றது அதனால் அவள் திருமணத்திற்கு முன்னரே கர்ப்பமானாள். அந்த சமயம் பார்த்து முருகன் அவளை கழட்டிவிட்டான். நல்லம்மால் கர்ப்பத்தை கலைக்க எவ்வளவு முயன்றும் அது பலனளிக்கவில்லை. இதே சமயம் பெருமாள் நல்லம்மாலிடம்... காதலை பெருமாள் சொன்னபோது அவளால் இவன் அசிங்கப்படுத்தப்பட்டான் எனவே அதற்கு பழி தீர்த்து கொள்வதற்கு என தான் நல்லம்மாலை திருமணம் செய்து கொண்டான் பெருமாள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாட்கள் உருண்டோடின பெருமாள் எண்ணியது போல நல்லம்மாலை பழிவாங்க தான் சமையலறையில் தீவைத்து அவளை துடிக்க துடிக்க இறக்கச்செய்தான். அதோடு அவன் நின்று விடவில்லை கவிதாவையும் பழி வாங்க என திட்டம் தீட்டி கவிதாவை பழிவாங்க சரசுவை பகடைக்காயாய் பயன்படுத்தினான் பெருமாள். நாட்கள் நகர்ந்தது இவன் நடத்தைகளில் மாற்றத்தை சரசு புரிந்து கொண்டாள். பெருமாள் தன்னை ஏமாற்றி தன்னை பயன்படுத்தி நல்லம்மாலை கொலை செய்த அத்தனையும் கவிதாவிடம் சொல்லி தான் செய்த பாவத்திற்கு பிராயச்சித்தமாக கொலைவெறி பிடித்த பெருமாளை கொலை செய்ய திட்டம் தீட்டினாள். கவிதாவால் காசியின் கொடுமை பெறுத்துக் கொள்ள முடியவில்லை என்பதையும் சரசுவிடம் கவிதா சொல்லி அழுதாள்.

எனவே இதற்கு எல்லாம் முடிவு கட்ட நினைத்த சரசு இருவரையும் கொலை செய்ய திட்டம் தீட்டினாள் ஆனால் அது கவிதாவிற்கு தெரியாது. தெரிந்து இருந்தால் நிச்சயம் அவள் இது நடந்தேற அனுமதித்திருக்க மாட்டாள்.

கவிதா, காசி இருவரையும் வீட்டிற்கு விருந்துக்கு வருமாறு அழைப்பு விடுத்தாள் சரசு. இதற்கு காரணம் கவிதாவை கொலை செய்வது என்பது தான். சரசு , பெருமாள், காசி மூவரும் போட்ட திட்டம் . அவர்கள் எண்ணிய படி கவிதாவை அழைத்து கொண்டு வந்தான் காசி. அவர்கள் திட்டம் தீட்டியது போல் மயக்க மருந்தை கலந்தாள் உணவில் சரசு அவள் கவிதாவின் உணவில் மட்டும் கலக்க வில்லை காரணம் அவளின் மனதில் தான் நல்லம்மாலுக்கு செய்த பாவத்திற்கு பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்பதோடு பெருமாளின் நம்பிக்கை துரோகம் அவளை இன்னும் கோபத்தை தூண்டி இருந்தது. அவள் எண்ணியது போல் மயக்கம் அடைந்தார்கள் இருவரும். அவள் இருவரையும் கத்தியால் கோபம் தீரும் வரை குத்தி கொலை செய்தாள் முடிவில் கவிதாவின் காலில் வீழ்ந்து மன்னிப்பு கோரினாள். பின்னர் வைத்திருந்த கத்தியால் தன்னைத் தானே குத்திக்கொண்டு உயிரை மாய்த்துக் கொண்டாள் சரசு. அங்கு நடந்தது எதுவுமே கவிதாவிற்கு புரியவில்லை திகைத்தபடி நின்றாள்.

அக்கம் பக்கத்தினர் அலறல் சத்தம் கேட்டு ஓடி வந்தார்கள். ஓடிவந்தவர்கள் கவிதாவின் கையில் இரத்தக்கறை படிந்த கத்தியை கண்டார்கள். கவிதாதான் கொலை செய்திருக்க வேண்டும் மூவரையும் என முடிவு செய்தார்கள்.

கவிதா எவ்வளவு சொல்லியும் அவர்கள் அதை புரிந்து கொள்ளவில்லை. போலீசார் கைது செய்து கவிதாவை நீதிமன்றத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயர்படுத்தினார்கள். எல்லா சாட்சியங்களும் கவிதாவிற்கு எதிராகவே இருந்தது. எனவே தூக்கு தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார் நீதிபதி. ஆம் அதை எதிர்த்து தாக்கல் செய்த எந்த மனுவும் அவளுக்கு நீதி வாங்கி கொடுக்கவில்லை. எந்த பிழையும் செய்யாத கவிதா எதற்கு இந்த தண்டனையை அனுபவிக்க வேண்டும். "ஆயிரம் குற்றவாளிகள் தப்பிக்கலாம் ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது" என்ற வாசகம் வாசகமாகவே மட்டும் இருந்தது. ஆனால் கவிதாவின் வாழ்க்கையில் அது கூட பயன்படவில்லை. தூக்கு மேடையில் தன் இறுதி நொடிக்காக காத்திருக்கின்றாள் கவிதா எந்த கடவுளும் அங்கும் கூட அவளுக்கு உதவ முன்வரவில்லை. காலன் மட்டும் வந்து காத்திருக்கிறான் அவளை அழைத்து செல்ல அவள் சொர்க்கத்தில் எனினும் சந்தோஷமாக இருக்கட்டும். உடல் தேடும் காதலில் எப்போதும் உணர்வுகள் மதிக்கப்படுவதில்லை இன்றும் எத்தனை கவிதாக்கள் இன்னும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதமே கடவுள்.......!!!!!!!

ஜெ.இந்துஜன்
13ஆம் தலைமுறை
தேயிலைத் தொழில்நுட்பமும் பெறுமதி
சேர்ப்பும் கற்கைநெறி

ஊனோடு உயிர் கோர்த்து உணர்வோடு
இரு மனங்கலந்து
உனையிங்கு படைத்தான்
உன் உடல் ஆன்மாவுடன் உலகில் வாழ
உயிர்க்கோளமும் படைத்தான்

எங்கிருந்தோ பரமாத்மா
உன்னையும் காக்கின்றான்
உன் உள்ளம் தனில் இருந்து
பிறரையும் காக்கின்றான்

துயர் தனில் தூணாய் இருந்து
உன் துயர் களைகின்றான்
துஷ்டர் உனை அணுகாமல்
கணம் எல்லாம் காக்கின்றான்

அவன் இன்றி அணுவும் அசையாதென
அறிந்தும் அறியாமல்
அற்பனாய் ஆசை கொண்டு
அவன் அடியை மறக்கின்றாய்

அறியாமை எனும் அரக்க இருளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்திவாரம் தனை மறந்து
நிலையில்லா சாதி மதம் கொண்டு
ஆணவ விளிம்பில் மிதக்கின்றாய்

நிலையற்ற இவ்வுலகில் நிலையென்று ஏதுமில்லை
நினைப்பவரை நிலைநிறுத்த அதற்கன்றி ஆற்றலில்லை
பிறப்பதற்கரிய மனித குலமே - நீ
பிழைகளை உணர்ந்திடுவாய்

அலை சீற்றும் பெரும் கடலில்
உப்பினை தனியே கண்டவர் யாருமிலர்
கடல் நீரில் உப்பின் கரிப்பை இங்கு
உணராதவர் யாருமிலர்

உன்னுள்ளே உறங்கிக் கிடக்கும்
உணர்ச்சி அற்ற மனிதத்துக்கு
கடவுள் எனும் பெயர் கொடுத்து
கட்டித் தழுவி ஆற்றல் கொடு

உள்ளும் வெளியும் கடவுளை தேடுவது
உணராத போக்காகும்
உள்ளும் வெளியும் மனிதத்தை உணர்வதே
உயர்ந்த நிலையாகும்......!!!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானத்திற்குள் இறைவனின் உருவகம்..

சி.பவதாரணி
13ஆம் தலைமுறை
கணினி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் கற்கைநெறி

கற்பனை எனும் கால இயந்திரத்தை முடக்கி, நிகழப்போகும் நிஜத்தை எதிர்பார்த்த பயணம் இது. உங்கள் கண்களை வரிகள் மீது படரவிடும் முன் அணுவில் இருந்து அண்டம் வரை ஆதிசிவன் ஆட்சி எனும் நம்பிக்கையில் வாழ்வின் நிமிடங்களை நகர்த்திக் கொண்டிருக்கும் ஆஸ்திகர்களில் இருந்து அன்பும், அறிவும் மட்டுமே சிவன் எனும் நாஸ்திகர் வரை கடவுளை வைத்து கருத்து மோதல் செய்து கொண்டிருக்கும் மானிட உயிர்கள் அனைவருக்கும் என் சிந்தனை துளியின் மன்னிப்புகள்.

கடவுளை நம்புபவர்களுக்கு ஆதி உருவம். நம்பாதவர்களுக்கு பேசுபொருள். உணர்தலில் இருந்த கடவுள் மனித சிந்தனையும் நம்பிக்கையும் இணைந்த ஒரு புள்ளியில் உருவமானார். "விஞ்ஞானத்திற்குள் இறைவனின் உருவகம்" சிந்தனையை தட்டிவிடும் ஒரு புரட்சிக் கருப்பொருள்.

கடவுள், விஞ்ஞானம், தமிழ் எனும் மூன்று பேரலைகளை ஒற்றை புள்ளியில் சந்திக்க வைத்தல் என்பது நிஜத்தின் எல்லைக்கு அப்பாற்பட்டது. எனினும் காலத்தை கற்பனையில் நிறுத்தி விஞ்ஞானம் பேசும் கடவுளை தமிழுக்குள் அடக்கும் முயற்சியிது.

சுமார் 50 வருடங்களின் பின்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி 2073, விஞ்ஞானம் இட்ட விதையில், தொழில்நுட்பம் வேர் பரப்பி, அறிவியலின் நிழலில் பேரண்டம் குளிர்காய்ந்து கொண்டு இருந்தது. ஆறறிவு நுண்ணுயிர்கள் ஓய்வின் களைப்பில் ஓய்வையும் சுலபமாக்க மீண்டும் தொழில்நுட்பதின்பால் தஞ்சம் புக ஆரம்பித்திருந்தன. செயற்கை நுண்ணறிவு எனும் பெரும் புயல் காற்றில் மனிதன் சுவாசித்துக் கொண்டிருந்தான்.

செயற்கை நுண்ணறிவு நிஜத்தின் வெளிச்சம் யாவும் நிழலாய் ஒரு நொடியில், விரல் நுனியில். தன்னை வடிவமைத்துக் கொண்ட மனிதனை விட அதீத சக்கியுடன் தன்னை தானே தக்க வைத்துக் கொள்ளும் பேராற்றலுடன் தாக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் ஓர் அறிவியல் புரட்சி. மனித புலன்களில் இருந்து உணர்வுகள் வரை ஆட்சியை தன் பால் ஈர்த்து வைத்திருக்கும் காந்தப்புலத்திடம் மனிதன் முழுவதுமாய் சரணடைந்திருந்தான்.

காலத்தின் மாறும் வேகத்திற்க்கு ஒவ்வொரு நொடியும் தன்னையும் புதுப்பித்துக் கொண்டிருக்கும் செயற்கை நுண்ணறிவு எனும் அறிவியல் களத்தில் மத புரட்சி எவ்வித சலனமும் இன்றி அரங்கேறிக் கொண்டிருந்தது. ஆதியில் உணர்தலில் மட்டுமே உருவம் பெற்று இருந்த கடவுள் மதம், இனம், மொழி என்ற எல்லையற்ற கோட்பாடுகளுக்குள் வரையறுக்கப்பட்டு பேருருவம் கொண்டது. இயற்கையில் ஆரம்பித்த உருவாக்கம் இதிகாசத்தில் தொடர்ந்து இன்று இணையத்தின் ஆட்சியில்..

கேட்பதை தருபவர் எனும் சிறு பிள்ளை பதிலில் இருந்து எல்லை இல்லா ஆதி எனும் ஆன்மீக ஞானியின் விளக்கம் வரை நீண்டு கொண்டே செல்லும் இறை பற்றிய கருத்துக்குவியல்களை திருப்திப்படுத்தும் ஒன்றை மனிதன் உருவகிக்க தொடங்கி இருப்பது ஒன்றும் ஆச்சரிய வலையில் சிக்க வேண்டிய கருத்தில்லை.

செயற்கை நுண்ணறிவில் இணையக் கடவுள் அழிவில்லா எல்லை அற்ற சமுத்திரம், யாவரும் சமன் என்ற பொது விதியில் அதன் இயக்கம். மனிதனுக்கு எத்தனை மதத்தையும் ஆராதிக்கும் உரிமை,நேரம்,இடம் விதியில் இல்லை. விரல்நுனிகள் மட்டும் பேசிக் கொள்ள, கண்களால் தரிசனம் உணர்வு வலையில் சிக்காத நவீனம். உலக பிணைப்பை உறுதி ஆக்கும் தொடர்பு. ஒவ்வொரு மதத்தின் சக்தியும் ஒவ்வொரு தனித்துவம். மனிதனின் ஆறாம் அறிவை திருப்திப்படுத்தும் இக் காரணங்கள் இதன் நிலைத்திருப்பிற்கு அடித்தளமாகியது.

நேர் கருத்துகள் சூழ் சிந்தனை ஒன்றுக்கு எதிர் கருத்தின் பார்வை இருக்கும் என்பது பிரபஞ்ச விதி. அவ்விதியின் பிரதிப்பலனாய் செயற்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்ணறிவின் ஆன்மீக அனுபவிப்பை தீயதின் எண்ணங்கள் நிறை மனிதர்கள் பெறத்தொடங்கினால் பிரபஞ்சத்திற்க்கான விளைவு அதி உச்ச விபரீதமே.

நேர், மறை சூழ்ந்த இறை உருவகத்தை பூலோகம் முழுவதும் இதை ஏற்றுவிட்டதா என்றால் இல்லை. இப்போதும் இறைவன் எனும் மையப்பொருளில் நவீனக் கருத்தாடல்கள் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கிறது. கருத்தாடல்களின் சூடுபிடிக்கும் உருவமாய் இணையக் கடவுள் ஏற்புக்கும் மறுப்புக்கும் நடுவில் இறைவன் சிக்கி இருந்தார். எனினும் ஏற்பின் வீத அதிகரிப்பு அதி உச்ச வேகத்தில் நடந்தேறிக் கொண்டுதான் இருந்தது.

காலத்தின் சில கருத்துகள் நம்ப முடியாவிட்டாலும் மாற்றவோ கட்டுப்படுத்தவோ முடியாதென்ற கட்டாயத்தில் ஏற்க வேண்டிய சூழலை காலம் தந்துவிடும்.

கி.பி 2023

இன்று இடப்படும் விஞ்ஞான விதையின் அபரிமித மாற்றதின் தாக்கம் பாரியளவில் இருக்கும் என்பது மறுக்கபடாத, ஏற்க வேண்டிய உண்மை. பிரபஞ்சம் ஓர் திகைப்பூட்டும் இடம் அதன் எதிர்பாராத மூலைகளில் தெய்வீகத்தின் ஆதாரங்களை நாம் எப்போதும் கண்டறிந்து கொண்டுதான் உள்ளோம். அதன் தொடர்ச்சியின் பிரதிபலிப்பு அறிவியலுடன் இணைந்து அண்டத்தை நிச்சயம் பிரமிப்பில் ஆழ்த்தும்.

வாழ்கையின் இறுதிக் கேள்விக்கான பதில்களை அறிவியல் இறையிடம் வேண்டும் போது மனிதகுலத்தின் எல்லையற்ற படைப்பாற்றலுக்கு பிரபஞ்சம் தலை வணங்கும் என்பதும் மறுப்பதற்கு இல்லை. காலத்தின் அறிவியல் நகர்விற்க்காய் காத்திருப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தீ" க்கு இரையான யாழ் நூலகம்

## (சிறு வரலாற்றுப் பார்வை)

ப.தமிழ்ப்பிரியன்
14ஆம் தலைமுறை
தொழில் முயற்சியும் முகாமைத்துவமும்
கற்கைநெறி

அண்ணளவாக 97,000 அரிய நூல்களுடன் தென்கிழக்காசியாவிலே மிகப்பெரிய நூலகமாகத் திகழ்ந்து தற்போது யாழ் நகர மத்தியில் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் யாழ் பொது நூலகத்திற்கு கரு யாழ்ப்பாணம், புத்தூரைச் சேர்ந்த கே. எம். செல்லப்பா (கனகசபை முதலித்தம்பி செல்லப்பா, 24 பெப்ரவரி 1896 – 14 ஏப்ரல் 1958) என்னும் ஆர்வலரொருவரால் உருவாக்கப்பட்டது. நவம்பர் 11. 1933 ஆம் ஆண்டில் தனது வீட்டில், சில நூல்களுடன் இவர் நடத்தி வந்த நூல் நிலையமே இது. இதனைப் பலருக்கும் பயன்படும் வகையில் விரிவுபடுத்தும் நோக்கில், செல்லப்பா அவர்களும் வேறு சில பிரமுகர்களும் இணைந்து செயல்பட்டு இந்த நூல் நிலையத்தை யாழ் நகரின் மத்தியில் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் இதற்கென வாடகைக்குப் பெறப்பட்ட ஒரு சிறிய அறையொன்றுக்கு மாற்றினார்கள். அக்காலத்தில் சில நூறு நூல்களே இங்கிருந்தன.

1936க்குப் பின்னர் நூலகம் யாழ் நகரசபையிடம் கையளிக்கப்பட்டு யாழ்ப்பாண கோட்டைக்கு அருகே புதிதாகக் கட்டிடப்பட்ட நகர மண்டபத்திற்கு அண்மையிலுள்ள இடமொன்றுக்கு மாற்றப்பட்டது. யாழ்ப்பாண மாநகரசபை மாநகரசபை" அந்தஸ்துக்குத் தரமுயர்த்தப்பட்டுப் புதிய சபை பதவியேற்றிய பின் இந்த நூலகத்துக்கான புதிய கட்டிடமொன்றைக் கட்டும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. பல்வேறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகள் மூலம் இதற்கான நிதியைத் திரட்ட எடுத்த முயற்சிகள் பெரும் வெற்றி பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

நிறுவனத்துக்கான அடிப்படைகளைத் தீர்மானித்து வழி நடத்தும் நோக்கில் அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த பல கல்வியாளர்களையும் பிரமுகர்களையும் உள்ளடக்கிய குழுவொன்று 1953ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இக்குழு இது தொடர்பில் இந்திய நிபுணர்களினதும் உதவிகளைப் பெற்றுக்கொண்டது. இதற்கான கட்டிடத்தை வடிவமைக்கும் பணியும் இந்தியாவின் தமிழ் நாட்டை சேர்ந்த கட்டிட கலைஞர் நரசிம்மனிடம் ஒப்படைக்கப்பட்டது. திராவிடக் கட்டிடக் கலைபாணியைத் தழுவி இரண்டு தளங்கள் கொண்ட அழகிய கட்டிடமொன்றை இவர் வடிவமைத்தார்.

கட்டிடத்தை இரண்டு கட்டங்களில் கட்டிமுடிக்கத் தீர்மானித்து முதற்கட்டமாக கட்டிடத்தின் முன்பகுதிக்கான அடிக்கல் 1953 மார்ச் மாதத்தில் நாட்டப்பட்டது. கட்டிட வேலைகள் தாமதமாகவே நடைபெற்றன. 1959 இல் கட்டிட வேலைகள் முற்றாக முடிய முன்னரே அப்போது யாழ்ப்பாண மேயராக இருந்த அல்பிரட் துரையப்பா நூலகத்தின் திறப்புவிழாவை நடத்தினார்.

யாழ் நகரில் நிலைகொண்டு நூறு ஆண்டுகள் பழமையான ஓலைச் சுவடிகள் வரலாற்று நூல்களில் என பல்வேறுபட்ட தொன்மை நூல்களுக்கு வாழ்விடமாக விளங்கி அறிவையும் வரலாற்றையும் தேடி ஓடும் தேடலாளர்களுக்கு புகலிடமாக இருந்து ஒரு மாபெரும் சமூகத்தின் கல்வி மற்றும் வரலாற்றின் ஆதாரமாக விளங்கியது. இலங்கையின் பல்வேறு பாகங்களில் மட்டுமல்லாது வெளிநாட்டில் இருந்தும் குறிப்பாக இந்தியாவில் இருந்தும் வருகை தந்து பல்வேறு பட்ட தகவல்களை இங்கிருந்து பெற்று சென்றிருக்கிறார்கள்.

இப்படி பல சிறப்புக்களை தாங்கிவந்த இந்த கல்விக்கூடத்திற்கு 1981 ஆம் ஆண்டு ஜுன் 1 ஆம் தேதி அன்று இரவுவேளையில் ஒரு சமூக விரோதக்குழு ஒன்றினால் குறித்த ஒரு சிலரின் தனிப்பட்ட சுய இலாபத்திற்காகவும் அரசியல் காரணங்களுக்காகவும் அநீதி இழைக்கப்பட்டது. இத்தனை ஆயிரக்கணக்கான நூல்களையும் ஓலைச்சுவடிகளையும் தாங்கி வந்த கல்விதாய் தீக்கு இரையாக்கப்பட்டாள். அங்கிருந்த விலைமதிக்கமுடியாத வரலாற்று நூல்களும் எரித்து நாசமாக்கப்பட்டது.

குறிப்பாக கிடைப்பதற்கு அரிதான ஐசாக் தம்பையா நன்கொடை கொடுத்த இலக்கியம், சமயம், மொழியியல் தத்துவம் தொடர்பாக சுமார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6000 நூல்களும், இந்திய வர்த்தகர் ஒருவரால் கொடுக்கப்பட்ட மகாத்மா காந்தியின் சத்திய சோதனை 1672 ஆம் ஆண்டில் பிலிப்பஸ் பால்டியார் என்பவர் எழுதிய டச்சு ஆட்சியில் இலங்கை என்னும் நூல் 1660 ஆம் ஆண்டில் கண்டி மன்னரால் சிறைபிடிக்கப்பட்ட வேளை றொபேட் நொக்ஸ் என்பவர் எழுதிய இலங்கையராவார் என்னும் நூல் ஆகியவை அழிந்தன.

1585 ஆம் ஆண்டில் கத்தோலிக்க மதத்தலைவர்களால் தமிழில் எழுதப்பட்ட நூல் சேர் பொன்னம்பலம் இராமநாதன் எழுதிய பகவத்கீதை விளக்கம், சித்தாந்தம், செந்தமிழ் இலக்கிய நூல்கள் திருமதி இராமநாதன் அம்மையார் எழுதிய இராமாயண மொழிபெயர்ப்பு மகாகவி பாரதியாரின் நண்பரான நெல்லையப்பன் எழுதிய நூல்கள் கடலைக்குடி நடேச சாஸ்திரியார் எழுதிய சோதிட சாஸ்திர நூல்கள் வானசாஸ்த்திரம் சம்பந்தமான நூல்கள் சித்தவைத்திய வாசகங்கள் அடங்கலான ஏட்டுச்சுவடிகள் ஆகியவை அழிந்தன.

மேலும் முத்துத்தம்பி பிள்ளை எழுதிய அபிதானகோசம், சிங்காரவேலு முதலியார் எழுதிய அபிதான சிந்தாமணி, முதலியார் இராசநாயகம் எழுதிய புராதன யாழ்ப்பாணம், சுவாமி ஞானப்பிரகாசம், முத்துத்தம்பி பிள்ளை எழுதிய யாழ்ப்பாணம் பற்றிய நூல்கள், கல்லடி வேலன் என்று அழைக்கப்பெற்ற கே.வேலுப்பிள்ளை இயற்றிய யாழ்ப்பாண வைபவ கௌமுகி சிற்பக்கலை பற்றிய நூல்கள் தனி நாயக அடிகளார் பதிப்பித்து வெளியிடப்பட்ட"தமிழ் கலாசாரம்" எனும் ஆங்கில சஞ்சிகை இராசையனார் வன்னியசிங்கம், கதிரவேற்பிள்ளை, ஆனந்தகுமாரசாமி மற்றும் முதலியார் குலசபாநாதன் சேகரித்த நூல்கள் மற்றும் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட கையெழுத்து பிரதிகளும் அழிவடைந்தன.

நூலகம் எரிக்கப்பட்டு ஓராண்டிற்குப் பின்னர் 1982 இல் யாழ் நூலக வாரம் ஒன்றை யாழ்ப்பாணச் சமூகம் முன்னெடுத்தது. இதன் மூலம் பொது மக்களிடம் இருந்து ஏராளமான நூல்கள் சேகரிக்கப்பட்டன. கட்டிடத்தைப் புனரமைக்கும் வேலைகள் ஆரம்பமாயின. ஆனாலும் தொடர்ந்த உள்நாட்டு போரினால் கட்டடம் எறிகணைகளாலும், துப்பாக்கிச் சூடுகளாலும் சேதமடைய ஆரம்பித்தது. இதனால் நூலகம் நிரந்தரமாக மூடப்பட்டது.

1998 இல் ஜனாதிபதியாக ஆட்சியில் இருந்த சந்திரிக்க பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் அரச நூலகத்தை மீளக் கட்டியெழுப்ப முடிவெடுத்து இலங்கை முழுவதிலும் இருந்தும் வெளிநாட்டு அரசுகளிடம் இருந்தும் இதற்கான பங்களிப்பை செலுத்துமாறு வேண்டினார். ஏறத்தாழ US$ 1 மில்லியன் இதற்காக செலவழிக்கப்பட்டு 25,000 நூல்கள் வரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேகரிக்கப்பட்டன. இறுதியாக 2004 ஆம் ஆண்டில் நூலகம் பொது மக்களுக்காக மீளத் திறக்கப்பட்டது.

தென்னாசியாவின் மிகப் பெரிய அறிவியல் பொக்கிஷமாக போற்றப்பட்ட யாழ்ப்பாண பொது நூலகத்தின் அழிப்பு என்பது மனித நாகரிகத்தின் மோசமான துயரம். 1981ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் தேதி நள்ளிரவில் இந்த கொடுமை நேர்ந்த போது அதனை சென் பற்றிக்ஸ் கல்லூரியின் மாடியில் இருந்து நேரில் பார்த்த "தாவீது" அடிகளார் அந்த கணத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தி ஒன்றே அந்த நூலகத்தின் பெறுமதியை எடுத்துக் காட்டுகின்றது.

யாழ் பொது நூலகம் அழிக்கப்பட்டு எத்தனை நூறு ஆண்டுகள் கடந்தாலும் கூட அந்த அழிப்பு நடவடிக்கை மூலம் தமிழ் மக்களின் இதயங்களில் ஏற்படுத்திய வடு இன்னமும் மாறாதது. இன்றும் ஆண்டுதோறும் ஜூன் 1 ஒரு துக்க தினமாகவே தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது.

"ஒரு நூலகம் திறக்கப்படும் பொழுது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன"

-விக்டர் ஹியுகோ-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொட்டிலுக்குள் வா..!

கிறிஸ்டோபர் என்ரூ தில்ருக்ஷன்
14ஆம் தலைமுறை
பொறியியல் தொழில்நுட்பம் கற்கைநெறி

மூச்சு விட சிரமமா
இருக்கு- அசட்டு
நினைவுகளை அசைத்து
பார்க்கையிலே அவள்
படும் இன்னல்கள்
இன்றும் இம்மியளவும்
குறையவில்லையே!

மலையேறி களைத்த
கால்கள்- வெண்கற்கள்
உள்ளேறி பீறிப்பாயும்
இரத்த நொடியில் உப்பிப்
பெருத்து அட்டையோ, சாரையோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரியனோ சிறுத்தையோ!
குளவியோ தன்
பங்குக்கு ஏதாவதொன்று!!!

தினமும் அவள்
மரணத்தின்
ரெக்கைகளை
கோதிக்கொண்டிருப்பாள்.

இரவு அடுப்பங்கரையில்
புகையேறி வழிகின்ற
கண்ணீரோடு
சேர்ந்து கவலைகளையும்
கரைத்து விடுவாள்..

அவள் முகம் பார்க்கையிலே
மகனாய் மௌனமாய்
மரணித்து விடலாம் போலிருக்கு
வா- தப்பிப் பிழைத்து
மீண்டும் தூங்கி
விடலாம் தொட்டிலுக்குள்..

நான் எடுத்து செல்வேன்
மாற்றத்தை மனதார
ஏற்று மாய்ந்து கிடக்கும்
மனிதத்தை உயிர்ப்பித்து
உணர்வளித்து
உடல் ஆக்கி
ஒரு மீட்பனை அனுப்பு..

அவன் தலைவனாய்
தொலைந்து போன வழியை மீட்பவனாய்
புதுமையை புகட்டுபவனாய் வேண்டும்
நிச்சயம் மலைகளின்
மகனாக வேண்டும்
மதுவை விடுத்து
வெறுமையை விரட்டி
பேராயுதம் ஏந்தும்
மன வலிமை
நிச்சயம் வேண்டும்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவில் அவன் உயரம் தொட வேண்டும்
ஆளுமையில் அவனை மிஞ்சிட
இன்னொருவன் பிறக்க வேண்டும்

சந்ததியை எடுத்து செல்ல நெஞ்சில்
திராணி வேண்டும்

மக்களை ஏமாற்றாமல் இருக்க நிச்சயம்
அவன் மீட்பனாய் இருக்க வேண்டும்
நீ சமூகத்தை காக்க
மீட்பனாக வேண்டும்
எழுந்து வா
மலையரசனே!
பின் தொடர நான் தயார்.
இல்லையேல்
நானே என்னை தலைவனாய்
எடுத்து செல்கிறேன்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றாதே ஏமாறாதே

டனேபா ஜோசப் லோகநாதன்
16ஆம் தலைமுறை
ஏற்றுமதி விவசாய கற்கைநெறி

தென்றலின் மென்மையான ஸ்பரிசத்திலும் இதழ்கள் விரித்து நின்ற மலர்களின் நறுமணத்திலும் லயிக்க முடியாமல் மனதில் குழப்ப இலைகள் ஆர்பரிக்கும் பூங்காவில் அமர்ந்து எதையோ யோசித்த வண்ணம் இருந்தான் கவின். அவனது மனம் முழுவதும் ஏதோ ஒரு பதட்டத்துடன் இருந்தது. ஏனெனில் க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறு வெளியாகும் நாள் இன்றாகும். பரீட்சை காலத்தில் எதுவுமே படிக்காமல் நண்பர்களுடன் சுற்றி திரிந்த அவனுக்கு தாயினுடைய கனவுகளும் ஆசைகளும் ஞாபகத்திற்கு வந்தன. தனது மகனை வைத்தியராக்குவதற்கு பலரிடம் கடன்களை பெற்று மிகவும் கஷ்டப்பட்டு படிக்க வைத்தாள் கவினது தாயாகிய ஆனந்தி. ஆனால் கவினோ படிக்காமல் ஊர்சுற்றி திரிந்தான். அனைவரும் எதிர்பார்த்த உயர்தர பரீட்சை பெறுபேறுகள் வெளிவந்தன. கவின் மூன்று பாடங்களில் ஒரு பாடத்தில் மட்டுமே சித்தி பெற்றிருந்தான். இதனை அறிந்தால் தாய் கவலை அடைந்து விடுவார் என்பதற்காக அவனது தாயிடம் ஒரு பொய்யான பெறுபேற்றை கூறி நான் வைத்தியராகி விட்டேன் என்று கூறினான். கவினின் தாயோ மிகவும் அப்பாவி எதுவுமே அறியாதவள். தனது மகன் கூறியது உண்மை என நினைத்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். மகனின் மேலதிக கல்வி நடவடிக்கைக்காக பணம் சேர்க்க ஆரம்பித்தாள் இரவு பகலாக வேலை செய்து உழைத்தாள்.

கவின் கல்வி கற்பதற்காக வெளியூர் செல்வதாக தாயிடம் பொய்கூறி விட்டு நண்பர்களின் வீடுகளில் சென்று தங்கி தனது தாயினுடைய பணத்தை தேவையற்ற செயல்களுக்காக செலவழித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தான். நண்பர்களுடன் சேர்ந்து மதுப்பழக்கம், புகைப்பிடித்தல் என தவறான பழக்கத்தில் ஈடுபட்டான். இவ்வாறே காலங்கள் பல உருண்டோடின. திடீரென ஒரு நாள் கவினின் நண்பர்கள் முப்பதாயிரம் பணம் வேண்டும் என்று கேட்டனர். ஏன் ஏதற்கு என விசாரிக்காமல் நான் உங்களுக்கு பணம் தருகிறேன் எனக்கூறினான். தனது தாய்க்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி தனக்கு உடனடியாக முப்பதாயிரம் பணம் வேண்டும் என்றான். அப்பணம் இருந்தால் தான் நான் வைத்தியராக முடியும் தாயிடம் கூறினான். ஆனந்திக்கு என்ன செய்வது என புரியவில்லை. தனது மகனின் கல்விக்காக எதுவும் செய்ய தயாராக இருந்தாள். அவளிற்கு தெரித்த அனைவரிடமும் சென்று பண உதவி கேட்டாள் தன்னிடமுள்ள நகைகளை விற்று ஒருவாறு பணத்தைத்திரட்டி மகனின் வங்கிக்கணக்கில் வைப்பில் இட்டாள்..

தாய் அனுப்பிய பணத்தை எடுத்து கொடுத்த பின் கவினுக்கு காத்திருந்த அதிர்ச்சி பற்றி அவன் அறியவில்லை. அவன் திரும்பிய பாதை வழியிலே இரண்டு பொலிஸ் வாகனம் அவனை வளைத்து நின்றது. அவ் வாகனத்திலிருந்து இறங்கிய இரு பொலிஸ் அதிகாரிகள் கவினது கையிலேயே விலங்குகளை மாட்டி காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். கவின் எதுவுமே தெரியாதவாறு முழித்துக் கொண்டு இருந்தான். இச்செய்தி காட்டுத்தீ போல வேகமாக அனைத்து ஊர்களுக்கும் பரவியது. ஏனெனில் பல வருடங்களாக சட்டரீதியற்ற முறையில் போதைப்பொருள்களை கடத்தியவர்களை கண்டுபிடிக்க முடியாமலிருந்த நிலையில் கவினின் வங்கி கணக்கில் இருந்தே போதைபொருள் பரிமாற்றத்திற்கு தேவையான பணம் எடுக்கபட்டுள்ளது என தகவல் கிடைக்கப்பெற்றது. இதனை கேள்விப்பட்ட கவினின் தாய் அடியற்ற மரம்போல் கீழே விழுந்தாள். தனது மகன் தன்னை ஏமாற்றி விட்டானே என நினைத்து அழுதாள். காவல் நிலையத்திற்கு தனது நண்பர்கள் காப்பாற்ற வருவார்கள் என காத்துக் கொண்டிருந்தான் கவின். ஆனால் அவன் அவனது நண்பர்களிடம் ஏமாறியது தான் மிச்சம். தனது பணத்தை இழந்தது மட்டுமல்லாது அவர்கள் செய்த குற்றத்திற்காக இரு ஆண்டு சிறைத்தண்டனை தனக்கு கிடைக்க போவதையிட்டு கவின் மிகவும் கவலைப்பட்டான். நான் எனது தாயை ஏமாற்றியதாக நினைத்தேன். ஆனால் எனது நண்பர்கள் என்னை பணத்திற்காக இவ்வளவு காலமும் ஏமாற்றியுள்ளனர் என்று இவ்வாறு என்ன செய்வதென்று தெரியமால் தெரியாமல் தவித்து கொண்டிருந்த கவினுக்கு காவல் அதிகாரி கூறிய தகவல் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது என்ன வென்றால் கவின் பதினெட்டு வயதிற்குட்பட்டவன் என்பதால் அரசாங்கம் அவனுக்கு சிறைதண்டனை வழங்காமல் புத்திமதி கூறி அவனை வெளியேற்றியது. கவின் மனதால் மிகவும் காயப்பட்டவனாக காவல் நிலையத்தில் இருந்து வெளியேறினான். அவனது எண்ண அலைகள் முழுவதும் அவனது தாயைப் பற்றியதாகவே இருந்தது. எனது தாய் எண்ண செய்யப் போகின்றாரோ? என நினைத்து கொண்டே வீட்டுக்கதவை பயந்து மகன் பயந்து தட்டினான். மகனை நினைத்து அழுது கெண்டிருந்த ஆனந்தி கதவு தட்டும் சத்தம் கேட்டு கதவை திறந்தாள். கதவைத் திறந்தவள் கவினை கட்டி அணைத்து அழத் தொடங்தினாள். ஏன் இவ்வாறு செய்தாய்? ஏன் என்னை ஏமாற்றினாய்? எனக் கதறி அழுதாள். இருவரும் ஒருவாறு சிறிதுநேரம் கழித்து சமாதானம் ஆகினார்கள்.

கவின் தாய்க்கு சத்தியம் செய்து கொடுத்தான். இனி உங்களை ஏமாற்ற மாட்டேன் என்று. தாய் கவினை மீண்டும் நம்பினாள். ஆனால் இந்த தடவை அவளது நம்பிக்கை வீண்போகவில்லை. கவின் தனது தாய்க்காக தன்னை மாற்றிக் கொண்டான். தாயின் விருப்பத்திற்கேற்றவாறு ஓர் நிறுவனத்திலே வேலைப் பார்க்கத் தொடங்கினான். தனது முதல் மாத சம்பளத்திலே தனது தாய்க்கு, அவள் தனக்காக அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொடுத்தான். தனது நகைகளை பார்த்த ஆனந்தி மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இதனை பார்த்த கவின் செய்த குற்றங்களை விளங்கி கொண்டு வாழ்க்கையில் இனிமேல் யாரையும் ஏமாற்ற மாட்டேன் வாழ்க்கை யாரிடமும் ஏமாற மாட்டேன் என திடசங்கற்பம் பூண்டு கொண்டான். கவினின் வாழ்க்கை ஒளி வீசும் சுடரைப் போல பிரகாசமானது.

எனவே மாணவர்களாகிய நாம் எந்த சூழ்நிலைகளிலும் யாரையும் ஏமாற்றாது யாரிடமும் ஏமாறாது எமது வாழ்க்கையை அறத்தின் வழியே கொண்டு செல்ல வேண்டும்

"உன்னை உன்னை உண்மையாக நேசிப்பவரை ஏமாற்றாதே உன்னை ஏமாற்றுவதற்காக நேசிப்பவர்களிடம் ஏமாறாதே"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மரணசாசனம்..

யோ.கபீசன்
14ஆம் தலைமுறை
விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் கற்கைநெறி

நான் நாளை இறக்க நேரிடலாம் என் உடலை
பார்த்து எத்தனையோ பேர் கதறி அழலாம்
அல்லது என் உடலை பார்த்து ஒருசிலர்
சிரிக்கவும் செய்யலாம்..

தம்பி, கபீஸ், அண்ணா என
எத்தனையோ பெயர்களில் அழைக்கப்பட்ட
நான் body , பிரேதம், சவம் என
பெயர் மாற்றப்படலாம்..

ஆசை ஆசையாய் வளர்த்த ஆட்டுக்கிடாய்
கூட கதறும் அதுவும் சுயநலம் தான்
எட்டாம் நாள் அதன் உயிரும் அல்லவா பறி போக
போகிறது என எட்டு என்ற சாட்டில் ...

என் இரத்த உறவுகள் நண்பர்களால்
எத்தனை நாட்கள் எனக்காக அழமுடியும்
முழுவதுமாய் ஓர் ஐந்து நாட்கள்!!..

அழுது முடித்து என்னை அடக்கம்
செய்துவிட்டு என் உடலோடு சேர்த்து என்
உடமைகளையும் அடக்கம் செய்யலாம்
அல்லது அதை இன்னொருவருக்கு தானம் வழங்கலாம்..


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என் உடல் படலை கடந்த அடுத்த நொடி
நான் படுத்து உருண்டு புரண்ட அத்தனை
இடங்களும் நீர் கொண்டு கழுவி
விடப்படலாம் என் சிறு அடையாளம் கூட
அங்கே தங்கி விட கூடாது என்று..

பக்கத்து வீட்டு கிழவி இரண்டு நாள்
அழுதிருக்குமா எனக்காக மூன்றாம் நாள்
வழக்கம் போல அது வெத்திலை பாக்கை
இடிக்க தொடங்கி விடும்..

என்னுடைய உறவுகள் என்னை நினைத்து எத்தனை நாட்கள் கதறி அழுவார்கள் ஓர் இரண்டு வாரங்கள் அல்லது ஓர் மாதம் அவர்களும் தங்கள் கடமைகளை சிறிது சிறிதாக ஆரம்பித்து விடுவார்கள்..

என்னை அடக்கம் செய்து எட்டாம் நாள் என்
ஆத்மாவை கூட அனுப்பி வைக்க சடங்கு
என்று என்னை வலுக்கட்டாயமாக அனுப்பி விடுவார்கள்..

எண்ணி 31 நாள் என்னிடம் சேகரித்த
சாம்பலை கூட கடலில் கொண்டு கொட்டி
விடுவார்கள் என் உடலை கடலில் வீசி
எறிந்திருந்தால் மீன்களுக்கு எனினும்
உணவாகி இருப்பேன் அல்லவா...

என் புகைப்படம் என் மேசையில் இருந்து
சுவரை நோக்கி இடம்பெயரும் அங்கே
அந்தரத்தில் ஓர் ஆண்டு என்னால்
தொங்க முடியுமா!
பின் நிலைதவறி ஓர்நாள் அது கூட
வீழ்ந்து நொருங்கலாம் என் எஞ்சிய
பாகங்கள் வீட்டின் ஓர் ஓரத்திற்கு கடத்தி வைக்கப்படலாம்..

நான் இப்போது என்னை உயிர் என
கருதியவர்களின் எண்ணங்களின்
நினைவாடலில் துளியளவும் கூட இல்லை
இப்போது நான் யார் ..

சாத்தானா இல்லை உங்கள் அண்ணனா
நண்பனா காதலனா இத்தனைக்குப் பிறகு
நான் யார் உங்களுக்கு இப்போது...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு...

ஜெ.பவித்ரா
15ஆம் தலைமுறை
விலங்கு உற்பத்தியும் உணவுத்
தொழில்நுட்பமும் கற்கை நெறி

"தமிழன் என்றொரு இனமுண்டு
அவனுக்கு தனியொரு குணமுண்டு
அமிர்தம் அவர்தம் மொழியாகும்
அன்பே அவனது வழியாகும்"

உலகத்தில் எத்தனையோ மொழிகள் இருந்தாலும் தமிழுக்கு நிகரான மொழி ஏதுமில்லை. எத்தகைய காலமாற்றத்திலும் எல்லா புதுமைகளுக்கும் ஈடுகொடுத்து இயங்கி வரும் தொன்மை மிகுந்த மூத்த மொழி தமிழ் என்றால் அது மிகையாகாது. நான் அறிந்த அளவில் தமிழர்களை போல் மொழிப்பற்று உடையவர்கள் வேறு எவரும் இல்லை. பிற மொழிகள் தொடர்பாடலுக்காக பயன்படுத்தப்படலாம் ஆனால் தமிழர்கள் தமிழை வெறும் மொழியாக பார்க்கவில்லை. தமிழ் உணர்வோடு கலந்த மொழி. தமிழர்கள் தமிழை உயிருக்கும் மேலாக நேசிக்கிறார்கள். தாய்க்கு நிகராக போற்றுகின்றார்கள். "சாகும் வரை தமிழ் படித்து சாக வேண்டும் என் சாம்பலிலும் தமிழ் மணம் வீசவேண்டும்" என்ற வரிகளை கேட்கும் தமிழர்களின் தமிழ்ப்பற்றை எண்ணி வியக்கிறேன்.

தமிழின் பெருமையும் தொன்மையும் சொல்லில் அடங்காது தமிழின் சிறப்புக்கள் எண்ணில் அடங்காது. திராவிட மொழிகளிலேயே மூத்த மொழி, கல்தோன்றி மண்தோன்றா காலத்திற்கு முன் தோன்றிய ஆதிமொழி. பிற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி கலப்பில்லாத தூயமொழி. சங்கம் வைத்து வளர்க்கப்பட்ட பெருமை கொண்ட தொன்மை மிகுந்த மொழி. சொல் வளம் நிறைந்த செம்மொழி எங்கள் தன்னிகரில்லாத தமிழ்மொழி.

ஆம் தொன்மை, தனித்தன்மை, இலக்கிய வளம், இலக்கண வளம், தனித்து இயங்கும் தன்மை, கலை நயம், உயர்ந்த சிந்தனை, நடுநிலைமை, பொதுமைப்பண்பு. மொழிக்கோட்பாடு போன்ற தனிச்சிறப்புகள் பலவற்றை கொண்டதால் 2004 ஆம் ஆண்டு தமிழ் மொழி செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டது. தொல்காப்பியர், கம்பன், திருவள்ளுவர், ஔவையார், பாரதி, தொட்டு தமிழ் மன்னர்கள் பலரும் தமிழின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியுள்ளனர். பிறமொழி அறிஞர்கள் பலரும் தமிழை விரும்பி கற்றுள்ளனர். அத்தனை காதல் தமிழ் மீது அவர்களுக்கு.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்

இனிதாவது எங்கும் காணோம் "

என்று சுப்பிரமணிய பாரதியார் தமிழை சிறப்பித்து கூறியுள்ளார். மனித நாகரிகங்கள் தோன்ற முன்பே தமிழர்கள் மிகச்சிறந்த கலாசாரத்துடனான ஒரு கலைநயம் மிக்க வாழ்க்கையை வாழ்ந்திருப்பதை வரலாறு சான்று பகிர்கின்றது. அவர்களுடன் இணைந்து தமிழும் வளர்ச்சி கண்டுள்ளது.

தமிழுக்கு நிலவென்று பேர்

இன்பத்தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்"

ஆம் தமிழ் எங்கள் அடையாளம். நிமிர்ந்தெழுந்து நடை சிறந்து இயங்கி வரும் தமிழின் புகழ் நிலைக்க நாம் தமிழ்ப்பணி ஆற்றவேண்டும். எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால் இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும் என்கிறார் பாவேந்தர். கல்வி ஒன்றுதான் தமிழர்களின் வளர்ச்சிக்கு வித்திடும். ஒரு மனிதனின் வாழ்க்கைக்கு தாய் எவ்வளவு முக்கியமோ அப்படியே தாய்மொழியும்.

தமிழ் படைப்புகள் எப்போதும் தமிழை சிறப்பித்துக் கொண்டுதான் இருக்கின்றன. பழமையை போற்றுவது மட்டுமே தமிழ்பற்று அல்ல. புதுமையும் செய்யப்பட வேண்டும். இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ் மொழியில் இயற்ற வேண்டும் அன்றி மறைவாக நமக்குள் பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை. தமிழ் மொழியின் சிறப்புகளை அறிவதோடு மட்டுமன்றி தமிழை வளர்க்க வேண்டிய தலையாய கடமை தமிழராய் பிறந்த ஒவ்வொருவருக்கும் உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சுற்றுலாத்துறையின் தற்காலப் போக்கு..

உ.கபியங்கா
14ஆம் தலைமுறை
விருந்தோம்பல் சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவக் கற்கைநெறி

இலங்கையின் வருமானத்தில் சுற்றுலாத்துறைக்கு மிகப் பெரும் பங்குண்டு. சிறிய தீவாக இருந்த போதிலும் யுனெஸ்கோ அமைப்பினால் (UNESCO) அங்கீகரிக்கப்பட்ட பிரசித்தமான சில இடங்களை இலங்கை தன்னகத்தே கொண்டுள்ளது. இலங்கையின் விருந்தோம்பல் முறை, விழாக்கள், சுவை உணவுகள், இலங்கையின் பல் கலாசாரம், வரலாற்று முக்கியம் வாய்ந்த இடங்கள், காலநிலை, சுற்றுலா அபிவிருத்தி போன்ற காரணிகள் இலங்கைக்கு சுற்றுலாப் பிரயாணிகள் வருவதற்கு ஏதுவான காரணங்களாக அமைகிறது.

கொவிட் தொற்று மற்றும் இலங்கையின் பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த சில வருடங்களில் சுற்றுலாத்துறை பெருமளவில் பின்னடைவை சந்தித்துள்ளது.

2022ஆம் வருட சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் (SLTDA)ஆய்வுகளின் படி அண்ணளவாக 7 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். 2020 ஆம் 2021 ஆம் ஆண்டுகளை ஒப்பிடுகையில் இலங்கையின் வருமானத்திலும் மாற்றம் கிடைத்துள்ளது. 2022இல் 1136.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சுற்றுலாத்துறை மூலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்துள்ளது. 2021 ஆம் ஆண்டைக் காட்டிலும் தற்போது சுற்றுலா பயணிகளின் வருகை 270% ஆல் அதிகரித்துள்ளது. மன ஆரம்பகால சுற்றுலா முறையுடன் ஒப்பிடுகையில் தற்காலத்தில் தொழில்நுட்ப மாற்றங்களின் வழித்தோன்றல்களால் தற்போது வெகுவான அபிவிருத்திகள் இலங்கையில் இடம்பெறுகின்றன. இலங்கை பொருளாதாரத்தில் வருமானமீட்டும் துறையாக சுற்றுலாத்துறை காணப்படுகின்றது.

ஆரம்ப காலங்களை போன்று பாரிய குழுக்களாக இடங்களை பார்வையிடுதல் என்பது அருகி தற்போது பிரிவுகளுடனான (Segmented Tourism)சுற்றுலாத்துறையாக வளர்ச்சி அடைந்துள்ளது. இன்றைய சுற்றுலாத்துறை வெறுமனே இடங்களை நோக்கியதாக அமையாது வேறு சில காரணங்களாலும் இவை அமைகின்றன. சந்தோச செயற்பாடுகளுக்காக, நண்பர்கள் உறவினர்களை சந்தித்துக் கொள்ள, வியாபார நோக்கம் கருதி, மருத்துவ சேவைகளை பெற, விடயங்களைதேடி அறிய (explore), ஓய்வு( relaxation), சாகச நிகழ்ச்சிகளில் பங்குபற்ற (adventure activities), போன்ற காரணங்களால் சுற்றுலா பயணிகள் ஒர் நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு செல்கிறார்கள்.

தற்கால சுற்றுலாத்துறையின் கவனம் நிலைபேறான அபிவிருத்தியுடன் தொடர்பு பட்டதாக செல்கிறது. இதனை நிலைபேறான சுற்றுலா அபிவிருத்தி (Sustainable Tourism Development) என கூறுவர். இவற்றின் முக்கிய குறிக்கோள்களாக பொருளாதார நம்பகத்தன்மை, உள்ளூர் வள முகாமை, உள்ளூர் மக்களுக்கான நலன்களை பெற்றுக் கொடுத்தல், சூழல் மாசடைவதைத் தடுத்தல், சூழல் முகாமை, அரசியல் ஈடுபாடு போன்றனவாகும்.

சுற்றுலாத்துறை இயற்கை சூழலை பாதுகாத்துக் கொள்வதில் வெகுவான கவனம் செலுத்துகின்றது. சுற்றுலாப் பயணிகளுக்கும் சூழல் மாசடைதல் தொடர்பான விழிப்புணர்வு அறிவுறுத்தல்களை வழங்குகின்றது. சுற்றுலாத்தலங்களில் உள்ள விலங்குகளுக்கும், தாவரங்களுக்கும் தடையை ஏற்படுத்தாத வண்ணம் செயற்பாடுகளில் ஈடுபடுதல் என்பது மிக முக்கியமான குறிக்கோள்களாகும். அதுமட்டுமன்றி சுற்றுலாத்தளங்களுக்கு அருகே வசிக்கும் பிரதேச மக்களின் கலாசாரத்தை பாதுகாத்தலும், அவர்களின் வாழ்வாதாரத்தை அதிகரித்தல் என்பதும் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. அவர்களுக்கு ஏற்றால் போல் தொழில் துறைகளை அமைத்துக் கொடுத்தல் அதாவது உள்ளூர் வளங்களினை பயன்படுத்தி பொருட்களை தயாரித்து விற்பனை செய்தல் என்பது உள்ளூர் மக்களுக்கான ஒரு சந்தைப்படுத்தல் சக்தியாக கருதப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக தொலைபேசி உதவியுடன் இலகுவான முறையில் முன்பதிவுகளை மேற்கொள்ள முடிகிறது. சுற்றுலா முன்பதிவுகளுக்கென சில செயலிகளும் (Apps) தற்போது அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.(Trip advisor, Visit SriLanka, Expedia, Booking.com)இச் செயலிகள் மூலமாக இலகுவாக இனங்கண்டு பிரயாணிகள் தம் பிரயாணங்களை திட்டமிட்டுக் கொள்ள முடியும்.

விளம்பர மேம்படுத்தல்கள் மற்றும் வியாபார அதி உத்திகள் சுற்றுலாத்துறையின் தற்கால போக்குகளாகும். நவீன முறையிலான சுற்றுலா விடுதிகள், நீச்சல் தடாகங்கள், உணவகங்கள், அரும்பொருள் காட்சியகங்கள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் வரலாற்று பிரசித்தமான இடங்கள் என அவற்றுக்கான விளம்பரப்படுத்தல் உத்திகள் பலவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்படுத்தலும் இன்றியமையாதது, போக்குவரத்து நெடுஞ்சாலைகள், தொடர்பாடல் பரிவர்த்தனை வசதிகள்( communication facilities),அந்நியச்செலாவணி கொடுக்கல் வாங்கல் முறைமை, பன்முகப்படுத்தப்பட்ட வங்கி முறைமை,சுகாதார சேவைகள் என வளம் மிக்கதொரு அபிவிருத்திகள் பிரயாணிகளை கவர்கின்ற விடயங்களாக காணப்படுகின்றன. மேலும் அரச மற்றும் தனியார் அபிவிருத்திகள் சுற்றுலாத்துறையின் பொருளியல் பங்களிப்பினை அதிகரிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நிமிடம்..!

ந.சாரலன்
13ஆம் தலைமுறை
தேயிலைத் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும் கற்கைநெறி

விடியாத இரவுகளும் முடியாத கனவுகளும்
நினையாத நாளாகிப் போன
நிசப்தத்திற்கு ஒரு நிமிடம்......!

உணர்வுகள் ஒடுக்கப்பட்டு
உரிமைகள் பறிக்கப்பட்டு
உடைமைகள் சிதைக்கப்பட்டு
கனவுகள் கலைக்கப்பட்டு
ரணங்கள் வாழ்வாகி
சிதைந்த - எம்
வாழ்விற்காய் ஒரு நிமிடம்......!

நாடு காடாய் திரிந்து
நரிகளுக்கு உணவாகி
பிணங்களின் மத்தியில்
உறைந்திருந்த
உதிரத்திற்காய்
ஒரு நிமிடம்......!

முழங்கும் கணைகளின் மத்தியிலும்
மீட்டா வீணைகளாகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணைக்கப்பட்ட
விளக்குகளாகவும்
விடியலுக்காய் காத்திருந்த
அநாதைகளுக்காய்
ஒரு நிமிடம்......!

சொல்லனத் துயரங்களும்
சொல்லியழ நேரமின்றி
எம் தாய் மண்ணிற்காக
செல்களின் மத்தியிலே
செத்தொழிந்த
மறவர்களுக்காய்
ஒரு நிமிடம்......!

உயிரோடுருகி கையில்
உயிரேந்தி
உயிர் பிழைத்து
உயிர் துறந்து
உருகிவிட்ட
ஊண் உயிர்களுக்காய்
ஒரு நிமிடம்......!

விடியலைக் காணவென
விட்டில் பூச்சிகளாய்
விடைதேடி அலைந்தோம்!
வீரன் வருவானென ஏங்கி
விலை மதிப்பற்ற தாயை
இழந்து நிற்கும் எம்
தமிழ் இனத்திற்காய்
ஒரு நிமிடம்.....!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டத்திற்குள் பறக்க மறுத்ததே இல்லை, விட்டத்தை மட்டும் நாங்கள் தீர்மானித்துக் கொள்கிறோமே.....

சி.மிதுஷியா
14ஆம் தலைமுறை
ஏற்றுமதி விவசாயம் கற்கைநெறி

அன்று தொட்டு இன்று வரை காலம் காலமாக ஆண் அடக்குமுறையின் கொடூரமான சங்கிலியில் தான் பெண்கள் கட்டப்பட்டு வாழ்கிறார்கள் என்பது நிதர்சனமான உண்மை.

எவ்வளவு படிக்க வேண்டும், அதை எங்கு படிக்க வேண்டும், யாருடன் படிக்க வேண்டும், என்ன உடை அணிய வேண்டும், என்ன சாப்பிட வேண்டும், யாருடன் நட்பு பாராட்ட வேண்டும், யாரை திருமணம் செய்ய வேண்டும் என்பது வரை, ஒரு பெண்ணின் வாழ்க்கையில் சுயமாக முடிவெடுக்க முடியாது. ஏனெனில் பெண் ஒரு சமூகத்தில் ஒரு பேசு பொருள் அவ்வளவு தான்.

ஒவ்வொரு வீட்டிலும் தந்தையாக,பெரியப்பாவாக, சகோதரனாக, மாமாவாக, மைத்துனராக, ஒரு பெண்ணை அடக்கு முறை செய்ய தவறியதே இல்லை, ஒரு வீட்டில் ஆண் வாரிசு தனக்கு பிடித்த எல்லாவற்றையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையறையின்றி செய்ய அனுமதி மட்டுமல்ல ஆதரவும் இருக்கிறது. ஆனால் இங்கே பெண் தான் கேள்விக்குறியாகி நிற்கிறாள்.

ஏனென்று கேட்டால் பெண்களின் பாதுகாப்பு, பெண் மென்மையானவள் என்று முட்டாள்தனமான பதில்களை சாடுகின்றனர் ஆண்கள். குறிப்பாக ஒரு குடும்பத்தில் பெண் பிள்ளையை விட ஆண் பிள்ளையை பெரிய பெரிய பட்டப்படிப்பு மேற்கொள்ளவைப்பது ஏனெனில் தன் வீட்டிலும் சரி அவள் இன்னொரு வீட்டிற்கு செல்லும் போதும் சரி, அவள் படித்து விட்டால் எங்கே நம்மை விட முன்னேறி விடுவாளோ, இல்லை நம்மை கேள்விக்கணைகளால் ஞாயப்படுத்துவாளோ என்று அவள் திறமைகளை மேம்படுத்த வழிவகுத்துகொடுப்பதில்லை. படித்த பெண்ணாக இருக்க வேண்டும், ஆனால் வேலைக்கு செல்லக்கூடாது..இது தான் ஆண்களின் முதல் கட்டளை..

என்னுடைய மகள் நான் தெரிவு செய்பவனை திருமணம் செய்ய வேண்டும் என்பது எல்லா அப்பாக்களின் ஆசை தான், நான் அதை மறுக்கவில்லை இருப்பினும் அவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் பரவாயில்லை அவன் என் ஜாதியா என் குலத்தை சேர்ந்தவனாக இருக்க வேண்டும் இது எந்த விதத்தில் ஞாயமானதொன்று?? இங்கு பெண்ணின் குறைந்த பட்ச சுயமுடிகூட மறுக்கப்படுகின்றது....

இப்போதும் கூட பல வீடுகளில் பெண்கள் கல்வியின்றி மூடப்பழக்கங்களில் சிறைப்பட்டு, சிந்திக்கும் திறனின்றி தனித்து இயங்கும் ஆற்றல் இல்லாமல் இல்லச்சிறையில் பூட்டப்பட்டு சமையலறையில் முடங்கிக்கிடக்கின்றனர். அடுப்பூதும் பெண்களுக்கு கல்வி எதற்கு என்ற நிலையில் கல்வியே வேண்டாம் வீட்டு வேலை செய்யத்தெரிந்தால் போதும் என்ற மனநிலை கூட இப்போதும் காணப்படுகின்றது.

நான் பல இடங்களில் கண்டு மனவிரக்திக்கு உள்ளான விடயமும் உண்டு... சில வீடுகளில் ஆண்பிள்ளைகளின் குறைந்த பட்ச வேலைகளைக்கூட அந்த வீட்டில் உள்ள பெண்பிள்ளைகள் செய்யவேண்டிய நிலை காணப்படுகிறது, இங்கு பெண் என்பவள் ஒரு வீட்டுப்பணிப்பெண்ணாகவே நடத்தப்படுகிறாள் என்பது வேதனைக்குரிய விடயம்...

நீங்கள் கூறும் அறிவுரைகளை நாங்கள் பின்பற்ற மறுக்கவும் இல்லை தயங்கவும் இல்லை. அதன் தன்மை, இயல்பை மட்டும் சற்று எங்களுக்கும் பிடித்தாற் போல் மாற்றி வாழ ஆசைப்படுவதே பெண்களின் அவா?.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஆண்களாகிய உங்களிடம் நாங்கள் எதிர்பார்ப்பது வெறுமனே பெண்களுக்கான அதிகாரமளித்தல், பெண் சுதந்திரம் மட்டும் தான். இங்கு பல பேர் பெண்களுக்கான அதிகாரமளித்தல் என்பது பற்றி தவறான புரிதலை கொண்டுள்ளனர்..

பெண்களுக்கான அதிகாரமளித்தல் என்பது ஆண்களால் செய்யப்படும் வேலைகளை பெண்களும் செய்ய அனுமதியளித்தல் அல்ல பெண்களால் செய்யப்படும் வேலைகளை எவ்வித இடையூறும் இன்றி செய்ய அனுமதியளித்தலும், பெண்களுக்கான அடிப்படை உரிமை மீறப்படாமல் வழிவகுத்தலேயாகும்.

நம் சமூகத்தில் பாதிக்கு மேற்பட்டதாகக் காணப்படும் பெண்களை அடிமையாக நடத்தும் எந்த ஒரு சமூகமும் உயர்வு பெற்றதும் இல்லை பெறப்போவதும் இல்லை. எனவே நான் ஆண்களுக்கு கூற விரும்பும் ஒரே அறிவுரை "உங்கள் விலங்குகளுக்குள் சிக்குண்டிருக்கும் பெண்களை விடுவித்து அவர்களுக்கு இறக்கைகளாக நீங்கள் மாற வேண்டுமென்பதே"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் பாடல்கள்

க.கீர்த்திகா
14ஆம் தலைமுறை
விருந்தோம்பல் சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள்
முகாமைத்துவக் கற்கைநெறி

காலத்தால் அழியாது வாய்மொழி இலக்கியமாய் வளர்க்கப்பட்டு தற்போது வரை நிலைத்து நிற்பவை நாட்டார் இலக்கியங்களே. கிராமிய வாழ்க்கை முறை கிராமத்து மக்களது பொழுதுபோக்கு முறைகளை பிரதிபலிப்பவையாகவும் உள்ளன.

நாட்டார் பாடல்களில் தொழில்களின் செயலொழுங்கைக் காணலாம். நெல் குற்றல் என்பது கிராமத்து மங்கையருக்கும் அன்றாட வேலை அலுப்புத் தெரியாமல் இருக்க பாடல் இசைப்பர். பாடல்கள் பெரும்பாலும் வினா விடையாக அமையும். ஒருவர் தனது உணர்வை வெளிக்கொணர்ந்து வினவுதல் போலும் மற்றவர் விடையளிப்பது போலவும் பாடல்கள் அமையும்.

"வட்ட வட்டக் குட்டையிலே வரகரிசி தீட்டயிலே
ஆர்கொடுத்த சாயச் சோமல் ஆலவட்டம் போகுதடி"

"ஆரும் கொடுக்கவில்லை அவசாரி ஆடவில்லை
கை எரியப் பாடுபட்டுக் கட்டினேட்டி சாயசோமன்"

இவ்வாறே ஒரு கிராமத்துப் பெண்ணுக்கு அவள் உரலில் இட்ட நெல்லோ காயப்போட்ட நெல்லோ மிகப் பெறுமதியானது அதை திருடித் தின்னக் காகம் தந்திரமாக முயலும் அது கண்டு ஆத்திரம் அடைந்தவளாக அப்பெண்

"தாயாரும் இல்லை நான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியே மசித்த நெல்லு
அள்ளுகின்றாய் காகம் உனக்கு
ஆகும் என்றாய் கொண்டோடு"

என்று மிகுந்த ஆதங்கத்தோடு பாடுவது ஓர் அன்றாட நிகழ்வாகும். கிராமத்தில் இளவயதில் விதவையாகி விட்ட ஒரு பெண்ணின் அவலம் இவ்வாறு வெளிப்படுகின்றது.

"கறுப்பும் சிவப்பும் எனக்கு
கலந்துருக்க கைநோகும்
மன்னாருக்கச்சு இப்போ
மடித்திருக்க நாளாச்சே"

பட்டைக் கழற்றி வைத்தேன்
பாடகத்தை வாங்கி வைத்தேன்
ஆண்ட நகை கழற்றி நானும்
ஆபரணஞ் செப்பி விட்டேன்.

பெண்கள் தமது குழந்தைச் செல்வங்களை மடியில் கிடத்தி தாலாட்டுவதும் ஆண்கள் அவர்களை தோளில் போட்டு முதுகிற் தட்டி தாலாட்டுவதும் போன்ற மரபு ரீதியான பழக்கங்கள் நம்மை விட்டு விலகிவிட்ட போதும் நாட்டார் பாடல்களில் அவை இன்றும் நிற்கின்றன.

"அத்தை மடிமேலும்
அம்மான் தோள் மேலும்
வைத்து முத்தாடும்
மரகதமே கண்வளராய்"

அவ்வாறே கிராமத்துப் பெண்கள் தமக்குப் பிள்ளை கிடைத்ததும் அது இறைவனின் கொடை என நினைக்கின்றனர். இதை இப்பாடலில் காணலாம்.

சிற்றடிகளில்லை என்று
சிந்தை கலங்கையிலே
தம்பி நீ சிவபெருமான்
தந்த செல்வம்
பிள்ளை இல்லை என்று
பெருந்தவம் புரிகையிலே
தம்பி நீர் பெருமனார்
தந்த செல்வம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் உணர்வை வெளிப்படுத்தும் பாடல்களில் கள்ளம் கபடமில்லா கிராமிய உள்ளத்தினது பண்பினை உணரலாம்.

“கட்டை விரலழகி
கமுகப்பூ மார்பழகி – உன்னை
மணம் முடிக்க காத்திருந்தேன்
இலந்தப் பழமே – எந்தன்
இன்பமுள்ள தேன்வதையே”

இன்னும் பார்ப்போமானால் சாதாரண ஏழைக் குடும்பத்தின் கன்னிப்பெண் கல்யாணத்துக்காக காத்திருக்கிறாள். சீதனம், சொத்து என்று எதுவுமில்லை. அவ்வேளை ஒரு வயோதிபர் நல்ல செல்வந்தன் அவளை மணம் பேசி ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இதனை பெண்ணின் தோழி அவளை கிண்டல் செய்கிறாள்.

“சின்னச் சின்ன வண்டி கட்டி
சிவப்பு மாடு ஒன்று பூட்டி
வண்டி முட்ட பாரமேத்தி
வாறாண்டி உன் புருசன்
காற்று அடித்த பின்பு
காட்டில் மரம் நின்றது போல்
உச்சியில் நாலுமயிர்
ஓரமெல்லாம் தான் வழுக்கை
கண்ணும் ஒரு பொட்டை
காதும் செவிடாகும்.”

ஆனால் இங்கு தாயோ வேறு விதமாக கூறுகின்றாள். வயது ஏறினாலும் நீ அவனையே மணம் முடி என்றும் வலியுறுத்துகிறாள்.

“கடப்பை கடந்து நீ
காலெடுத்து வைத்தாய் என்றால்
இடுப்பை முறித்து - இந்த
இலுப்பையின் கீழ் போட்டிடுவேன்”

பின் கோபம் தணித்து பிள்ளைக்கு தனது ஏழ்மையைக் காட்டி மகளை இணங்க வைக்கும் பாங்கு நயக்கத்தக்கது.

“தோட்டம் துரவுமில்லை
தொகையான காசுமில்லை
சீதனமாய் கொடுத்து – மகளே
சீராக மணம் முடிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டியலும் மோதிரமும்
அழகான ரவிக்கைகளும்
வாங்கி தருவார் உனக்கு
அவருக்கு வயதுமோர் அறுபது தான்."

மேற்கூறியவற்றோடு உழவுத்தொழில் சார்ந்த பாடல்களும் பாடப்பட்டுள்ளன. ஏறத்தாழ கால் நூற்றாண்டிற்கு முதல் வாழ்ந்த உழவர் பெருமக்கள் ஏர்ப்பாட்டு, அருவிப்பாட்டு என்று பாடினார்கள்.

பொலிப்பாட்டு:

கணபதியே கரிமுகனே பொலி பொலி
கந்தனுக்கு மூத்தோனே பொலி பொலி
பானை வயிறோனே பொலி பொலி
மேந்தும் கையோனே பொலி பொலி

ஏர்ப்பாட்டுக்களில் எருமையை கடாவை பொதுவாக வைத்து அதனை செல்வன் என வாழ்த்துப் பாடினார்கள்.

"சார்பார்த்த கள்ளனடா — செல்வன்
தாய் வார்த்தை கேளன்டா
பாரக் கலப்பையடா செல்வத்து
பாரமேத்த தோணுதடா

இவ்வாறு பாமரமக்களான நம் முன்னோர்கள் உருவாக்கிய இந்த நாட்டார் இலக்கியங்கள் இப்போதும் நயக்கத் தக்கனவையாகவே உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் முத்தம் உனக்காக....

கி.ஆபியா
15ஆம் தலைமுறை
விலங்கு உற்பத்தியும் உணவுத்
தொழில்நுட்பமும் கற்கை நெறி

குமரியில் பூத்த தெள்ளமுதத்தேன் - நீ
பாரினில் பரந்த நாணிசைத்தாய்
செவ்வேலவன் அருளிய மறையால்
ஔவைக்கிழவி வழிவந்த
பூம்பாவையே!

நான்முகன் தந்த நான்மறையும் இங்கே
திக்கற்றுப்போகிறது - பேதை
உன்னால் எழுந்த காவியங்களால்..
காலமகனின் கடமையும்
கானலாகிவிடும் கண்ணே
உன் கர்வம் கண்டு

வசைத்தமிழனின் கவி கூட
உன்னை வர்ணிக்கத்தான் ஏங்குகிறது
வஞ்சிக்கொடி உனை பாடவே!
புல்லரும் ஏங்குவார் உன் பூர்வீகம்
கண்டு பாரினிலே..

இலைநுனியின் பனித்துளி
கதிரவன் கண்டு உருகினாலும்
உன் சிலம்பத்தின் ஒலிகொண்டு எழுவேன் என்
கார்மேகக்காரிகையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்திசை எங்கும்
ஐம்பூதமாய்
ஏழு ஸ்வரங்களின் ஒலியுடன்
நானிசை அருளிய காந்தை தேவியே!
உன் புகழ் பாடினான் முப்பால்முனியும்..

விசை கொண்டு ஈர்த்த நியூட்டனும்
உன் விந்தை கண்டு அஞ்சுவான் அவன் ஆவி
நீடித்திருந்தால்..
எத்துணையும் இன்றி வாழ்கிறாய்
முக்காலமும் வென்ற ராணியாய்..

அங்கம் வகித்திடவே சங்கமாய்
எழுந்தாய்-உன் அங்கங்கள்
ஒவ்வொன்றும் காப்பியங்களாகவே
சங்கமத்தில் ஓர் சந்தம்
இசைப்பாய்!

அன்னை அவள் மடி தேடிச்சாயும் என்
சிரங்களும்
இன்று உன்னுயர்வு கண்டு எழுகிறது
உவகை கொண்டு- என் உனக்குத்தான்.
செந்தமிழ்தாயே முதல் முத்தம்
உனக்குத்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டர் வாழ்க்கை

இ.தனுஜன்
15ஆம் தலைமுறை
கனிப்பொருள் வளங்கள் தொழில்நுட்பம்
கற்கைநெறி

என்னுடைய கிராமத்துக்கு செல்வதற்கு பொது போக்குவரத்து சேவை பேருந்துகள் அவ்வளவு எளிதில் கிடைப்பதில்லை, அதனால் நேரத்துடன் சென்றடைய மடுல்சீமைக்கு தேயிலை ஏற்றிச் செல்லும் டக்டர் வண்டி வியாபாரத்திற்காக வரும் பட்டணத்து வண்டிகளில் ஏறி செல்வதுண்டு. நேரத்துடன் செல்லவேண்டிய எனக்கு அன்று தேயிலை டக்டர் வண்டிகள் எதுவும் கிடைக்கவில்லை. வீதியின் ஓரமாக பாறை ஒன்றில் அமர்ந்து கொண்டேன். ஒரு பெரியவர் என்னை நோக்கி நடந்துகொண்டிருப்பதை அவதானித்தேன். ஆள் பார்க்க எழுபது வயது தாண்டியிருக்கும் நரைத்த முடி, வலுவில்லாத ஒரு கை தடி பற்களை இழந்து விட்டதால் தாடை ஓய்வெடுக்க முடியாமல் கட கடவென ஆடிக்கொண்டே இருந்தது. தாடையுடன் சேர்ந்து தலையும்தான். அந்த ஆட்டத்தை வைத்துத்தான் வயதை தீர்மானித்துக்கொண்டேன். கையில் ஒரு கிழிந்த நூறு ரூபாய் தாள் வைத்திருந்தார். கிழிந்த தாள் என்று ஒரு வார்த்தையில் விபரித்திட முடியாது.

கிழிந்த தாளா அது? சிறு பிள்ளையிடம் ஒரு நோட்டையும் கத்தரிக்கோல் ஒன்றையும் கொடுத்தால் அப்படித்தான் இருக்கும். நடுபகுதியில் வெளிச்சம் ஊடு புகும், குழப்பம் வேண்டாம் நடுப்பகுதியில் ஒரு ஓட்டை. ஓட்டை விழுந்த நோட்டுடன் நெருங்கினார். பேச ஆரம்பித்தார் சிங்களத்தில் “இந்த நோட்டை எந்த கடையிலாவது வாங்கிக்கொள்வார்களா?” என்று கேட்டார். எனக்கு விளக்கம் கொடுக்கும் அளவுக்கு சிங்களம் பேசத்தெரியாது ”கடையில் கேட்டுப்பாருங்கள்” என்று எளிதாக முடித்துவிட்டேன். மெதுவாக கடந்து சென்று ஒரு கடைக்குள் நுழைந்தார் அதே கணத்தில் நான் கற்பனைக்குள்ளும் நுழைந்தேன். நீண்ட


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாட்களுக்கு பின்னர் தன் பேரப்பிள்ளைகளை பார்க்க செல்லவிருந்த அவர் உண்டியலில் எடுத்த காசு வெளியே வருவதற்குள் கிழிந்து விட்டது. தாத்தா வாங்கிவரும் இனிப்புக்கு காத்திருக்கும் பேரப்பிள்ளைகளுக்காக இந்த மனுசன் கடையேறி இறங்குகின்றார் என்று கற்பனை முடிந்தது. பெரியவரை அந்தக்கடையில் இருந்து வெளியேற்ற அடுத்த கடைக்குள் நுழைந்தார். நானும் அடுத்த கற்பனையில், எங்கள் பிரதேசத்தில் கூன் விழுந்தவர்களுக்கும் கூலி வேலைகள் தேயிலை மரத்தடியில் உண்டு அந்த வேலையை முடித்து வீடு திரும்பும் அவருடன் பேருந்து கட்டணத்துக்கு அவ்வளவுதான் பணம் மீதம் அதை வைத்து வீட்டுக்கு செல்லமுடியாமல் பேருந்து தரிப்பிடத்திலோ சாலை ஓரத்திலோ தூங்கப்போகிறார், பெரியவர் இரண்டாம் கடையிலும் புறக்கணிக்கப்பட்டு வெளியே வந்தார். கற்பனைகள் போதும் எது நேர்ந்துவிட்டாலும் நானும் காரணமாகிவிடுவேன் என்ற குற்ற உணர்ச்சியில் அவரை நெருங்கினேன். முதலில் அவரிடம் அவ்வளவுதான் பணம் இருக்கிறதா என்று அறிய முற்பட்டேன். முதுகு வளைந்த அந்த மனிதருக்கு மேல் பாக்கட்டில் பணம் இல்லை என்பதை அறிய அவ்வளவு சிரமமாக இருக்கவில்லை. கீழ் பாக்கட்டை பற்றிய ஆராய்ச்சி தேவையில்லை வேட்டி அணிந்திருந்தார். எனக்கு தெரிந்த விதத்தில் அவரிடம் சீயா, எச்சராய் த சல்லி தியன்னே என்று கேட்க அவர் “ஓவ் புத்தா” என்றார். என்னிடம் இருந்த புதிய நோட்டை அவரிடம் கொடுத்துவிட்டு அந்த கிழிந்த நோட்டை வாங்கி சொருகிக்கொண்டேன். அவர் சிங்களத்தில் நன்றி கூறியது எனக்கு புரியவில்லை. அந்த இடத்தை விட்டு விலகினேன் நூறு பேருக்கு அன்னதானம் வழங்கிய திருப்தியுடன் அவ்விடத்தை விட்டு விலகி சென்ற எனக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது.

அந்த பெரியவர் என்னை நோக்கி நடந்து வந்தார் ஆனால் பார்வை இப்போது என் மீது இல்லை. கீழே குனிந்தபடி கடந்து சென்றார். ஒரு குறுகிய பாதை ஒன்றினுடாக உள் நுழைந்தார். பாதைக்கு அருகில் ஒரு பெயர் பலகை வைத்திருந்தார்கள். மாலை நேர சூரிய ஒளி பீறிட்டு எறித்தது பெயர் பலகையில் இருப்பதை வாசிக்க சிரமமாக இருந்தது. ஒரு இளம் பெண் எனக்கு அருகில் சோர்வான முகத்துடன் நின்று கொண்டிருந்தாள் அவளிடம் கேட்டேன் ”அக்கா அந்த போட்டுல என்ன எழுதிருக்கு”நான் கேட்ட கேள்விக்கு அவளின் சோர்வான முகத்தில் திடீரென மலர்ந்த புன்னகை மட்டுமே பதிலாக கிடைத்தது. எதும் தவறாக கேட்டுவிட்டோமா என்ற பதட்டத்துடன் பெயர் பலகையை நோக்கி நடந்தேன். அதில் எழுதியிருந்தது “கள்ளு தவறணை”. சற்று நிமிர்ந்தேன் கூன் விழுந்த பெரியவர் இப்போது நிமிர்ந்து விட்டார். நேராக நின்று என்னை பார்த்து கை அசைத்தார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விருதி வாழ்க்கை...

வி.யதுர்ஷனா
14ஆம் தலைமுறை
கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம்
கற்கைநெறி

நான்கு சுவர்களில் நடுவில் நான்கு கட்டில்கள். கட்டில்கள் ஒவ்வொன்றும் எத்தனையோ விரிவுரையாளர்கள் விஞ்ஞானிகள் சுமந்தவை தான்..

முதல் முதலில் ஓர் வெட்டிப்பயலை சுமக்க விசுவாசமாய் காத்திருந்தது அவசரமாக ஓடி வந்து அவர் அவர் சௌகரியத்திற்கு ஏற்ப கட்டில்களை பிடித்து கொண்டார்கள். எனக்கான கட்டில் என் வருகைக்கு காத்திருந்த தருணம் அது. ஆறுதலாக வந்த நான் பிடிக்கவில்லை என்றாலும் வசதிகள் வேறு இல்லை அதனால் அன்று அதில் தூக்கம் எனக்கு..


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இராக்கைகள் அலுமாரிகளில் முதல் வந்தவர்களுக்கு முன்னுரிமை என்றாகிவிட்டது. எனக்கு என ஓர் ஓரத்தில் ஓர் அடியில் சிரிது இடம் என் ஆடைகள் அதில் உறங்க...

முதல் நாள் யாரும் பேசவில்லை. விட்டு சென்ற அம்மா விட்டு வந்த ஜிம்மி என்று அவர்களின் நலன்கள் விசாரித்துக் கொண்டே இருந்தார்கள். அம்மாவின் முந்தானை பற்றியே தூங்கிய எனக்கு அன்றைய நாள் தூக்கமே வரவில்லை. தலைக்கு மேலே சுழலும் மின்விசிறி போல எண்ணங்கள் என்னை விட்டு சுழன்று கொண்டே இருந்தது. என் எதிர் கால கனவுகள் வேட்டையாடும் வெறிநாய் போல துரத்த ஆரம்பித்தன.

இவற்றுக்கும் நடுவில் ஒரு சில தோழிகள் தங்கள் காதலர்களோடு குசு குசு என பேசிக்கொண்டு இருந்தனர். அது ஆழ்ந்த உறக்கம் வரும் போது காதில் வந்து பாடிச் செல்லும் கொசு போல என் நித்திரைக்கு சற்றும் இடம் கொடுக்கவில்லை. சுவரில் மாட்டி இருந்த சுவர் கடிகாரத்தின் செக்கன் முள்ளை நிமிட முள் துரத்திக்கொண்டு இருந்தது. அன்று மட்டும் எனக்கு மிகவும் மெதுவாக நகர்வது போல் இருந்தது.

ஏதோ தெரியவில்லை சற்று கண்ணயர்ந்தேன் அதற்குள் விடிந்து விட்டது. தோழிகள் எல்லோரும் பரபரப்பாக இயங்கிக் கொண்டு இருந்தனர். நான் பதறி எழுந்தேன். பற்பசை இல்லை என ஒருத்தி, சீப்பு இல்லையென ஒருத்தி, பவுடர் பொட்டு கேட்டு ஒருத்தி என கடன் வாங்கும் வேலையை ஆரம்பித்து வைத்தார்கள்.

சரி என கண்ணை கசக்கி கொண்டு பற்பசை பிறசில் பிதுக்கி கொண்டு குளியலறை பக்கம் சென்றேன். அங்கு திருவிழா கூட்டம் போல எல்லோரும் காத்திருந்தனர். குளிப்பதற்கு என நானும் என் வரிசையில் காத்திருந்து தாமதமாக காகம் தோய்வது போல் தோய்ந்து கொண்டு பஞ்சாவியை மாட்டிக் கொண்டு தலையை இரட்டையாக பின்னி முடிந்து கொண்டு புறப்பட்டேன் என் தோழிகளோடு.

ஆம் இப்போது உங்களுக்கு சந்தேகம் எழலாம் வந்த ஓர் இரவில் எப்படி நண்பர்கள் ஆனார்கள் என்றுதானே. அது ஒன்றுமில்லை கடன் கேட்டவர் அனைவருக்கும் தானம் வழங்கியது என் தங்க கைகள் தான். அதில் இருந்து எல்லோரும் நண்பர்கள் ஆகிவிட்டோம். சரி கதைக்குள் வருவோம் இப்படியே வேகமாக நடந்து வரும் போது கண்ணில் படும் ஜீன்ஸ் ரீசேட் அணிந்தவர் எல்லாம் சிரேஸ்டர்கள் போல் காட்சி அளித்ததால் குனிந்த தலை நிமிராமல் குடு குடு என நடந்து பல்கலை படியை அடைந்தேன். அட நம்ம போறதுக்கு முன்னாடியே சனியன் போய் வாசலில் காத்திருந்து என்னை வரவேற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூப்பிட்டான் ஒரு குடுமி வளர்த்தவன். பார்ப்பதற்கு பாதாளக் கொள்ளையன் போல் இருந்தான். தலைமுடி வளர்த்து தாடி மீசை கூட வெட்டாமல் சவர கடைப்பக்கம் மழைக்கு கூட ஒதுங்கி இருக்க மாட்டான் போலும் இந்த நான்கு வருடமும். கூப்பிட்டவன் தொனி காதில் விழாதது போல் நடக்க சிறு கல் கொண்டு எறிந்தான் திரும்பி பார்க்க கையசைத்து அழைத்தான் அருகில் போனேன் அறிமுகம் செய் என்றான் அறிமுகம் செய்வதற்குள் என் அரை உயிர் போய்விட்டது. மீதி உயிரை பறிக்க என அதே தாடி மீசையுடன் அவன் சாகாக்கள் அருகில் வர அறிமுகம் செய் என்றான் அவர்களுக்கும் அறிமுகம் செய்வதற்குள் கண்களில் நீர் கசிய என்ன நடிக்கிறியா என்று கேட்டான் ஒருவன். குரைக்கும் நாயை கண்டால் விலகி செல் என்று சிறுவயதில் அம்மா கூறியதன் அர்த்தம் எனக்கு அன்றுதான் புரிந்தது. என்னை கட்டுப்படுத்தி கேட்டது எல்லாம் செய்தேன்.

பாவிகளிடம் இருந்து காப்பாற்ற என அங்கு ஓர் அண்ணா வர இவர்களும் எழுந்து சென்றார்கள். சரி என நம் விரிவுரை அறையை கண்டு பிடிப்பதற்குள் விரிவுரையாளரும் வந்து விட்டார் வேளா வேளைக்கு போயிருந்தால் சௌகரியமாய் பிடித்திருப்பேன் பின்னாடி ஓர் கதிரை. இப்போது என்ன செய்ய முன்னாடி கதிரைகள் மட்டுமே காலியாய் இருந்து அமர்ந்தேன். தொடங்கினார் அவர் ஆங்கிலத்தில் ஏதோ சொல்கின்றார் சிங்களத்தில் அட்வைஸ் சொல்கிறார். இதில் பகிடி என்ன என்றால் இரு மொழிகளிலும் எனக்கு சுத்தமாக தெரியாது. கத்தி சொன்னால் கூட காதோடு சரி மூளை அவற்றை வாங்க சிறிதளவும் முன்வராது. என்ன செய்ய என் முதல் செமி ஆங்கிலத்தோடு போராட்டம். இரண்டாம் வருடம் கொரோனாவோடு திண்டாட்டம். மூன்றாம் வருடம் ஆரம்பிக்க முழுவதுமாக படிப்பித்து பரீட்சை ஆன்லைனில் இல்லை ஆ.்.ப்லைனில் என்றார்கள் என்ன செய்வது.

என் பரீட்சை அத்தனையும் செய்ய என்னை சுத்தி வர Google, சுழன்று பார்த்தால் சுற்றிலும் கேள்விக்கான பதில்கள், பக்கத்தில் ஏற்கனவே படித்த பங்காளி, இது போதாது என நண்பர்கள் குழு வேறு. பார்த்து எழுதுவதை மட்டுமே பழகிய எனக்கு அந்த பரீட்சை நேருக்கு நேர் என்று பாவி மகன் நெஞ்சில் நஞ்சை ஊற்றி என் பிஞ்சு மனதை பஞ்சாய் பறக்க விட்டார்கள். விடியவிடிய படிச்சு விதம் விதமா கேள்வி செய்து பரீட்சை தாள் புரட்டி பார்த்தால் நான் படித்த எதுவும் கேள்வியில் இல்லை. ஏதோ தெரிந்த எல்லவற்றையும் எழுதி நிரப்பி அந்த பரீட்சை முடித்து முடிவுக்காக காத்திருக்கிறேன்.

சரி படிப்பை விட்டு பங்காளிகள் வாழ்க்கைக்குள் போவோம். என் பங்காளிகளை பொறுத்த வரை செல்போன் காதலர்கள் இவர்கள் ஊரில்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காதலன் இங்கு காதலி என வாழ்பவர்கள், ஒரே கோப்பையில் உண்பவர்கள் இந்த வகையான காதல் ஜோடிகள் காதலன் காதலி என இருவரும் ஒரே இடத்தில் இருப்பவர்கள், பாய் பெஸ்டி என ஒருவகை காதலர்கள், ஒருதலைக் காதலர்கள் இப்படித்தான் பல வகை காதல். பாவப்பட்டவள் என்னிடம் ஒரு காதல் இருந்தது அது ஒருதலைக்காதல் தான் அதை சொல்லி என்ன பயன்.

நாட்கள் நகர்ந்து வருடங்கள் ஆகியது மூன்று வருடங்கள் உருண்டோடி விட்டன அதே காலேஜில் நானும் சற்று மாறிவிட்டேன் சுடிதார் இங்கே நவீன ஆடையானது சுட்டு போட்டாலும் வராது என்று எண்ணிய ஆங்கிலம் நாக்கில் நின்று நடனமாடுகிறது. அவ்வப்போது சிங்களமும் சேர்ந்து ஆடுகின்றது. ஆம் நான் காலேஜில் கற்றுக்கொண்டது பொறுமை, சகிப்பு தன்மை, விட்டுக்கொடுத்தல், தனித்து முடிவு எடுத்தல், தக்கனப்பிழைத்தல் இத்தனையும் கற்று தந்த காலேஜ்யை பிரிந்தது செல்ல இன்னும் இருப்பது ஓராண்டுகள் மாத்திரமே. காத்திருக்கிறேன் மூன்று வருடங்கள் முடித்து நான்காம் வருடத்தில் என் பட்டத்தை பெற்று பறந்து செல்ல வேடம் தாங்கலாய் பறந்து வரும் அன்னிய பறவை போல் தான் நாமும் வாழ்க்கையை நோக்கி பறந்து கொண்டே இருப்போம்....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்...

சு.கலையரசன்
14ஆம் தலைமுறை
விலங்கு உற்பத்தியும் உணவுத்
தொழில்நுட்பமும் கற்கை நெறி

நான்
அவலங்களின் ஓர் உருவமா..
உணர்வுகள் உருக்குலைந்த பொம்மையா...
உரிமைகளை சிறைவைத்த ஊமையா..
முழுவதுமாய் தடுப்புக்காவலில்
இருக்கும் கைதியா ..

நான்..
ஓர் உயிர் சுமந்த பிண்டமா.
சமத்துவம் பேசி விற்கப்படும் சதைப்
பொருளா..
நான் ஓர் நிர்வாணமான காட்சிப்
பொருளா..

என்னிடம்
பேனையை பறித்து கரண்டியை
திணிப்பது முறையா..
சுயமாக முடிவெடுக்க முடியாத
சுய நல பாவியா..
தெய்வத்தில் சித்தரிக்கின்றாய்
ஆனால் அத்வைதத்தில் அடக்கி விடுகிறாய்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பிலே கள்ளிப்பால், சற்று வளர்ந்தேன்
பருவமானேன் மாதம் மூன்று நாள் மரணவலி
குழந்தை பெறும் போது கொடிய வலி
கோயில் போக முடியாத தீட்டு வலி..
காதல் என்ற சாட்டு என்னிடம் களவாட படுகிறது
என் கற்பு
என்னும் பூட்டு ..
கணவனை இழந்தால் விதவை
ஒதுக்கி விடுகிறார்கள் என் உறவை..

என் பருத்த மார்புகளை பார்த்தால் புசிக்க
தோனுகிறதா எப்படியடா தோனாமல்
இருக்கும் உனக்கு..

உன் அன்னையிடம் பால் குடித்த சுகத்தை
மறந்தவனாய், தூய்மை தினத்தில் நான்
துடிதுடித்து இடுப்புவலியில் உயிர்வெடித்து
குடல் சுருங்கி குமிறி அழும் அழுகை வலி
அறியாதவனாய் நீ இருந்தால்..

என்னை கண்டால் புசிக்க தோனுகிறதா
உன் ஆண்மைக்கு என் பெண்மையை
இரையாக்க உன் எண்ணம்
அலைபாய்கிறதா எப்படித்தோனாமல்
இருக்கும் உனக்கு ..

தூய்மை தினத்தில்
பிசுபிசுத்து ஒழுகும் உதிரத்தின் மூலமான
அடிவயிற்றின் வலி அறியாதவனாய் விட்டு
விட்டு உதிரும் உதிரத்தின் நாற்றத்தை
துளியளவும் உணராதவனாய் நீ இருந்தால்...

வளைந்து நெளிந்து என் இடையின்
அழகை
கண்டு உன் மனம் சபலத்தில்
அலைபாய்கிறதா அப்படி அலைபாய்ந்தால்..

தூய்மை தினத்தில் என் இருதொடை
இடுக்கில் அணையடை உரசி உரசி
சிவந்து போன என் புண்ணின் எரிச்சல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியாதவனாய் நீ இருப்பாய் ..

பெண் என்றால் உனது இச்சை பண்டமா நீ
ருசித்து எறியும் சாக்லேட் கவரா ..
இல்லை உன் போதைக்கான சைட்டீஸ் ஆ
உன் கலவி இச்சையை தீர்த்து துடைத்து
போட்டு மார்தட்டி ஆணென்று அகந்தை கொள்ள ...

மூடனே!!.
கேள் பெண் என்பவள் அழகின் பெட்டகம்
அல்ல நான் கீழிருந்து மேலான வலிகளின் குத்தகை..

இந்த பூமியின் தொடக்கம் இந்த பூலோகமே
என்னில் தான் அடக்கம் ஆணாக நீ
சுமக்கும் வலிகளை விட பெண்ணாய்
பிறந்து நான் அனுபவிக்கும் வலிகள் ஏராளம்...

பிறப்பு முதல் இறப்பு வரை இன்னொருவர்
நலனுக்காய் போராடும் போராளி- நான்
இன்றி அகிலம் இல்லை நான் அனுமதிக்கா
விடில் நீ உலகில் இல்லை ..

பிள்ளை பெறும் இயந்திரம் அல்லடா நான்
எனக்குள்ளும் ஆன்மா உறைகிறது
எனக்குள்ளும் அன்பு, பாசம், பரிவு,
காதல் கருணை, அத்தனையும் கொட்டிக் கிடக்கிறது ..

என்னையும் வாழ விடு அகிலத்தில் சிறகை
பிய்த்து கூண்டில் அடைக்காதே
திறந்து விடு நானும் பறவையாய்
பறக்கின்றேன் பாரையும் ரசிக்கின்றேன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்முக சிந்தனையாளர்களும் வேலையுலகும்

ராயக்கோண் கிறிஸ்ரன்
16ஆம் தலைமுறை
கணினி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் கற்கைநெறி

உள்முக சிந்தனையாளர்கள், அதாவது ஆங்கிலத்தில் introverts என அழைக்கப்படுபவர்கள் யாரெனில், சமூக நகர்வு மிகவும் குறைந்தவர்களாக காணப்படுபவர்கள். தனிமை விரும்பிகள். சிலர் தமது பிறந்த நாளை கூட தனிமையில் கழிக்க விரும்புவார்கள் என்றால் பாருங்கள்! இது மிகவும் நிம்மதியான வாழ்வாக தென்படலாம். ஆனாலும் மனிதன் ஒரு சமூக விலங்கு. வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் இன்னொரு மனிதனை சார்ந்தே வாழ முடியும். பிறப்பு, பாடசாலைக்காலம், தொழில், சுகாதாரம், காதல், திருமணம் என வாழ்க்கையில் ஒவ்வொரு பகுதியிலும் இன்னொரு தனி மனிதனையோ, அல்லது ஒரு சமூகத்தையோ சார்ந்து வாழும் நமக்கு அவர்களுடன் சரியான முறையில் தொடர்புகளை பேணுவதற்குரிய திறன்கள் அத்தியாவசியமானவை ஆகும்.

எனினும் பிறப்பில் இருந்து தனிமையை விரும்பி, சமூகத்தில் மறைந்து வாழ்ந்தவர்கள் இத்திறன்கள் குன்றியவர்களாகக் காணப்படுவர் என்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை. இவ்வாழ்வியல் முறை ஒரு வயதிற்கு மேல் இவர்களுக்கு பாரிய சவாலாக அமைந்துவிடுகிறது. அதிலும் முக்கியமாக தொழில் என்று வரும்போது தொடர்பாடல், கலந்துரையாடல் போன்றவை தவிர்க்க முடியாத ஒன்றாக அமைவதோடு, உள்முக சிந்தனையாளர்களுக்கு தினம் வேலைக்கு செல்வதே சவாலாக அமைந்து விடுகிறது. எனினும் கவலை வேண்டாம் உள்முக சிந்தனையாளர்களே! உங்களுக்காகவே மனித தொடர்பு மிகவும் குறைவான சில நவீன தொழில்களை தேடி எடுத்து வந்துள்ளேன். இவற்றில் எது உங்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவிற்கு வழிவகுக்கிறதோ அதை பற்றி உங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

1. கணக்காளர் - Accountant

தனிமை சலிக்காதவர்களுக்கான சிறந்த தேர்வு. நீங்கள் சிறு விஷயங்களிலும் மிக அவதானத்துடன் செயற்படுவர்களாயின் இந்த தொழில் உங்களுக்கானது. அத்துடன் நீங்கள் மனிதர்களுடன் நகர்வதை விட எண்கள் எழுத்துக்களுடன் நகர்வதே அதிகமாக இருக்கும். ஆகவே உங்க தனியுலகம் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவு.

2. காணொளி பதிப்பாசிரியர் (Video Editor)

இன்றைய டிஜிட்டல் தொழில்களில் காணொளி பதிப்பாசிரியர் தொழிலுக்கு முக்கிய பங்குண்டு. வளர்ந்து வரும் டிஜிட்டல் கலாசாரத்தில், ஒரு தகவலை வாசித்து கிரகிப்பவர்களை விட காணொளியாக பார்த்து கிரகிப்பவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருவதால் இத்தொழிலிற்கு எதிர்காலத்தில் அதிக கேள்வி இருப்பதற்கான வாய்ப்பு அதிகம். அத்துடன் இத்தொழிலில் நீங்கள் உங்கள் கணிணியிலேயே 90 வீதமான நேரத்தை செலவிட இருப்பதனால், உள்முக சிந்தனையாளர்களுக்கு இத்தொழில் மிகப் பெரிய வரப்பிரசாதமாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

3. வரைகலை வடிவமைப்பாளர் (Graphics Designer)

தற்போது வரைகலைவடிவமைப்பானது கவர்ச்சிகரமான தொழில்களில் ஒன்றாகத் திகழ்கிறது. (வேலையிலும், சம்பாத்தியத்திலும்) இத்தொழிலில் ஒவ்வொரு திட்டப்பணியின் ஆரம்பத்திலும் சில கலந்துரையாடல்களை கடக்க நேர்ந்தாலும், அதைத்தவிர்ந்த முழு நேரமும் நீங்களும் உங்கள் மூளையும் தான் உரையாடலில் இருக்க வேண்டும். ஆகவே உள்முகசிந்தனையாளர்களுக்கு இத்தொழில் மிகச்சிறந்த உடனிருப்பாக அமையும்.

4.உள்ளடக்க மேலாளர் (Content Manager)

வலை உள்ளடக்கம், வலைப்பதிவு போன்றவற்றில் ஆர்வமுள்ள உள்முகசிந்தனையாளர்கள் இத் தொழிலை தெரிவு செய்வது சிறந்தது. வலைத்தளங்களை மேற்பார்வை செய்தல், உள்ளடக்கங்களை நிர்வகித்தல் போன்றவை இத் தொழிலில் உள்ளடங்கும். மற்றும் தரவுகளை உள்ளிடல், கையாளுதல், வலை அபிவிருத்தி போன்ற செயற்பாடுகளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடங்குவதால் கணணி விஞ்ஞான மாணவர்கள் தெரிவு செய்வதற்கான சிறந்த தொழிலாக அமைகிறது.

5. ஆராய்ச்சி விஞ்ஞானி (Research Scientist)

நீங்கள் விஞ்ஞானத்தின் விந்தைகளை அறியத் துடிக்கும் மாணவனாக இருப்பின் இத் தொழிலையும் கவனத்திற்கொள்ளுதல் பொருத்தமானதாக அமையும். அரசாங்க நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், உணவு உற்பத்தி மற்றும் விநியோக கம்பனிகள் என உங்களுக்கு தகுந்த எந்த களத்திலும் வேலை வாய்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். ஆராய்ச்சியின் சில நேரங்களில் கலந்துரையாடல்கள், விளக்ககாட்சிகள் போன்றவற்றில் ஈடுபட வேண்டி இருந்தாலும், வேலையின் அதிக பொழுதை தனிமையிலேயே செலவழிக்க வேண்டியிருக்கும் என்பதனால், இத்தொழில் உள்முகசிந்தனையாளர்களுக்குக்கான சிறந்த தொழில் தெரிவுகளில் ஒன்றாக அமையும்.

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்நாளின் எஞ்சிய பகுதியின் ஒவ்வொரு நாளையும் எவ்வாறாக கழிக்க ஆசைப்படுகிறான் என்பதை பொறுத்தே அவர் அவரது தொழில்கள் அமைதல் வேண்டும். மேற்குறிப்பிட்ட தொழில்கள் என்னதான் உள்முக சிந்தனையாளர்களுக்கு பொருத்தமானதாக அமைந்தாலும் தொடர்பாடல் திறன்கள், தலைமைத்துவ பண்புகள், மேடைப் பேச்சு போன்றவை தொழில் உலகிற்கும் சமூக வாழ்விற்கும் மிக மிக அத்தியாவசியமான மென்திறன்களாக அமைகின்றன. ஆகவே, இளம் வயதிலிருந்தே அத்தகைய மென்திறன்களை வளர்த்துக்கொள்ளுதல், கால ஓட்டத்தில் மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

ஆகவே உள்முக சிந்தனையாளர்களே, உங்களது அநாவசிய பயத்தையும், தடுமாற்றத்தையும் வீட்டு சக மனிதர்களோடு பழகி, பகிர்ந்து சமுதாயத்தில் உங்களுக்கான இடத்தை வெற்றிடமாகவிடாமல் பேணிக்கொள்ளுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வள அபிவிருத்தி

கிறிஸ்டின் ஜெ.அ
16ஆம் தலைமுறை
மனிதவள மேம்பாட்டு கற்கைநெறி

இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பீடத்தில் மனித வள அபிவிருத்திப் பிரிவில் முதலாம் ஆண்டு இளங்கலைப் பட்டதாரியான நான் எனது பட்டப்படிப்பு பற்றிய எனது பார்வையைப் பகிர்ந்து கொள்கிறேன். நான் வணிக மேலாண்மையில் மனித வள அபிவிருத்தியை சிறப்புப் படிப்பாக தொடர்கிறேன், இது ஒரு தனித்துவமான பட்டப்படிப்புத் திட்டமாகும்.

மனித வள மேம்பாட்டுத் துறையானது (HRD) நிறுவன செயல்திறனை மேம்படுத்துதல், நிலையான வளர்ச்சிக்கு உந்துதல் மற்றும் தனிமனித திறன்களை வளர்த்தல் போன்றவற்றில் முக்கிய பங்கு வகிக்கிறது. இக் கட்டுரையானது மனித வள மேம்பாட்டுப் படிப்பு, அதன் முக்கியத்துவம், அது உள்ளடக்கியுள்ள பாடங்கள், அது வழங்கும் வேலை வாய்ப்புகள் மற்றும் அதன் எதிர்காலம் போன்றவற்றை ஆராய்கிறது.

மனித வள மேம்பாடானது நிறுவனங்களுக்குள் மனித மூலதனத்தின் மூலோபாயம் மற்றும் முறையான வளர்ச்சியில் பிரதானமாக கவனம் செலுத்துகிறது. இது பயிற்சி மற்றும் மேம்பாடு, செயல்திறன் மேலாண்மை, தொழில் திட்டமிடல், பணியாளர் ஈடுபாடு மற்றும் நிறுவன மேம்பாடு போன்ற செயல்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. நிறுவன இலக்குகளை திறம்பட பூர்த்தி செய்வதற்குத் இன்றியமையாத திறன்கள், அறிவு மற்றும் மனப்பான்மையை ஊழியர்கள் கொண்டிருப்பதை மனித வள மேம்பாட்டுத் துறையானது உறுதி செய்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பாடத்திட்டமானது இத் துறையின் விரிவான புரிதலை மாணவர்களுக்கு வழங்குவதற்காக பரந்த அளவிலான பாடங்களை உள்ளடக்கியது. அவையாவன:

அ. மனித வள மேம்பாட்டின் அறிமுகம்: இந்த பாடப் பிரிவானது மனித வள மேம்பாட்டின் கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றினை மேலோட்டமாக வழங்குகிறது.

ஆ. பயிற்சி மற்றும் மேம்பாடு பயிற்சித் திட்டங்கள் மூலம் தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் மேம்பாட்டினை உறுதிசெய்து, பணியாளர் திறன், அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை இந்த பாடம் ஆராய்கிறது.

இ. செயல்திறன் மேலாண்மை: இந்த பாடப்பகுதியானது நிறுவனத்தின் நோக்கங்களுடன் தொழிலாளர்களை சீரமைப்பதற்காக செயல்திறனை மதிப்பிடுதல். கண்காணித்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

ஈ. பணியாளர் ஈடுபாடு இங்கே, மாணவர்கள் ஆக்கப்பூர்வமான பணிச்சூழலை வளர்ப்பதற்கும், ஊழியர்களின் திருப்தியை மேம்படுத்துவதற்கும், அர்ப்பணிப்பு மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்குமான முக்கியமான உத்திகளைக் கற்றுக்கொள்கிறார்கள்.

உ. திறமை மேலாண்மை: திறமை வாய்ந்த பணியாளர்களை உறுதி செய்வதற்காக திறமையை வகைப்படுத்துதல், தக்கவைத்தல் மற்றும் திட்டமிடல் போன்றவற்றை இந்த பாடம் ஆராய்கிறது.

ஊ. நிறுவன மேம்பாடு: இங்கு மாணவர்கள் நிறுவனத்தின் செயல்திறனை மேம்படுத்துவதையும், காலத்துக்கு ஏற்ற வகையில் நிறுவனச்சூழலை மாற்றுவதற்கும் தேவையான நுட்பங்களைக் கற்றுத் தேறுகின்றனர்.

அனைத்து வகையான வெற்றிகரமான நிறுவனங்களுக்கும் முதுகெலும்பாக மனித வளம் விளங்குகிறது. நிறுவன நோக்கங்களைப் பூர்த்தி செய்யத் தேவையான திறன்களை மற்றும் அறிவினை பணியாளர்கள் பெற்றிருப்பதை மனித வள அபிவிருத்தி உறுதி செய்கிறது. இது பணியாளர்களின் ஈடுபாடு, வேலைத் திருப்தி மற்றும் தக்கவைப்பு ஆகியவற்றை மேம்படுத்த உதவுகிறது. இது தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் மற்றும் செயல்திறனை அதிகரிக்க வழிவகுக்கிறது. நிறுவனத்தின் இலக்குகளுடன் பணியாளர்களின் தனிப்பட்ட இலக்குகளை சீரமைப்பதன் மூலம், மனித வள அபிவிருத்தியானது உந்துதல் மற்றும் உயர் செயல்திறன் கொண்ட பணியாளர்களை வளர்க்கிறது. இது நிலையான வளர்ச்சி மற்றும் போட்டித் தன்மைகளை ஊக்குவிக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதவளத் துறையில் பட்டம் பெறுவதானது பல்வேறான வேலை வாய்ப்புகளைப் பெற்றுத்தரத் தக்கது. இப் பட்டதாரிகள் எதிர் காலத்தில் மனித வள அபிவிருத்தி நிபுணர்கள், பயிற்சி மேலாளர்கள், திறமை மேம்பாட்டு ஆலோசகர்கள், செயல்திறன் மேலாண்மை ஆய்வாளர்கள், நிறுவன மேம்பாட்டு பயிற்சியாளர்கள் அல்லது மனித வள மேலாளர்களாக அவர்களது பணியைத் தொடரலாம். அவர்கள் தனியார் நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள், லாப நோக்கமற்ற நிறுவனங்கள் மற்றும் ஆலோசனை நிறுவனங்கள் உட்பட பல்வேறு துறைகளிலும், நிறுவனங்களிலும் பணியாற்றலாம். மனித வள அபிவிருத்தி நிபுணர்களுக்கான தேவை எப்போதுமே உள்ளது, ஏனெனில் நிறுவனங்கள் தங்கள் மூலோபாய நோக்கங்களை அடைவதில் மனித வள அபிவிருத்தியானது மிக முக்கியமான பங்கை வகிக்கிறது.

நிறுவனங்கள் வேகமாக மாறிவரும் வணிகத் துறையில் தொடர்ந்து செல்லும்போது, மனித வள அபிவிருத்தியின் பங்கு பெருமளவில் முக்கியத்துவம் பெறுகிறது. தொலை நோக்குடனான வேலை, தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு, பன்முகத்தன்மை போன்ற வளர்ந்து வரும் போக்குகளுடன் மனித வள அபிவிருத்தியின் உத்திகளை திறம்பட சீரமைக்கக்கூடிய நிபுணர்களுக்கு மனித வள அபிவிருத்தியின் எதிர்காலமானது நம்பிக்கைக்குரிய பற்பல வாய்ப்புகளைக் கொண்டுள்ளது. நிறுவனங்களுக்குள் புதுமை. சுறுசுறுப்பு மற்றும் பின்னடைவைத் தடுத்தல் மாற்றத்தை ஏற்படுத்துதல், மனித மூலதனத்தின் தொடர்ச்சியான வளர்ச்சியை உறுதி செய்தல் போன்றவற்றுக்கு மனித வள அபிவிருத்தி வல்லுநர்கள் முக்கியப் பங்காற்றுகிறார்கள்.

மனிதவள மேம்பாட்டுப் பாடநெறியானது, நிறுவனங்களின் எதிர்காலத்தை வடிவமைக்கத் தேவையான அறிவு மற்றும் திறன்களை மாணவர்களுக்கு ஊட்டுகிறது. பயிற்சி, செயல்திறன் மேலாண்மை, திறமை மேம்பாடு மற்றும் நிறுவன செயல்திறன் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம், செழிப்பான பணிச்சூழலை உருவாக்குவதற்கும், பணியாளர் ஈடுபாட்டை மேம்படுத்துவதற்கும், நிறுவன வெற்றிக்கு உந்துதலுக்கும் பெரும் பங்காற்றுகிறது. இன்றைய ஆற்றல்மிக்க வணிக உலகில் மனித மூலதனத்தின் முக்கியத்துவம் அதிகரித்து வருவதால், மனித ஆற்றலை வெளிக்கொணரவும், நிலையான வளர்ச்சியை மேம்படுத்தவும் ஆர்வமுள்ளவர்களுக்கு மனித வள அபிவிருத்தியானது சிறந்த வாய்ப்புகளையும், நம்பிக்கைக்குரிய எதிர்காலத்தையும் வழங்குகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியலே !

ஆ.லாவன்யா
16ஆம் தலைமுறை
கணினி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
கற்கைநெறி

இராமேஸ்வரம்,
இராமர்
சிவ பக்தன் இராவணனை
வதம் செய்து
சேர்த்து வைத்த தன் பாவம்
போக்க
சிவலிங்கம் செய்து பூசித்த திருத்தவம் !!

அச் சேத்திரத்தில்
ஓர் சிறுவன்,
கடற்கரையில் தனித்திருந்தான்
கரை ஒதுங்கி நின்ற
படகொன்றில்
உந்திப் பறந்த பறவை கண்டு
என்றோ ஓர்நாள்
தானும்
வானமதில் பறந்திட வேண்டும்
என்று அவன்
மனதில் திடமாய் பதிந்தது.
அக் கனவு !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிலிருந்தே.
பறந்திட வேண்டும் எனும்
அவனின் கனவுக்கு
புடம் போடத் தொடங்கினான்
அச் சிறுவன்!
என்றேனும் ஓர்நாள் - தானும்
வானில் பறந்திடுவேன்
எனும் தன்னம்பிக்கையோடு!

ஏழ்மை அவனை
தடம் மாற்றிட நினைத்தது
குடும்பத்தின் நிலையும்
அவனை
திசை மாற்றிடவே அரும்பாடுபட்டது
எவற்றின் ஆட்டமும்
அவனின்
கனவில் கொண்டிருந்த
எண்ணத்தை
கலைக்க முடியவில்லை !

ரோசினி ஏவிய
இந்திய விண்வெளியின் நாயகனாய்
பாரத மக்களின்
நேயத்திற்குரிய தலைவனாய்
வாழ்ந்த
அக்கினிக் குஞ்சொன்றை
காலனும்
கண்ணின்றிப் பறித்துவிட்டான்
ஆனாலும்
அவ் உயிர் இன்றும்
அந்த அக்கினிச் சிறகுகளுக்குள்
உயிர் வாழ்கிறது.
ஆயிரம் இளைஞர்களின் கனவுகளுடன் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் பார்த்து வியந்த மனிதர் ராவணன்

வே.விதுஷா
16ஆம் தலைமுறை
தொழில் முயற்சியும் முகாமைத்துவமும்
கற்கைநெறி

எத்தகைய தீமைகள் இருந்தாலும், ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டிய சில பெரிய குணாதிசயங்களுக்காக அவர் போற்றப்படவேண்டும்.

ராவணனின் தீமையைப் பொருட்படுத்தாமல், அவரிடம் இருந்த சில பண்புகள் உண்மையிலேயே புராணமாகக் கருதப்பட்டன.

இதைப் பற்றி நான் சிந்திக்கும் போதெல்லாம் எனக்கு நினைவில் வருவது குடிகாரன் எல்லாம் குடிச்சா போல கெட்டவனும் இல்ல குடிக்காதவன் எல்லாரும் நல்லவனும் இல்லை.

ஒரு பெண்ணின் விருப்பமின்றி அவளை அடைவது தவறு என்று உணர்ந்தவன் சீதையின் மனவிருப்பு இன்றி அவளை ஏற்கக் கூடாது என்ற எண்ணத்துடன் ஒரு வனத்தில் பாதுகாப்புடன் வைத்திருந்தான். அதாவது ஒரு பெண்ணை அவளது விருப்பமின்றி மணம் முடிப்பது தவறான விடயம் என்பதை உணர்ந்திருந்தார். (இன்னொருவனின் மனைவியைக் கடத்துவதில் எனக்கு உடன்பாடில்லை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஊர் சொன்ன கதை கேட்டு ராமன் சீதையை வனவாசம் அனுப்பி விட்டான். இங்கு ராமன் மனைவியை நம்பி இருக்க வேண்டுமா? இல்லையா?

தன் சகோதரி ராமனால் அவமதிக்கப்பட்டதால் (ராமர் மகாவிஷ்ணுவின் வடிவம் என்று தெரிந்திருந்தும்) ராமருடன் போரிட முடிவு செய்தார். இது அவரது குடும்பத்தின் மீதான அவரது அன்பைக் காட்டுகிறது. இந்தக் காலத்தில் எந்த அண்ணன் இப்படி இருந்திருக்க முடியும்.. நம்மவர்கள் என்றால் குட்டி அனுப்பி இருப்பார்கள். சொத்துக்கும் காசுக்கும் அடிபடுற உலகத்துல என்னதான் அக்கா தங்கச்சியா இருந்தாலும் கடவுள்ட்ட போய் சண்டை பிடிக்கிற அளவுக்கு நமக்கெல்லாம் தைரியம் இல்லை.

தீராத பக்தியும் தீராத நம்பிக்கையும் கொண்டவர். இந்த மனிதரைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை என்ற எண்ணமும் உதித்திருக்கிறது

இவர் ஒரு சிவபக்தன் என்பது யாம் அனைவரும் அறிந்ததே. இராவண மன்னன் தன் தாயுடன் கோணேஸ்வரத்தை பக்தியுடன் வழிபட்டதாக புராணம் கூறுகிறது. இராவணன் தனது தாயின் இறுதிச் சடங்கிற்காக திருக்கோணேஸ்வரத்தின் ஒரு பகுதியாக கன்னியாவின் வெந்நீரூற்றுகளை உருவாக்கியதாகக் கூறப்படுகிறது.

அகந்தை ஒரு புறம் இருந்தாலும் இறைவனை தொழுவதிலும் இறைவனுக்கு தொண்டாற்றுவதிலும் இவர் சற்றும் பின்வாங்கியதே இல்லை. இப்படி கடவுள் பக்தி இருக்கிறவரா இப்படி எல்லாம் செய்யணும் என்று யோசிக்க வைக்கிறார் சில இடங்களில்...

அவர் ஒரு ஆராய்ச்சியாளர் மற்றும் ஆயுர்வேதம் மற்றும் அரசியல் அறிவியலில் சிறந்த அறிவைக் கொண்டிருந்தார். மேலும், மருந்துகள் குறித்த பல புத்தகங்களையும் வசனங்களையும் எழுதியுள்ளார். எனவே, அவர் செய்த தீய செயல்கள் இருந்தபோதிலும், அவரது அறிவு அவருக்கு பல முறை புகழைப் பெற்றுத் தந்தது

எப்போதுமே நம் சிந்தனைகள் ஆகாயத்தை நோக்கி தான் இருக்க வேண்டும் என்று சொல்லுவார்கள் . அவர் மூவுலகையும் ஆள விரும்பினார், எப்போதும் வெற்றி பெற விரும்பினார். எனவே, இலட்சியமாக இருப்பதே முன்னேற்றத்திற்கான திறவுகோல் என்பதை அவரது குணாதிசயம் நமக்குச் சொல்கிறது.

ராவணனை பற்றி சிந்திக்கும் போதெல்லாம், நாம் எப்போதும் முதலில் எதிர்மறையிலிருந்து நேரான சிந்தனைகளை தேடுவதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கமாகக் கொள்ள வேண்டும் என்பது எனக்குள் ஓடிக்கொண்டே இருக்கும்

பெரும்பாலான கதைகள் அவரை ஒரு கொடூரமான ஆட்சியாளராக விவரித்தாலும், உண்மையான ஒரு சிறந்த மற்றும் திறமையான அரசன் ராவணன்.

இராவணனால் கட்டுப்படுத்த முடியாத ஒரே விஷயம் அவனது அகங்காரம் மட்டுமே, அது இறுதியில் அவனது அழிவின் கருவியாக மாறியது

இப்படி எல்லா வேதங்களையும் கற்றுத்தெளிந்த மன்னன் எப்படி ஒரு வில்லனாக இருந்திருக்க முடியும்? அகந்தையினால் தான் அழிந்திருப்பார் என்று யோசிக்கவே முடியவில்லை. அந்த அகந்தை தான் அவனை சற்றும் நல்லது கெட்டதை யோசிக்கவிடாமல் வைத்திருந்தது போல.

ராவணன் தான் நல்லவர் என்று கூற வரவில்லை. இராவணனுக்குள்ளும் நல்ல விடயங்கள் காணப்பட்டிருக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பண்பாட்டில் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கு

வி.தஜன்
14ஆம் தலைமுறை
விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் கற்கைநெறி

கல் தோன்றி மண் தோன்றா காலத்திலிருந்து இற்றைக்கு 22 ஆம் நூற்றாண்டு வரை. தமிழருக்கு கலாச்சாரமும் பண்பாடும் தனிச் சிறப்பான ஒன்றாக இருந்து வருகிறது. நம் கலாச்சாரம் அதன் வளமான வரலாறு, இலக்கியம், கலை, மருத்துவம் ஆகியவற்றில் புகழ் பெற்று காணப்படுகின்றது. பல நூற்றாண்டுகளாக அதன் பாரம்பரியத்தை பாதுகாத்து காலத்திற்கேற்ப வேரூன்றி நிற்கிறது.

இருப்பினும் சமீபத்திய ஆண்டுகளில் தொழில்நுட்பத்தின் வருகை என்பது தமிழர் கலாச்சாரத்திற்கும் தொழில்நுட்பத்திற்கும் இடையில் தனித்துவமான குறுக்கு வெட்டை ஏற்படுத்தி குறிப்பிடத்தக்க மாற்றங்களை கொண்டுள்ளது. இன்று தமிழர் கலை ,கல்வி,கலாச்சாரம், மொழிப் பாதுகாப்பு, சமூக ஈடுபாடு என்பன தொழில்நுட்பத்தை தழுவிக் காணப்படுகின்றது.

தமிழ் மொழியானது அதன் தொன்மையான தோற்றம் மற்றும் விரிவான இலக்கிய பாரம்பரியம் தமிழர் கலாச்சாரத்தின் ஒரு சிறப்பான இடத்தை பிடித்துள்ளது. இதை மேலும் விரிவுபடுத்தவும், பாதுகாக்கவும், தொழில்நுட்பம் முக்கிய பங்காற்றுகின்றது என்பதை மறுக்க முடியாது. உதாரணமாக நிகழ்நிலை அகராதிகள் இலக்கண வழிகாட்டிகள், மின்புத்தகங்கள் என்பவற்றில் தமிழ் மொழி ஆர்வலர்கள் தங்கள் அறிவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்க்க கற்றுக்கொள்ள மட்டும் பகிர்ந்து கொள்ள ஒரு மெய்நிகர் இடத்தை வழங்கி டிஜிட்டல் யுகத்தில் அதன் உயிர் வாழ்வையும், பரிமாண வளர்ச்சியையும் உறுதி செய்து உலகளாவிய ரீதியில் தமிழை அணுகும்படி செய்துள்ளது.

மின் கற்றல் தளங்கள், வீடியோ விரிவுரைகள், நிகழ்நிலை பயிற்சிகள், ஊடக கல்வி மற்றும் என்று இன்று விரிவடைந்து கொண்டே செல்கிறது. தமிழ் இலக்கியம், வரலாறு, தத்துவம் போன்ற பாடங்களுக்கான தரமான கற்றல் வளங்களை ஜனநாயகப்படுத்தப்பட்டுள்ளன. கல்வியுடன் தொழில்நுட்பத்தின் ஒருங்கிணைப்பு இளைய தலைமுறையினரிடையே தமிழ் கலாச்சாரத்தின் மீது தமிழ் மீதான ஆர்வத்தை தூண்டி ஈர்ப்பை ஏற்படுத்தி நாட்டத்தை அதிகரித்து அதன் தொடர்ச்சியையும் நிலைத்திருப்பையும் உறுதி செய்து நிற்கிறது.

தமிழ் கலாசாரமானது இயல், இசை, நாடகம் என்ற கலை வடிவங்களுடன் உள்ளார்ந்து பிணைக்கப்பட்டுள்ளது. கலை வடிவங்கள் அறியப்பட்டு உள் வாங்கப்பட்டு உலகளாவியரீதியில் வெளிப்படுத்தப்படுவதால் தொழில்நுட்பமானது ஊன்றுகோலாக திகழ்கின்றது. தமிழரின் பாரம்பரிய கலைகளாக கருதப்படும் கரகம், கும்மி, கோலாட்டம், பறை இசை, தெருக்கூத்து, கிராமிய பாடல்கள் என்பன தொண்மையிலேயே மழுங்கி போகாமல் இன்றும் நம்மால் பார்க்கவும், கேட்கவும் ரசிக்ககூடிய வகையில் பட்டிதொட்டியெங்கும் அவற்றை கொண்டு சென்று சேர்த்த பெருமை தொழில்நுட்பத்தையே சாரும். அது மட்டும் இல்லாமல் இசை கலைஞர்கள், நடன நாட்டிய கலைஞர்களை புவியியல் எல்லைகளை தாண்டி பலதரப்பட்ட பார்வையாளர்களை அடைய வைத்தது தொழில்நுட்பமே.

சமூக ஊடகத்தளங்கள் இன்று தனி நபர் வாழ்க்கையில் ஒரு அங்கமாகிவிட்டது. சமூக ஊடகங்கள், வலைத்தளங்கள் என்பன எட்டுத்திக்கும் தமிழ் சொந்தங்களை ஒருங்கிணைத்து அவர்களின் அனுபவங்கள், கலாச்சார நடைமுறைகள் மற்றும் கொண்டாட்டங்களை பகிர்ந்து கொள்ளவும் உதவுகின்றது. தமிழ் விழாக்கள், கொண்டாட்டங்கள் என்பன டிஜிட்டல் தளங்களில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டு பௌதீக எல்லைகளைத் தாண்டி உலக அளவில் சமூகங்களுக்கு இடையே ஒற்றுமை உணர்வை உருவாக்கி இருக்கிறது. இது கலை கலாசார பாரம்பரியங்களை பாதுகாத்து நிற்பதில் காத்திரமான பங்கை வகிக்கின்றது என்பது உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவ முறை எடுத்து நோக்கினால் சித்தமருத்துவமானது இன்று எல்லாராலும் முக்கியமாக கருத்தில் கொள்ளப்பட்டு சிகிச்சை முறையாக வளர்ந்து நிற்கின்றது. மருத்துவ முறையானது பல நாடுகளை தாண்டி கண்டங்கள் வரை பரந்து விரிந்து காணப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் தொழில்நுட்பமே. கிராமப்புறங்களில் கிடைக்கும் இயற்கை மூலிகைகள் பயன்படுத்தி மருந்துகள் தயாரிக்கப்பட்டு ஏராளமான நோய்களை எளிய முறையில் குணப்படுத்தி மக்களை பாதுகாத்து வந்த சிகிச்சை முறையானது இன்று தொழில்நுட்பத்தின் வாயிலாக உலகமெங்கும் கொண்டு செல்லப்பட்டு பல தரப்பட்ட மக்களை பயன்படுத்தி பயன்படும் வகையில் மாற்றி அமைத்து கொடுத்துள்ளது இத் தொழில்நுட்பமே.

இவ்வாறு நோக்கும்போது தொழில்நுட்பத்தின் நன்மைகள் ஆனது ஏராளமானதாகவும் தொலைநோக்குடையதாகவும் உள்ளது. மேம்பட்ட தகவல் தொடர்பு மற்றும் அதிகரித்த தொழில்நுட்ப வளர்ச்சி என்பன தமிழின் தொன்மையும் பழமையும் காலங்கடந்தும் உலகளாவிய ரீதியில் வாழ வைத்துக் கொண்டுள்ளது என்பது முற்றிலும் உண்மை. தொழில்நுட்பத்தை சிறந்த சிந்தனையுடன் பயன்படுத்தும் போது தமிழ் கலாச்சாரத்தை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் ஒரு ஊக்கியாக செயல்படுத்த முடியும். டிஜிட்டல் பாதுகாப்பு, மொழி வளங்கள் மற்றும் நிகழ்நிலை தளங்கள் மூலம் தமிழ் கலாச்சாரத்தின் முழுமையான பாரம்பரியத்தை பாதுகாக்கவும் பரந்த பார்வையாளர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் முடியும். அதேசமயம் தமிழ், கலை, இலக்கியம் மற்றும் மரபுகளை உலகளாவிய ரீதியில் பரப்புவதற்கு கலாச்சார மேம்பாட்டுக்கான வழிகளை தொழில்நுட்பம் வழங்குகிறது. நமது பாரம்பரியத்தை பாதுகாப்பதன் மூலம் முன்னேற்றத்தை தழுவுவதன் மூலமும் டிஜிட்டல் யுகத்தில் தமிழ் பண்பாடு தொடர்ந்து செழித்து வளர்வதையும் தமிழ் சமூகங்களிடையே பெருமையையும், பாராட்டையும் பலதரப்பட்ட பார்வையாளர்கள் இடையே கலாச்சார புரிதலை ஊக்குவிப்பதையும் தொழில்நுட்பமானது உறுதி செய்து நிற்கிறது என்பதை எவராலும் மறுத்துவிட முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை முகம் மறந்து போச்சே.....

கிரிஷானி
15ஆம் தலைமுறை
நீர் வாழ் வளங்கள் தொழில்நுட்பமும்
கற்கைநெறி

"யாமறிந்த மொழிகளில் தமிழ் பால் இனிதாவதெங்கும் காணோம்" என வியந்து தமிழ்மொழி வந்த பாரதியார், கனவுகளுக்கு மொழி தந்தவர் பெண் விடுதலைக்கு புரட்சி படைத்தவர் கவியுலகின் ஆழம் கண்டவர் தமிழுக்காய் வாழ்ந்து தமிழின் சான்றாய் நிலைத்திருப்பவர். கற்பனைகளின் ஓவியம் கண்டவர்க்கு ஏனோ தன் தாய் முகம் மறந்து போனது.

தன் தாய் இறந்த பின் பொக்கிஷமாக பாதுகாத்த அந்த ஒரு புகைப்படம் தொலைந்ததும், எழுதி முடித்த ஏடுகளின் மை அழிந்தாற் போல நினைவலைகள் உறைந்திருக்க தாயின் முகம் மறந்து போனது. கண்ணனை குழந்தையாக, காதலனாக, கடவுளாக கவிதை வடித்தவர்கள் வரிசையில் தன் சேய் ஒளிர தன்னை திரியாக்கியவளை கண்ணனாக காண்கின்றார் பாரதியார்.

**"நேச மறக்கவில்லை நெஞ்சம் - எனில்
நினைவு முகமறக்க லாமோ?"**

சந்திரனை பொம்மையாக்கி அமிர்தத்துடன் கதைகள் நூறூட்டிய தாயின் மறைவின் பின் புரண்டோடிய பக்கங்கள் சில. எனினும் வானில் அன்று கண்ட அதே நிலவு இன்றும். அதை காண்கையில் தாய் சொன்ன கதைகள் நூறும் நினைவலைகளில் தவழ அவள் முகம் மட்டும் தொலைந்து போனது விண்ணில்.

**"கண்ணில் தெரியுதொரு தோற்றம் - அதில்
கண்ண னழகு முழுதில்லை."**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உள்ளே சிறகாயிரம் வீசிய அன்பின் உணரலின் போது தோன்றியது ஒரு முகத்தின் சாயல். எனினும் கண்கள் திருப்தி அடையவில்லை அந்த காட்சியில். தாயின் முகம் அது இல்லை என்றது பாரதியின் களைத்து போன உள்ளம்.

**"பெண்க ளினத்திலிது போலே- ஒரு**
**பேதையை முன்பு கண்டதுண்டோ?"**

அவள் முகத்தை நேரில் கண்டு தினம் உற்சாகம் கொண்டிருந்த கண்களின் பிழை. அவள் அடையாளம் தொலைத்தது. அவள் அரவணைப்பில் திளைத்திருந்த உள்ளம் எதிர்பார்த்து தேடிக்கொண்டிருந்தது தாயின் புன் முகத்தை என்றும்.

**"பெண்க ளினத்திலிது போலே- ஒரு**
**பேதையை முன்பு கண்டதுண்டோ?"**

தினம் காணும் மங்கையரில் தொலைத்த அந்த ஒரு முகத்தை தேடிக்கொண்டே இருந்தது பாரதியின் விழிகள். உள் இசை கேட்டுக் கொண்டே இருந்தது அவளின் அரவணைப்பை. இறுதியில் சோர்வடைந்த அவன் விழிகளும் உள்ளமும் உணர்ந்தது தாயின் ஒளிக்கு இவ் வையத்தில் ஒப்பில்லை என்பதை.

**"தேனை மறந்திருக்கும் வண்டும் - ஒளி**
**சிறப்பை மறந்து விட்ட பூவும்**
**வானை மறந்திருக்கும் பயிரும் - இந்த**
**வைய முழுவதுமில்லை தோழி**

தேன் இன்றி வண்டும் இல்லை ஒளியின்றி பூவும் இல்லை வானின்றி நற்பயிரும் இல்லை. தாய் முகம் மறப்பின் சேய்க்கு அமைதி இவ்வையகத்தில் எங்கு இருக்கக்கூடும் என தவிக்கும் பாரதியாரின் வரிகள்.

**"வண்ண படமுமில்லை கண்டாய் - இனி**
**வாழும் வழியென்னடி தோழி"**

அவளுக்காக அவள் என எஞ்சியிருந்த அந்த ஒற்றை புகைப்படமும் காற்றில் கரைந்து போனதும், அவள் முகத்திற்கு வரி தொடுக்க முயன்றும் தோற்று போனார் கவியுலகின் விண்மீன் பாரதி. கனவுலகின் கற்பனை சிறகுகளுடன் உலாவந்த "கண்ணம்மா" இற்கு வரி வடிவில் உரு தந்தவனுக்கு, தன் தாய் முகம் மறந்து போன சாயல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையே விதையாகு...

கு.சாந்தரூபி
16ஆம் தலைமுறை
ஏற்றுமதி விவசாயம் கற்கைநெறி

பட்டமரமும் துளிர்விடும்
வாடிய பூவும் தேன் சொரியும்
தொட்டதெல்லாம் பொன்னாகும்
நம்பிக்கையே விதையானால்..

பங்குனியில் மழை பொழியும்
மாரியிலும் வெயில் காயும்
கோடையும் வசந்தமாகும்
நம்பிக்கையே விதையானால்...

ஏர் முனையில் பயிர் செழிக்கும்
வான் வரையும் வளர்ந்து நிற்கும்
கார்மழையும் பொலிவூட்டும்
நம்பிக்கையே விதையானால்...

வரம்புயர நீர் உயரும்
நீர் உயர்ந்தால் நெல் செழிக்கும்
வரப்போகும் வாழ்வு வசந்தமாகும்
நம்பிக்கையே விதையானால்.....

ஜனநாயகம் ஓங்கி நின்றால்
முழு நாடும் வளம் சொழிக்கும்
நம் நாட்டின் நலம் செழிக்கும்
நம்பிக்கையே விதையானால்...

நம் வாழ்வு தரமாக
நம் நெஞ்சம் உரமாக
வாழ்ந்திடுவோம் வளமாக
நம்பிக்கையே விதையானால்....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணல்களின் முடிவில் வாழ்க்கை..

ம.தர்சிகா
14ஆம் தலைமுறை
தொழில் முயற்சியும் முகாமைத்துவமும்
கற்கைநெறி

எந்தவொரு சூழ்நிலையையும் தாண்டி உயரும் திறன் மனிதர்களுக்கு எப்போதும் இருக்கும் என நான் நம்புகிறேன், ஏனென்றால் வாழ்க்கை என்பது ஒருவரால் உருவாக்கப்படுவது. இங்கு பலர் தமக்கான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். ஆனால் சிலருக்கு வாழ்க்கை என்றால் என்ன, ஏன் இந்த உலகில் இருக்கிறோம் என்பது தெரியாமல் புலம்பிக் கொண்டு இருக்கிறார்கள். வாழ்க்கை என்பது புரியாத புதிர் அல்ல நமக்குத் தெரிந்ததெல்லாம், நாம் உணரும் அனைத்தும், அதை எப்படியாவது நம்மால் முடிந்தவரை பாதுகாக்க வேண்டும் அவ்வளவு தான் வாழ்க்கை. புத்தர் தெளிவாகக் கூறினார்; "வாழ்க்கை துன்பம்." வாழ்க்கை என்பது சவாலானதாக இருக்க வேண்டும். உண்மையில் வாழ்வதற்கு நிலையான உழைப்பும் மறு ஆய்வும் தேவை. இயல்பாகவே வாழ்க்கை கடினமாக உள்ளது, ஏனென்றால் மகிழ்ச்சியையும் வெற்றியையும் சம்பாதிக்க நாம் பாடுபட வேண்டும் என்பதால்.

இன்னும் நான் நினைத்ததை விட வாழ்க்கை நிலையற்றது என்பதை உணர்ந்தேன், மீளாய்வு பதிவு ஒன்றின் போது ஓர் முதியவரிடம் கேட்கப்பட்ட கேள்வி உங்கள் சொந்த இடம் எது என்று அதற்கு அந்த முதியவர் அளித்த பதில் "சுடுகாடு "என்று ஆம் அந்த பதில் அவரின் வாழ்க்கை பற்றிய எதிர்பார்ப்பற்ற தன்மையை எனக்கு உணர்த்தியது. எதிர்பார்ப்பு அற்ற எந்த துறையிலும் நமக்கு ஏமாற்றம் கிடைக்காத போது நாம் ஒவ்வொரு நொடியும் அனுபவித்து வாழ முடியும் என்பது நிதர்சனமான உண்மை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை எந்த நேரத்திலும் மறைந்து போகலாம் அல்லது மாறிப்போகலாம். அன்பு என்பது நிலையற்றது நாம் எவர் மீது அன்பு வைத்தாலும் அவர்கள் குடும்ப உறுப்பினர்களாக இருந்தாலும் சரி நண்பர்களாக இருந்தாலும் சரி அவர்கள் இந்த உலகையும் என்னையும் கடைசியாக ஒரு கணத்தில் விட்டுச் சென்றுவிடுவார்கள். உதாரணமாக ஒரு மரக்கிளையில் வந்தமரும் பறவையை கிளை ஒருபோதும் சொந்தம் கொண்டாடிட முடியாது. அந்த பறவை எத்தேவைக்கு அங்கு வந்து அமர்ந்து இருக்கிறது என்பது பறவையை விட யாருக்கும் தெரியாது. அப்படித்தான் நம் வாழ்க்கையும் எந்த நேரம் நம்மை எத்திசைக்கு கொண்டு செல்லும் என்பது வாழ்க்கைக்கு மட்டுமே தெரியும்.

எனது ஆசிரியரின் உரையில், "உங்கள் வாழ்க்கைக்கான நேரம் குறைவாக உள்ளது, எனவே அதில் வேறொருவரின் வாழ்க்கையை வீணடிக்காதீர்கள்" என்று சொல்வதைப் பலமுறை கேட்டிருக்கிறேன். இவ் உரை என்னுள் இன்றும் வாழ்கிறது. நான் தவறு செய்ய விரும்புகிறேன், ஏனென்றால் அதன் மூலம் தான் நான் அதிகம் கற்றுக்கொள்ள முடிகிறது. முக்கிய விஷயம் என்னவென்றால், வருத்தப்படாமல் வாழ நினைப்பது என்பது ஒரு நகைச்சுவை திரைப்படம் பார்ப்பதை போன்றது. எந்த கருத்து தெளிவும் இல்லாமல் சிரிப்பதை மட்டும் இலக்காக கொண்டிருக்கும். என் இதயம் துடிப்பதை நிறுத்தும்போது, அது கடைசியாக ஒரு மகிழ்ச்சியான குறிப்பைச் செய்துவிட்டு முன்னேற வேண்டும் என நான் நினைக்கிறேன்.

நான் என் வாழ்க்கையை தினமும் வாழ விரும்புகிறேன். தினமும் காலையில் எழுந்தவுடன், ஒரு புதிய நாளின் பரிசில் உற்சாகமாக இருக்க விரும்புகிறேன். நான் இலட்சியவாதியாகவும் இளமையாகவும் இருக்கிறேன் என்பதும், வாழ்க்கையைப் பற்றிய எனது கண்ணோட்டம் சற்று வித்தியாசமானது என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் நான் அதை கைவிடமாட்டேன், ஏனென்றால் என்னால் வாழ்க்கையை இன்னும் எல்லையில்லாமல் நெருங்கிட முடிகிறது என்பது எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது.

ஒவ்வொரு நாளும் என் மனிதாபிமானத்திற்கு மன்னிப்பு கொடுக்கின்றேன், ஏனெனில் நான் இன்னும் முழுமையடையாததால். என்னை "சரியாகப் பெற" மீண்டும் மீண்டும் முயற்சிக்கிறேன். இந்த நிலை தற்காலிகமானது என்பதை அறிந்து நான் அமைதியை சுவாசிக்கிறேன், உண்மையான இருப்பு தொடர்ச்சியானதாக இருக்கும். வாழ்க்கையின் மணித்துளிகள் இடைவிடாமல் நகர்கிறது, அதைத் தடுக்க நாம் சக்தியற்றவர்களாக இருக்கிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, நான் மன்னிப்பேன், மறப்பேன், நேசிப்பேன், ஊக்குவிப்பேன், அனுபவிப்பேன், சிரித்து அழுவேன், சாதித்து தோல்வியடைவேன், வாழ்ந்து மடிவேன். ஒவ்வொரு நாளும் இரண்டாவது வாய்ப்பு என்ற இந்த நம்பிக்கையான மனப்பான்மையுடன் என் வாழ்க்கையை இப்படித்தான் வாழ விரும்புகிறேன். எல்லா நேரங்களிலும், வாழ்க்கையைப் பற்றிய நமது கண்ணோட்டத்தைப் புதுப்பிக்கவும், நம் தவறுகளைத் திருத்தவும், வெறுமனே முன்னேறவும் நமக்கு வாய்ப்பு உள்ளது. பீனிக்ஸ் பறவையைப் போல நான் அனுபவமுள்ளவனாக, புதுப்பிக்கப்பட்டவனாக, சாம்பலில் இருந்து எழுவேன். நான் நேரத்தை வீணடிக்கமாட்டேன். அதன் அனைத்து சிறப்பிலும் பீனிக்ஸ் உயரும். ஆரஞ்சு மற்றும் மஞ்சள் நிற வெடியில் குழந்தை நீல வானத்திற்கே வர்ணம் தீட்டிட முனைகின்றது. அது அக்குழந்தையின் நம்பிக்கை. அதுபோல ஒருவர் அவரிடம் இருப்பதை வைத்து சந்தோசமாக வாழ பழகிக்கொண்டால் அவரும் வெற்றியாளர் தான். இவ்வுலகில் நாம் இவ்வாறுதான் வாழவேண்டும் என்று நெறிமுறைகள் இல்லை எனவே வாழும் போது மனநிம்மதி உண்டாகுமளவிற்கு வாழ்கையை மாற்றிக்கொள்ள முடியும். நாம் வாழ்ந்த வாழ்க்கை எவ்வாறானதென்பது நம் இறப்பின் பின் பிறர் கதைப்பதில் அறிந்துகொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்முறைமைகள் தொழில்நுட்பமும் கற்கைநெறியும் தொடர்பான பார்வை

சி.ஜீவனா
15ஆம் தலைமுறை
உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்
கற்கைநெறி

உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் கற்கைநெறி உயிர்முறைமைகள் தொழில்நுட்ப அடிப்படைகள் பற்றிய அறிவைப் பயன்படுத்துவதற்கான திறன் மேம்படுதல், உணவுத் தொழில்நுட்பம் அல்லது தொழில்நுட்பத் திறனைப் பயன்படுத்துவதற்கான திறன் மேம்படுதல், சக உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் கற்கை நெறி என்பது பயிர்கள், கால்நடைகள், நீர்வாழ் மற்றும் நுண்ணுயிரிகளுக்கான உயிரியல் கொள்கைகளை பயன்படுத்துவதை பற்றி வலியுறுத்துகிறது. உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் கற்கை நெறி கற்பதன் மூலம் அடிப்படை அறிவியல் மற்றும் தொழில்துறை உயிரியமைப்புத் தொழில்நுட்பம் ஆகியவற்றில் உயிர்முறைமைகள் தொழில்நுட்ப மற்றும் சமூகத்துடன் திறம்பட தொடர்பு கொள்ளும் திறன், சிக்கலை எதிர்கொள்ளும் திறன், சிந்தனையின் சுதந்திரம் கருத்துக்கள் மற்றும் தகவலுக்கான திறந்த தன்மை ஆகியவற்றின் மூலம் அடையாளம் காணும் திறன், தொழில்துறையில் விமர்சன கருத்தியல் மற்றும் பிரதிபலிப்பு சிந்தனையில் நன்கு வளர்ந்த திறன்கள், ஒரு தனிநபராகவும் மற்றும் பல-ஒழுங்கு மற்றும் பல கலாச்சார குழுக்களில் திறம்பட செயல்படும் திறன் மற்றுமொரு தலைவர் அல்லது மேலாளர் மற்றும் திறமையான குழு உறுப்பினராக இருக்கும் திறன் என்பன மேம்படல்.

உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் கற்கைநெறியை கற்பதன் மூலம் விவசாய துறை, வைத்திய துறை, உணவு துறை போன்ற பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகளில் தொழிற் தகைமை பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் இக் கற்கை நெறி மூலம் விவசாய திணைக்களம், உணவு நிறுவனங்கள்,அழகு கலை நிறுவனங்கள், மருத்துவ தொழிற்சாலை, மற்றும் சேதன மற்றும் அசேதன வளமாக்கி நிறுவனங்களில் வேலை செய்ய முடியும். இலங்கையில் உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் கற்கை நெறி காணப்படும் பல்கலைக்கழகங்களாக உருகுனை, வயம்ப, ரஜரட்டை, கொழும்பு, யாழ்ப்பாணம்-அறிவியல்நகர். மட்டக்களப்பு, தென் கிழக்கு, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, ஊவா வெல்லஸ்ஸ மற்றும் சப்ரகமுவ ஆகிய பல்கலைக்கழகங்கள் காணப்படுகின்றது.

இலங்கை ஊவாவெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தை எடுத்தோமானால், இலங்கை ஊவாவெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் 2017ஆம் ஆண்டு உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் கற்கைநெறியானது ஆரம்பிக்கப்பட்டது. இதனுடைய பீடமாக தொழில்நுட்ப கற்கைகள் பீடமும் மற்றும் திணைக்களமாக உயிர்முறைமைகள் தொழில்நுட்ப திணைக்களமும் உள்ளது. இதனுடைய கற்கை காலங்களாக 4வருடங்களும் அந்நான்கு வருடங்களில் 8 தவணைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அத்துடன் (120CREDIT) 1வருடம் 2தவணைகளும் மற்றும் 1தவணை 6மாதங்கள் ஆக வகுக்கப்படுகிறது. இங்கு பரீட்சை முறைகளாக தொடர்ச்சியான assignment - 40% மற்றும் இறுதி தவணை பரீட்சை.

60% ஆகவும் உள்ளது. 4 வருடங்களில் 1ம் மற்றும் 2ம் வருடங்களில் மாணவர்களுக்கு தேவையான அடிப்படை விடயங்கள் கற்பிக்கப்படுவதுடன் (உயிரியல், பௌதிகவியல், ஆங்கிலம், சிங்களம், கணிதம், உயிர்முறைமைகள் தொழில்நுட்பமும் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்). 3 மற்றும் 4 வருடங்களில் உயர் அறிவை வழங்கும் நோக்கத்துடன் விரிவாக கற்பிக்கப்படுகின்றது.

1 வருடத்தின் 1ம்தவணையில் 09பாடங்கள் உள்ளடக்கப்படுவதுடன். இதில் உள்ளடக்கப்படும் பாடங்களான சிங்களம் மற்றும் தமிழ் GPA ற்குள் உள்ளடக்காத பாடமாகவும் அத்துடன் சிங்கள மாணவர்களுக்கு தமிழ் கற்பிப்பதோடு தமிழ் மாணவர்களுக்கு சிங்களம் கற்பிக்கப்படுகின்றது. 2ம் தவணையில் 10 பாடங்கள் உள்ளடக்கப்படுகின்றது இதிலும் உள்ளடக்கப்படும் பாடங்களான சிங்களம் மற்றும் தமிழ் GPA ற்குள் உள்ளடக்காத பாடமாகும். 2 வருடத்தில் 1ம்தவணையில் 10பாடங்கள் உள்ளடக்கப்படுவதோடு பத்தாவது பாடமாக உயிர்முறைமைகள் தொழில்நுட்பத்தினுடைய சிறிய திட்டம் உள்ளடக்கப்படுகின்றுது. இது GPA அற்ற பாடமாகும். 2ம் தவணையில் 11பாடங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கப்படுகின்றது. இதில் 03தெரிவு பாடங்கள் காணப்படுவதுடன் இதில் முதலாவதாக உயிர்முறைமைகள் தொழில்நுட்பத்திற்கான அடிப்படை மின்னுனிவியலின் காணப்படுகின்றது. இங்கு மின்னுனவியலின் தொடர்பாக கற்றுக்கொடுக்கப்படும். உதாரணம்:- தடை, மின் சுற்று அமைப்பு, தர்க்க வாயில்கள். இரண்டாவது பாடமாக உயிர்முறைமைகள் தொழில்நுட்பத்திற்கான எண் முறைமை காணப்படுவதோடு இங்கு முழு செயற்பாடுகளுக்கும் கணிப்பான் பயன்படுத்தி செய்யப்படுகின்றது. இங்கு கணிதத்தின் உயர் தரமான கணக்குகள் உள்ளடக்கப்படுகின்றுது. இதன் இறுதி பாடமாக பட்டறை தொழில்நுட்பம் காணப்படுகின்றது. இதில் இயந்திரங்கள் தொடர்பாக கற்பிக்கப்படும்.

3ம் வருடத்தில் 1ம் தவணையில் பாடத்திட்டங்கள் இரண்டு வகையாக பிரிக்கப்படுகின்றது. இதில் முதலாவதாக தொழில்துறை உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் கற்கைநெறியும் இரண்டாவதாக உணவு விஞ்ஞானதொழில்நுட்பம் கற்கைநெறி உள்ளது. தொழில்துறை உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் கற்கை நெறியானது 05 பாடங்களை உள்ளடக்கியதோடு உணவு விஞ்ஞான தொழில்நுட்பம் கற்கைநெறியில் 05 பாடங்கள் உள்ளடக்கப்படுகின்றது. அத்துடன் இவ்விரண்டு பாடத்திட்டங்களுக்கும் (தொழில்துறை உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் கற்கை நெறி, உணவு விஞ்ஞான தொழில்நுட்பம் கற்கைநெறி) பொதுவாக 05 பாடங்கள் உள்ளடக்கப்படுகின்றது. இதில் இவ்விரண்டு பாடத்திட்டத்திற்கும் பொதுவான தெரிவு பாடங்களாக 02 பாடங்கள் உள்ளது. 20 தவணையிலும் வழமை போல இரண்டு பாடத்திட்டங்கள் உள்ளது. இதில் முதலாவதாக தொழில்துறை உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் கற்கை நெறியும் இரண்டாவதாக உணவு விஞ்ஞான தொழில்நுட்பம் கற்கைநெறி உள்ளது. தொழில்துறை உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் கற்கை நெறியானது 04 பாடங்களை உள்ளடக்கியதோடு உணவு விஞ்ஞான தொழில்நுட்பம் கற்கைநெறியில் 06 பாடங்கள் அத்துடன் உள்ளடக்கப்படுகின்றது. இவ்விரண்டு பாடத்திட்டங்களுக்கும் (தொழில்துறை உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் கற்கை நெறி, உணவு விஞ்ஞான தொழில்நுட்பம் கற்கைநெறி) பொதுவாக 06 பாடங்கள் உள்ளடக்கப்படுகின்றது.

4ம் வருடத்தில் 1ம் தவணையில் மாணவர்களுக்கான தொழில் பயிற்சி நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதுடன் 2ம் தவணையில் வழமை போல மாணவர்கள் கல்வி செயற்பாட்டுக்குள் உள்வாங்கப்படுகிறார்கள். 2ம் தவணையில் 11 பாடங்கள் உள்ளடக்கப்படுவதோடு இதில் 05 பாடங்கள் தெரிவு பாடங்களாக உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மொழி

ம. மதுவந்தி
15ஆம் தலைமுறை
ஏற்றுமதி விவசாயம் கற்கைநெறி

ஆதியாய் அவதரித்த அன்னைத் தமிழ்மொழி
அன்பொடு அறமும் வீரமும் காத்திடும் தாய்மொழி
இயற்கையை இறைவனாய் போற்றிடும் செம் மொழி
முல்லைத் தமிழாய் முச்சங்கம் கண்டு
நெய்தல்: நிலத்தில் ஊற்றாய்ப் பெருகி
உய்தல்ப் பேறாய் ஊங்கத் தந்த எம் மொழி
மருதம் மேவி வானளாவி நின்று
உணர்வுடன் கலந்து -பருகப் பருக
தெவிட்டாய் இன்பமாய் பெற்ற பொன் மொழி.
இயலிசை நாடகம் ஈன்றளித்த இன்மொழி
அகரமுதல என வாய்திறந்து வள்ளுவர் தந்த செம்மொழி
வரப்புயர என ஔவை வாழ்த்தி
தாலாட்டில் தொடங்கி ஒப்பாரி வரை
வாழ்க்கையைப் பாட்டால் வாழ்த்தும் - எம் மொழி
கோலமிட்டுத் தானமளிக்கும் தமிழ்மொழி
இவ்வையகம் உள்ளவரை வாழ்ந்திடும் எம் தாய் மொழி

- தமிழ் மொழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் கற்கைநெறி

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் கற்கைநெறி
மாணவர்கள்

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் கற்கைநெறியானது 2006 ஆம் ஆண்டு பிரயோக விஞ்ஞான பீடத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே இக்கற்கைநெறி பிரபல்யமான கற்கைநெறியாக திகழ்கின்றது. இக்கற்கைநெறியானது இயந்திரவியல் பொறியியல், பொருளறிவியல், உயிரியல் உற்பத்திப் பொருளியல், வேதியல் பொருளியல், கணிதம், புள்ளியியல் மற்றும் இயற்பியல் ஆகிய துறைகளில் நிபுணத்துவம் பெற்ற விரிவுரையாளர்களை கொண்டுள்ளது. ஒரே துறையில் உள்ள இப் பன்முக அறிவு மற்றும் திறன்களின் தொகுப்பு இலங்கையின் அரச பல்கலைக்கழக முறைமைக்கு தனித்துவமானது. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் துறையில் தொழில்த்துறை தேவைக்குப் பொருத்தமான பரந்த அறிவு, திறன்கள் மற்றும் மனப்பான்மை கொண்ட நன்கு திறமையான பட்டதாரிகளை உருவாக்குவதே இக் கற்கைநெறியின் நோக்கமாகும். விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் இளங்கலை பட்டப்படிப்பு (BSc Hons) என்பது SLQF நிலை 6 பூர்த்திசெய்யும் ஒரு தனித்துவமான நான்கு வருட பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டமாகும். இரண்டாம் கல்வி ஆண்டு வெற்றிகரமாக முடிந்தவுடன் உணவு இயந்திரவியல் மற்றும் உயிரியல் செயற்பாட்டுத் தொழில்நுட்பம், சடப்பொருள் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் இயந்திர மின்னணுயியல் ஆகிய மூன்று சிறப்புப் பிரிவுகளுக்கும் முதல் மற்றும் இரண்டாம் கல்வியாண்டுகளில் ஆய்வுச்செயல்திறன், தேர்வு நேர்காணலில் செயல்திறன் மற்றும் பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளின் பதிவு ஆகியவற்றின் அடிப்படையில் சிறப்புப் பிரிவுகளுக்கு மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். மூன்று சிறப்புப் பிரிவுகளுக்குமான தொழிற்பயிற்சி மற்றும் ஆராய்ச்சித் திட்டம் மற்றும் மாணவர்களுக்கான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பப் படிப்புக்கள் உள்ளிட்ட கட்டாய வரவுகளின் கலவைகள் வழங்கப்படுகின்றன.

**உணவு இயந்திரவியல் மற்றும் உயிரியல் செயற்பாட்டுத் தொழில்நுட்பம் (Food Engineering and Bio Process Technology)**

உணவுப்பொறியியல் என்பது உணவு பதப்படுத்தப்படும் நுட்பங்கள் மற்றும் உபகரணங்கள் வடிவமைப்பு, மேம்பாடு மற்றும் உணவு உகந்த தாக்கலுக்குத் தேவையான பொறியியல் கொள்கைகளை பயன்படுத்துவது என்பவற்றை உள்ளடக்குகின்றது. இது உணவுப்பாதுகாப்பு, பொதி செய்தல், தரக்கட்டுப்பாடு மற்றும் தயாரிப்பு மேம்பாடு போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. அத்துடன் உயிர்ச்செயற்பாட்டுத் தொழில்நுட்பம் என்பது உணவு உற்பத்திச் செயன்முறையை மேம்படுத்தவும் ஊட்டச்சத்து மதிப்பை அதிகரிக்கவும் உணவுப் பொருட்களின் உணர்ச்சிப் பண்புகளைப் பராமரிக்கவும் பல்வேறுபட்ட செயன்முறைத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மூலப்பொருட்களை மதிப்பு மிக்க மற்றும் விரும்பத்தக்க உணவுப்பொருட்களாக நுகர்வோருக்கு வழங்கும் செயன்முறையாகும். இச்சிறப்புப் பிரிவின் நோக்கமாக உணவுப்பொறியியல் மற்றும் உயிர்ச்செயன்முறைத் தொழில்நுட்பத்தில் புதுமையான பொறியியல் கொள்கைகளை உயிரியல் செயன்முறைகளுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் உணவு உற்பத்திக்கான புதிய தீர்வு, பாதுகாப்பு, தரம், மற்றும் நிலைத்தன்மை தொடர்பான சவால்களை எதிர்கொள்ளும் சிறந்த வல்லுநர்களை உருவாக்குதல் நோக்கமாகும்.

இச்சிறப்புப் பிரிவின் தொழிற்துறை வாய்ப்புக்களாவன

- உணவு மற்றும் பான உற்பத்தி
- உயிரியல் தொழில்நுட்பம்
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி
- மூலக்கூற்று உயிரியல்
- பொதி செய்தல் தொழில்நுட்பத்துறை
- சுற்றாடல் மற்றும் கழிவு முகாமைத்துவம்

**சடப்பொருள் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் (Material Science and Technology)**

சடப்பொருள் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் என்பது இயற்பியல், வேதியியல், பொறியியல் மற்றும் பிறதொடர்புடைய துறைகளின் கொள்கைகளை ஒருங்கிணைத்து பொருட்களின் பண்புகள், கட்டமைப்பு, செயலாக்கம் மற்றும் செயல்திறன் ஆகியவற்றை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்துகொள்ளும் ஒரு இடைநிலைத்துறை ஆகும். இது பொருட்களின் அணு மற்றும் மூலக்கூற்று அமைப்பு மற்றும் அவற்றின் நுணுக்குக்காட்டிக்குரிய பண்புகளுக்கு இடையிலான உறவை ஆராய்கிறது. அத்துடன் இக்கற்கைநெறியானது சடப்பொருளறிவியலை மையமாகக் கொண்ட அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பாடத்தில் சடப்பொருட்கள் அவற்றின் பயன்பாடுகள் தொடர்பான பல்வேறு விடயங்களை உள்ளடக்கியிருக்கின்றது.

பொதுவான சில முக்கிய உள்ளடக்கப் பகுதிகளாவன:

1. அணுக்கள் மற்றும் மூலக்கூறுகளின் அடிப்படை அமைப்பு
2. படிகக் கட்டமைப்புக்கள் மற்றும் திண்மப் பொருட்களின் அணுக்களின் அமைப்பு பற்றிய புரிதல்
3. பொருட்களின் பண்புகளின் ஆய்வு: இயந்திரப் பண்புகள், வெப்பப் பண்புகள், மின் பண்புகள், காந்தப் பண்புகள் மற்றும் ஒளியியல் பண்புகள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
4. இதில் நுண்நோக்கி நிறமாலை, மாறுபாடு மற்றும் வெப்பப் பகுப்பாய்வு உள்ளிட்ட பொருட்களை பகுப்பாய்வு செய்தலும் வகைப்படுத்தலும்.
5. வார்ப்பு, உருவாக்கம், வெப்பச் சிகிச்சை மற்றும் மேற்பரப்பு பொறியியல் மற்றும் செயலாக்கத்திற்கான நுட்பங்கள்
6. காபன் நனோ குழாய்கள், குறைகடத்திகள் மற்றும் உயிரியல் பொருட்கள் உள்ளிட்ட நனோ பொருட்களின் தனித்துவமான பண்புகள்
7. சுற்றுச்சூழல் மற்றும் நிலைத்தன்மை அம்சங்கள் அத்துடன்,

- சடப்பொருள் அறிவியல் விஞ்ஞானி
- தரக்கட்டுப்பாட்டுப் பொறியியலாளர்
- ஆராய்ச்சி மேம்பாட்டாளர்
- செயன்முறை பொறியியலாளர்
- தொழில்துறை ஆய்வாளர்
- தயாரிப்பு மேம்பாட்டு பொறியியலாளர்
- சூழல் முகாமைத்துவ ஆலோசகர்
- தொழில்நுட்ப விற்பனைப் பொறியியலாளர்

போன்ற வேலைவாய்ப்புக்களை விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் கற்கைநெறியில் சடப்பொருள் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மாணவர்கள் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயந்திர மின்னணுவியல் (Mechatronics)

இயந்திரமின்னணுவியல் என்பது ஒரு இடைநிலைத் துறையாகும். இது மெக்கானிக்கல் இன்ஜினியரிங், எலக்ரிக்கல் இன்ஜினியரிங், கணினியல் விஞ்ஞானம் மற்றும் கட்டுப்பாட்டுப் பொறியியல் ஆகியவற்றின் கூறுகளை ஒருங்கிணைத்து அறிவார்ந்த அமைப்புக்கள் மற்றும் தயாரிப்புக்களை வடிவமைத்து உருவாக்குகிறது. இது மெக்கானிக்கல் பாகங்கள் எலக்ரானிக் சென்சர்கள் மற்றும் உட்பொதிக்கப்பட்ட அமைப்புக்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பை உள்ளடக்கியது.

இது ரோபோக்கள் தானியங்கு உற்பத்தி அமைப்புக்கள், மருத்துவ சாதனங்கள், தன்னாட்சி வாகனங்கள் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் போன்ற தயாரிப்புக்களை வடிவமைப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் தேவையான அறிவை வழங்குகிறது.

இயந்திரவியல் பட்டப்படிப்பை முடித்தவர்கள் இயந்திர பொறியியல், மின்னணுவியல், கணினி அறிவியல் மற்றும் கட்டுப்பாட்டு அமைப்புக்களை ஒருங்கிணைக்கும் தானியங்கும் அமைப்புக்களை உருவாக்குவதில் வல்லுநர்களாக இருப்பார்கள்.

இச் சிறப்பு பிரிவின் தொழிற்துறை வாய்ப்புக்களாவன

- வாகன இயந்திர தொழிற்துறை (Automative industry)
- ரோபோட்டிக்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு (Robotic and artificial intelligent)
- உயிரியல் மருத்துவ பொறியியல் (Biomedical Engineering)
- எரிசக்தி மற்றும் புதுப்பித்தல் தொழில்நுட்பவியல் (Energy and Renewable technology)

அறிவியலும் தொழில்நுட்பமும் முன்னேற்றம் மற்றும் கண்டுபிடிப்புகளின் அடிப்படை இயக்கிகள் ஆகும். அவை உலகைப் பற்றிய நமது புரிதலையும் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துகின்றது. பொருளாதார வளர்ச்சியை உருவாக்குகின்றது, உலகளாவிய சவால்களை எதிர்கொள்கின்றது, படைப்பாற்றல் மற்றும் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கின்றது மற்றும் கல்வி அறிவை மேம்படுத்துகின்றது. மனித குலத்தின் சிறந்த எதிர்காலத்தை உருவாக்க அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் முதலீடு செய்வது அவசியம். விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் போன்ற தொழில்களில் சவாலான பதவிகளை எளிதில் ஏற்கக்கூடிய பட்டதாரிகளை உருவாக்க இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக் கற்கைநெறியில் பட்டதாரி தொழில் முனைவோருக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில் தோல்விக்கு இடமே இல்லை... "இந்து" விஷயத்தில் கவனம் தேவை... வெற்றி நமக்கானது தான்..!

சு.தனுஷயன்
14ஆம் தலைமுறை
கணினி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் கற்கைநெறி

வாழ்க்கையில் நாம் முன்னேற வேண்டும் என்று துடிப்பால் மட்டுமே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சுற்றி இருப்பவர்களால் நாம் பல நேரங்களில் மனதளவில் கஷ்டப்படும் போதெல்லாம் நமக்கு நாமே உத்வேகம் கொடுத்துக் கொண்டிருந்தால் மட்டும் தான் நம்முடைய வெற்றி நம்மை சேரும்.

அடுத்தடுத்து தோல்விகள் வந்தாலும் துவண்டு போகாமல் என்னால் எதையும் சாதிக்க முடியும் என்று நினைப்பு மட்டும் மனதை விட்டு நீங்காமல் தொடர்ச்சியாக முயற்சி வேண்டும் நண்பா.

பொதுவாக வாழ்க்கையில் எல்லோருக்கும் தோல்வியே வேண்டாம் வெற்றி மட்டும் வேண்டும் என்ற நினைப்புதான் அனைவருக்கும் இருக்கும். ஆனால் சில நேரங்களில் நாம் செய்யும் சிறு சிறு தவறுகளாலும் நமக்கு தோல்விகள் வந்து அனுபவமாக மாறக்கூடும். பல நேரங்களில் கூட இருப்பவர்களே நமக்கு செய்யும் துரோகங்கள் கூட நமக்கு தோல்வியை ஏற்படுத்திவிடும். ஆனால் அந்த நேரத்தில் இப்படி ஆகிவிட்டதே என்று நடந்து முடிந்த விஷயத்தை எண்ணி எண்ணி வருத்தத்தில் இருக்கும்போது நாம் கஷ்டத்தில் மட்டும் தான் இருக்க முடியுமே தவிர வெற்றியை ருசி பார்க்க முடியாது. அந்த நேரத்தில் நமக்கு நாமே ஊக்கம் "Motivation"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்துக் கொண்டிருந்தால் மட்டும் தான் அடுத்த என்ன செய்ய முடியும் என்பதை யோசிக்கவே முடியும்.

தோல்விகளால் அடிபட்டால் உடனே எழுந்து விடுங்கள். இல்லை என்றால் இந்த உலகம் உங்களை புதைத்து விடும். வெற்றி பெற்றவர்களை மட்டும் தான் இந்த உலகமே கொண்டாடும். நாம் தோல்வி பெற்று விட்டால் இது எனக்கு ஏற்கனவே தெரியும் இவருக்கு இப்படித்தான் ஆகும் என்று, ஒரே வார்த்தையில் இந்த உலகம் நம் முயற்சிகளையும், கஷ்டங்களையும் புதைத்து விடுவார்கள். ஆனால் பட்ட தோல்விகள் இருந்து விரைவாக அடுத்து என்ன செய்ய வேண்டும் என்ற ஒரு சிந்தனை தான் நமக்கு இருக்க வேண்டும். ஐயோ இப்படி ஆகிவிட்டதே! என்று யோசித்துக் கொண்டே இருக்கக் கூடாது. முயற்சி செய்ய தயங்காமல் நாம் எடுத்து வைக்கும் அடி தான் நம்மை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும்.

மாற்றங்கள் ஒன்றே இந்த உலகில் இறைவன் தோற்றுவித்த மாறாத நியதி. வாழ்க்கையில் இதை நாம் புரிந்து வாழ பழகி விட்டால் யாருடைய மாறுதலும் நம்மை பலம் இழக்க செய்யாது. கூட இருந்தவர்கள் நமக்கு குழிப்பறித்தாலும் அவர்களுடைய சுயரூபம் தெரிந்து விட்டது என்று தூக்கி எறிந்து விட வேண்டுமே தவிர ஏன் இப்படி செய்தீர்கள் எதற்காக இப்படி செய்தீர்கள் என்று அவர்களிடம் சென்று வீணாக விவாதம் செய்து கொண்டிருப்பதால் ஒன்று நடந்து விடாது நண்பா! நான் உனக்கு கொடுத்த பாசத்தையும், நம்பிக்கையையும் நீங்கள் இழந்து விட்டீர்கள். ஆனால் உங்கள் முன்பு என்னால், என்னுடைய திறமையால் வெற்றி காண முடியும் என்று உறுதியாக நீங்கள் உங்களை ஏமாற்றியவர்கள் முன்பு ஜெயித்துக் காட்ட வேண்டும்.

நீ என்ன செய்தாலும் அதற்கு குற்றம் சொல்ல நாலு பேர் இருப்பார்கள். ஆனால் அந்த நாலு பேர்கள் உங்களுடைய குற்றத்தை மட்டும் தான் பார்த்துக் கொண்டிருப்பார்களே தவிர, நீங்கள் வெற்றி பெற்ற பிறகு அவர்கள் அதைக் குறித்து பேச முடியாது. உங்கள் வெற்றியால் மட்டும்தான் அவர்களுடைய வாயை அடைக்க முடியும். உண்மையான வாழ்க்கை என்றால் அடுத்தடுத்து முயற்சியும், புதிய அனுபவங்களும் கிடைத்துக் கொண்டு இருக்க வேண்டும். இருக்கும் சூழ்நிலையில் புதியதை கற்று வெற்றியை, மகிழ்ச்சியோடு இருந்து கொண்டாடுங்கள் நண்பர்களே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் அறக்கருத்துக்களும் பதினெண் கீழ்கணக்கு நூல்களும்.

க.யதுஷ்னி
14ஆம் தலைமுறை
கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம்
கற்கைநெறி

தமிழ் இலக்கியங்கள் வாழ்க்கையின் பிரதிவிம்பமாகும். காலப்போக்கில் வாழ்வியலோட்டத்தின் வேகத்தால் வாழ்வியல் அறங்கள் மதிப்பிழந்து போயக் கொண்டுள்ளன. இதனை செம்மைப்படுத்த நம் மொழியின் இலக்கியங்களின் பங்கு இன்றியமையாத ஒன்றாகும். ஒரு சமூகத்தின் அடையாளம் மொழியாகும். ஒரு மொழிக்குரிய இலக்கியங்களில் இது அறம், இது தீங்கு என வழிப்படுத்திக் கூறுவது நீதி நூல்களாகும். அவற்றில் அறம் சார்ந்த கருத்துகளை நான்கடிகளுக்கு மிகாமல் குறைந்த அடிகளில் உரைப்பது பதினெண் கீழ்கணக்கு நூல்களாகும். இதனை.

"அடிநிமிர் பில்லா செய்யுட்டொகுதி
அறம் பொருள் இன்பம் அடுக்கியவ்வகைத்
திறம்பட உரைப்பது கீழ்கணக்காகும்"
என்னும் செய்யுள் மூலம் அறியலாம்.

பழந்தமிழ் இலக்கியங்களாக பத்துப்பாட்டு எட்டுத்தொகை, பதினெண் கீழ்கணக்கு நூல்கள் ஆகும். இவற்றை நாம் தொகை நூல்கள் என்போம். அதாவது பல நூல்களின் தொகுப்பே தொகை நூல்களாகும். பத்து நூல்களை கொண்டது பத்துப்பாட்டு ஆகவும், எட்டு நூல்களை கொண்டது எட்டுத்தொகை ஆகவும், பதினெட்டு நூல்கள் அடங்கியது பதினெண் கீழ்கணக்கு நூல்கள் ஆக்வும் வழங்கப்படுகிறது. இவற்றில் பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும், சங்க காலத்திற்குரியன. சங்கமருவிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் தோன்றிய பதினெட்டு நூல்களை இணைத்து பதினெண் கீழ்கணக்கு நூல்கள் என்று கூறுவர்.

சங்க காலத்தில் தோன்றிய நூல்கள் பெரும்பாலும் காதலைப்பற்றியும், அரசியலைப் பற்றியுமே வலியுறுத்துகின்றன. எனினும் காதல், அரசியல் பற்றி கூறும் நூல்களிலும் அங்காங்கே நீதி நெறிகளும், அறநெறி கருத்துகளும், தமிழர் வாழ்வியல் மற்றும் பண்பாடு பற்றி கூறும் கருத்துகளும் அடங்கியுள்ளன. எனினும் சங்க காலத்தில் நீதி நெறிகளைப் பற்றியும். வாழ்வியல், அறிவியல் கருத்துகள் பற்றி மட்டுமே கூறும் நூல்கள் எழவில்லை. எவ்வாறெனினும் தமிழ் நாட்டில் சமண, பௌத்த மதங்களின் ஆதிக்கம் அதிகரித்த பின்பு தான் ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் பற்றி மட்டுமே போதிக்கும் நூல்கள் எழுந்தன. சமண-பௌத்த மதங்கள் ஒழுக்கம் மற்றும் அன்பை முதன்மை படுத்தும் மதங்களாகும். எனவே அக்காலத்தில் அறக்கருத்துகள் மற்றும் காருண்யம் பற்றி போதிக்கும் பல நூல்களும் பாசுரங்களும் எழுந்ததில் வியப்பேதும் இல்லை.

பதினெண் கீழ்கணக்கு நூல்கள் தான் முதன் முதலில் ஒழுக்கத்தைப் பற்றியும் தமிழர் வாழ்வியல் பண்பாட்டுக் கருத்துகளை பற்றி மட்டுமே கூறும் தமிழ் நூல்களாகும். இவற்றிலும் பதினொரு நீதி நூல்களும், அகக் கருத்துகளைப் பற்றி கூறும் ஆறு நூல்களும், போர் மற்றும் யுத்த விதிமுறைகள் பற்றி கூறும் நூல் ஒன்றும் அடங்குகின்றன.

“நாலடி நான்மணி நானாற்பது
ஐந்திணை முப்
பால் கடுகம் கோவை பழமொழி மா
மூலம்
இன்னிலைய காஞ்சியுடன் ஏலாதி
என்பவே
கைந்நிலையும் ஆம்கீழ்க் கணக்கு”

இவ் வெண்பாவானது பதினெண் கீழ்கணக்கில் அடங்கும் நூல்களின் பெயர்களை இலகுவாக ஞாபகத்தில் வைத்துகொள்வதற்கு ஏதுவாக இடைக்காலத்துப் புலவர் ஒருவரால் இயற்றப்பட்டது. இவ் வெண்பாவின் படி நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுவது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்று ஐம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்ச மூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந்நிலை என்பன பதினெண் கீழ்கணக்கு நூல் தொகுதியுள் அடங்கும் நூல்களாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சங்கமருவிய காலத்தில் பதினெண் கீழ்கணக்கு நூல்களுக்கு பின் எழுந்த நூல்களுக்கெல்லாம் பதினெண் கீழ்கணக்கு நூல்களே வழிகாட்டியாக திகழ்ந்தன. இந் நூல்கள் எல்லாம் ஐவகைச்சீலங்கள் பற்றி முதன்மை படுத்தி கூறுகின்றன. கொல்லாமை, கள்ளுண்ணாமை, பொய்யாமை, காமம் இன்மை, கள்ளாமை என்பவையே ஐவகைச்சீலங்கள் ஆகும்.

பதினெண் கீழ்கணக்கு நூல்களில் தமிழ் மக்களால் நெடுங்காலமாக போற்றப்பட்டு ஒப்புகொள்ளப்பட்டு கடைபிடிக்கப்பட்டு வந்த பண்பாட்டு ஒழுக்க நெறிகளே பாடல்களாக உருப்பெற்றுள்ளன. பதினெண் கீழ்கணக்கு நூல்கள் தோன்றிய காலம் சமண பௌத்த மத எழுச்சிகாலமாக இருந்தாலும் அவற்றில் கூறப்பட்டுள்ள அறக்கருத்துக்கள் அனைத்தும் தமிழரால் வழி வழியாக பேணப்பட்டு போற்றப்பட்டு கடைப்பிடிக்கப்பட்டு வந்தவை தாம்.

திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்ச மூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி எனும் பதினொரு நூல்கள் தமிழரின் அறவாழ்வை பற்றி எடுத்தியம்பும் பதினெண் கீழ்கணக்கு நூல்களாகும்

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி

நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி

சொல்லாய்ந்து நாலடி நன்கு இனிது

பழகு தமிழ் சொல்லருமை நாலிரண்டில்"

என்னும் பாடல் வரிகள் நாலடியார் மற்றும் திருக்குறளின் சிறப்புகளை பற்றி எடுத்திளம்புகின்றன. நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களை கொண்ட சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நானூறு தனிப்பாட்டுகளின் தொகுப்பு நாலடியார் ஆகும். இரண்டு அடிகளில் தமிழர் ஒழுக்கவியலை அழகாக எடுத்தியம்புவது திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளாகும். இவ்விரண்டு நூல்களும் வாழ்க்கையின் எளிமையான நடைமுறை பண்பாட்டு கருத்துகளை அழகாக கையாண்டு தமிழரின் அறவியல் கருத்துகளை அழகாக எடுத்தியம்புகின்றன.

தனிமனித ஒழுக்கம் பற்றி கூறும் நூல்களில் முக்கியமானது விளம்பிநாகனாரால் எழுதப்பட்ட நான்மணிக்கடிகை ஆகும். நான்மணிக்கடிகையில் நல்லொழுக்கமானது செல்வத்திற்கு நிகரானது என்றும் ஒழுக்கப்பிறழ்வால் செல்வம் மனிதரிடம் நிலைக்காது என்றும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கூறுகிறது. சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் திரிகடுகம் என்பர். எவ்வாறு திரிகடுகம் மனித உடல் ஆரோக்கியத்தை பேண அவசியமோ அது போல நல்லொழுக்கமானது மேம்பாடான மனித வாழ்க்கைக்கு அவசியமானது என திரிகடுகம் கூறுகிறது. இந் நூல் பெரும்பாலும் திருக்குறள் மற்றும் நாலடியாரைப் பின்பற்றியே எழுந்துள்ளது. திரிகடுகத்தில் உள்ள அனேக பாடல்கள் தமிழர் வாழ்வில் இல்லற சிறப்பை பற்றியே எடுத்தியம்புகின்றன.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒழுக்கங்களை எடுத்துக் கூறுபவை ஆசாரக்கோவையாகும். அதாவது ஒழுக்கம் மற்றும் ஆசாரங்களைப் பற்றி அடுக்கிக் கூறும் நூலாகும். கல்வி ஞானமற்ற மக்களும் அறத்தை பற்றி தெரிந்து கொள்ளவும் சமூகமானது அறநெறியில் இருந்து தவறாது இருக்க வேண்டும் எனக் கருதிய பெரியோர்கள் அவ்வப்போது கூறிவைத்த கருத்துகளை கொண்ட தொகுதி பழமொழி ஆகும்.

“காரியாசானால்” இயற்றப்பட்ட நான்கு அடிகளால் நூறு பாடல்களைக் கொண்ட பாடல் தொகுதி சிறுபஞ்ச மூலம் ஆகும். இதில் ஒவ்வொரு பாடலும் ஐந்து நீதிக்கருத்துகளை கொண்டுள்ளன. மேலும் சிறுபஞ்ச மூலம் எனும் மருந்து மூலம் உடல் நலம் பெறுவது போல சிறுபஞ்ச மூலப்பாட்டில் உள்ள ஐவகைப் பொருள்களும் மனித வாழ்வின் அறத்தை பேணும்.

மதுரைக் கூடலூர்க்கிழாரால் இயற்றப்பட்ட முதுமொழிக்காஞ்சி எளிமையான சொற்களால் அறங்களுக்கிடையே ஒப்பிட்டு காட்டி அறவாழ்க்கையின் பெருமையினையும் வாழ்க்கைக்கு அறம் எவ்வாறு முக்கியமானது என்பதையும் எடுத்தியம்புகிறது. ஏலாதிச் சூரணம் எவ்வாறு உடல் நோயை போக்கி உடலிற்கு வலிமையையும் வனப்பினையும் தர வல்லதோ அது போலவே ஏலாதியின் நூற்பாக்கள் மக்கள் வாழ்வியலின் நல்லொழுக்கத்திற்கும் வாழ்க்கைகும் இன்றியமையாதன.

ஒழுக்கம் என்பது தனிமனித வாழ்க்கைக்கு மட்டுமல்ல ஒரு சமூகத்தின் பண்பாட்டு மற்றும் வளர்ச்சிக்கும் இன்றியமையாதன. பண்டைய தமிழர் “ஒழுக்கமுடைய வாழ்வே உயர்ந்த வாழ்வு” என்ற கொள்கையில் உறுதியானவர்கள். மேற்குறிப்பிட்ட படி பதினெண் கீழ்கணக்கு நூல்கள் தமிழரின் ஒழுக்கத்தையும் அவர்கள் போற்றி பின்பற்றிய அறக்கருத்துகளையும் எடுத்தியம்புவதோடு இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்களை அற வழிப்பாதையில் வாழ்வதற்கும் வழிப்படுத்துகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைப்பயணத்திலிருந்து

வ.வஜீந்
16ஆம் தலைமுறை
தகவல் தொழில்நுட்பமும் கற்கைநெறி

நான் இரசித்தவை
வாசகரின் இரசனைக்காக
பல்கலைப்பயணத்திலிருந்து

உச்சந்தலையில் துளை
வெற்றிக்கான வழி
அடி இடப்பக்க வயிற்றில்
பருத்தித்துறையும் பதுளையும்..

ஏதோ ஐரோப்பா நாட்டுப்பயணம்
மூன்று பெரிய சூட்கேஸ்கள்
முதல்முறை என்பதால்...

கறுப்பு இருக்கை புதிதல்ல
கால நீளமென்பது புதிது....

தரையை அண்மித்த மேகமும்
வானத்தை அண்மித்த தரையும் புதிது..

காவலாளிகள் கூகிள் மேப்
கைகள் அம்புக்குறி..
காத்திருந்தோம் விடுதி உத்தியோகத்தருக்காக
பேரூந்து ஓட்டுனரின் வேகத்தால்...

எறும்புகளாக ஏறினோம்
அறை இலக்கம் அறிந்தபின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுவரெலியா சுற்றுலா அறை
40 ஆம் இலக்க அறை.....

வீட்டில் இல்லாத வசதிகள்
வெல்லச விடுதியில்..
முத்தமிட பெல்கனிக்கு
சென்றால் போதும்
மேகங்களை...

சச்சின் பட மூடுபனி
பாட்டுப்படிக்க நண்பர் அணி
சரும உவர்நீர் வற்றிப்போனது
அதேபனி.....

அறிமுகமில்லா நட்புக்கள்
ஒன்லைன் முகங்கள்
ஆ.ஃ.ப்லைன் ஆனது..

கடிகாரம் மறந்து போகும்
இரவுகள்..
கலப்புணவுகளின் கொண்டாட்டம்
கலாசார இலங்கை ஒரே விடுதியில்

மேக பரிசோதகர் பட்டாளம்
இரத்த பரிசோதகர் பட்டாளம்
இரசிப்பதும் பயப்படுவதும்

பொழுதுபோக்கிற்கு வெல்லஸ
சுற்றுலா
இனிமையான இரா நடை

சனநெரிசல் இல்லை
பணநெரிசல் இல்லை
மாணவர் ஒழுங்கும் மலிவு விலையும்..

அழகிகள் வலம்வரும்
சுற்றுலாத்தலம்
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்.....

வீட்டில் இல்லாத நாட்களை
இங்கே கழிக்க விரும்புவேன்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் (இசைக்கருவி)

கலானந்தராசன் மிதுர்சன்
14ஆம் தலைமுறை
கணினி விஞ்ஞானமும் தொழிநுட்பமும்
கற்கைநெறி

யாழ் என்பது தொல்காப்பியம் தோன்றுவதற்கு முன்னர் தோன்றிய நரம்புகளால் ஆக்கப்பட்ட மிகச்சிறப்பு வாய்ந்த இசைக்கருவி ஆகும். யாழி என்ற பண்டைய கால விலங்கு ஒன்றின் தலையை போல் அமைக்கப்பட்டமையால் இது யாழ் என்று அழைக்கப்படுகிறது. மேலும், தமிழர்கள் வாசித்த முதல் இசைக்கருவி யாழ் ஆகும்.

சங்க இலக்கியங்களிலும் (புறநானூறு, கலித்தொகை), காப்பியங்களிலும் (சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி) யாழின் பயன்பாடு பற்றி அறியமுடிகிறது. 1947ல் சுவாமி விபுலானந்தர் (ஈழம்) "யாழ்நூல்" எனும் நூலில் யாழைப் பற்றி பல விரிவான ஆய்வுகளை தொகுத்துள்ளார். மேலும், யாழ்ப்பாணம் (ஈழம்) எனும் பெயர் வரக் காரணம் யாழ் வாசிக்கும் பாணர் கூட்டத்தினர் அவ்விடத்தில் பரவி வாழ்ந்ததாகவும் அவர்களை யாழ்ப்பாணர் என்று அழைக்கபட்டதாகவும் அதனாலேயே பின்னர் அவ்விடம் யாழ்ப்பாணமாக மாறியதாகவும் ஒரு வரலாறு உண்டு.

குறிஞ்சி நிலப்பகுதியில் வாழ்ந்த வேடர்கள் வேட்டைத் தொழிலை செய்யும் போது வில்லில் கட்டப்பட்ட நாணில் இருந்து அம்பு செல்லும் போது உருவாகிய இசையே இவ் யாழ் இசைக்கருவியின் உருவாக்கத்திற்கு முதல் புள்ளியாக அமைந்திருக்க வேண்டும். இந்த வில்லே வில்யாழாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம் பெற்றது. பின்னர் மனித சிந்தனையாலும், உழைப்பினாலும் பல்வகை யாழ்கள் தோற்றம் பெற்றன.

யாழின் சில வகைகள்:

1. சீறியாழ் (7 நரம்புகள் உடையது.)
2. சகோடயாழ் (16 நரம்புகள் உடையது)
3. மகரயாழ் (17 நரம்புகள் உடையது)
4. பேறியாழ் (21 நரம்புகள் உடையது)
5. வில்யாழ் (21 நரம்புகள் உடையது)

தமிழர்கள் தெய்வத்தை போல் யாழை வணங்கியதாக சிலப்பதிகாரம் மூலம் அறிந்து கொண்டாலும் தற்போதைய நிலையில் யாழ் வழக்கொழிந்து விட்டது. இதற்கு காரணம் யாழ் பல நூற்றாண்டுகளாக உருவத்தில் உருமாற்றம் அடைந்து வீணையாக மாறியமை. அதாவது வீணையின் வரவே யாழின் செல்வாக்கை அழித்தது என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே நீ செல்கின்றாய் .....?

ரா.அபிஷா
16ஆம் தலைமுறை
உயிர் முறைமைகள் தொழில்நுட்பமும்
கற்கைநெறி

எதிர்கால இலங்கை உன்
கையில் என்றிருக்க
எங்கே நீ செல்கிறாய்
என் நண்பனே....!

உனைப் பெற்றார்
வீடு வந்து சேர்வாய் எங்கள்
வாட்டம் எல்லாம் தீர்ப்பாய் - என
பாதை வழி பார்த்திருக்க
எங்கே நீ செல்கிறாய் என் நண்பனே

குடு என்று சொல்லிப் போதை
குடுக்கின்ற கூட்டத்தின் பின் - உடல்
நடுங்க போகின்றாய்
நீ உறிஞ்சிக் கொண்டதால்
பணத்தை உன் நல்ல குணத்தை
கல்வித் தனத்தை - உன்
உடல் வனப்பை
உறவின் நட்பின் மதிப்பை
எல்லாம் உறிஞ்சிக்கொண்டது.
தெரிந்தே கொல்லும் விஷத்தை ஏன்
தேடிச் செல்கின்றாய் என் நண்பனே

ரயில் கடவையில் என்ன ரணகளம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் போன பின் ஏது பெருமிதம்
கோச்சி வரும் கவனம்
ஏன்றொரு Board இருந்தாலும்
"கொணங் கொணங்..." என
அலாரம் அடித்திருந்தாலும்
சிவப்பு லைற் அங்கே எரிந்திருந்தாலும்
போகின்றாய் நண்பனே
எமை எல்லாம் புலம்ப விட்டு
ஒரு நொடி இரு நொடி திரும்பிப் பார்த்து
ரயில் வழி கடந்தால்
உயிர் உடல் மீளும் நண்பனே

Bike ஓட்டம் நீ காட்டும் சாகசம்
உயிர் கொஞ்சம் உடல் மிச்சம்
சேதம் என்பதே உச்சம்
போவோர் வருவோர்
இன்னும் ஆடும் மாடும்
நாயும் நிறையும்
வீதிகளோ என்ன சொல்ல
என்னும் எல்லாம் கொஞ்சம்
கவனம் கொண்டால் மீண்டு
வீடு வருவாய் அல்லவோ என் நண்பனே

தற்கொலை என்பது உன் சொத்தா
மொத்தமாய் எடுத்துக் கொண்டாய்
தண்டவாளத்துக்கு தலையும்
தொங்கும் கயிற்றுக்கு கழுத்தும்
பூச்சி மருந்துக்கு குடலும்
பெற்றோல் நெருப்புக்கு உடலும்
வாரி வாரி கொடுக்கின்றாய்
பாரியின் பேரனா நீ
யாரைப் பழிவாங்க
யாருக்கு நிரூபிக்க
இவ்வாறானாய்...
இதனால் எதுவும் மாறாது
என் நண்பனே
மதி கொண்டு தேடினால்
வழி வந்து சேரும் - வாழும்
வகை வந்து சேரும்

வாசல் தாண்டியும் உன் தாயின்
விழி தேடி வருகின்றது.
வந்து விடு நண்பனே
மீண்டும் அவள் பிள்ளையாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதற் பிள்ளை

மு.லக்ஷிகா
14ஆம் தலைமுறை
விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் கற்கைநெறி

வாழ விடுங்கள்
எப்போதும்
ஏழை வீட்டில் முதற் பிள்ளை
பெண்ணாய் வேண்டாம்.
தந்தைக்கு நோய் என
உறங்கிட வேண்டாம்.
தாயும் வீட்டில் வேலை என
முடங்கிட வேண்டாம்.
தங்கைகளும் சுமையென
நினைத்திட வேண்டாம்.
பிச்சை காசாய்
வெளிநாட்டு பணமும் கூட வேண்டாம்.

அது வேண்டும் இது வேண்டும் என்ற
ஆசைகளும் வேண்டாம்.

இளமை பருவத்தில்
வறுமை வேண்டாம்.
இன்னல்கள் மட்டுமே
வாழ்வாய் வேண்டாம்.
குறைகள் காணும்
உறவினர் வேண்டாம்.
வேடிக்கை மட்டுமே பார்க்கும்
உற்றாரும் வேண்டாம்.
உதவாமல் இருப்பதற்கு
உறவாய் கூட யாரும் வேண்டாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்ததை கற்போம் என்ற
எண்ணமும் வேண்டாம்.
கையில் பணம் இல்லாதவனுக்கு
கனவுகளும் வேண்டாம்.
ஆசை காட்டி ஏமாற்றும்
காதலும் வேண்டாம்.
ஐயோ அதனால்
வேதனையும் வேண்டாம்.

போதும் இறைவா இனி
இந்த கஷ்டம் என்பதே வேண்டாம்.

கருவறை விட்டு
கல்லறை போகும் நடுவே
உயிர் கொண்டு
இருக்கின்ற பயணப் பாதை
வாழ்க்கை என்போம்.

பயணங்கள் மாறாலாம் ஆனால்
பாதை ஒன்று தான்.
இன்ப துன்பங்கள் வந்து மறையும்.
தாங்கிக் கொள்ள வலிமையான
மனம் வேண்டும்.
தோல்விகள் படிக்கட்டாக
வெற்றி நோக்கி முன்னேற வேண்டும்.
இல்லை என்ற வார்த்தை
இனிமேலும் வீட்டில் கேட்காத வரை
உழைக்க வேண்டும்.
வாழ்வதற்கு பணம் வேண்டும் என்ற
நிலை போய்,
பசித்தால் உணவு வாங்கும் அளவிற்கு
நடுத்தரமாய் வாழ விடுங்கள்.
அது வரை எனைப் பெற்றவர்களை
வாழ வையுங்கள்.

நிலையில்லாத உலகில்
நிம்மதியும் விற்பனைக்கு தான்.
எங்களுக்கும் வாழ ஆசையுண்டு
வாழ வழி விடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகு உதிர்ந்த பறவை.....

க.கொணிஷா
14ஆம் தலைமுறை
ஏற்றுமதி விவசாயம் கற்கைநெறி

உறவுகள் கூடிவிட்டனர் எல்லோரும் அழுது கொண்டே இருந்தனர். அரவிந் இன்னும் கரண்ட் அடிச்சு மயக்கம் தெளியலையாம் என்று கனகமணி பாட்டி புலம்பிக் கொண்டு இருந்தாள். அரவிந்த் ஒரு கணித ஆசிரியர் ஆம் அவன் கணிதம் படிப்பிச்சு தான் எத்தினை பேர கம்பஸ் அனுப்பினான் இனி இங்க ஆரு படிப்பிக்கிறன்னு பரிமளம் தலைப்பாட அடிச்சு கிட்டு அழுதாள். அவள் அரவிந்தில் உள்ள பாசத்தில் அழல தன்ர புள்ளைய எப்படி படிப்பிக்க போறேன் என்டு அழுதிட்டு இருக்காள் என்று சன்முகத்தார் தனக்குள் முனுமுனுத்தபடி நகர்ந்து கொண்டார்.

சுற்றி எல்லோரும் அழுது ஒப்பாரி வைத்துக்கொண்டு இருந்தார்கள். சரசு திடிரென்று மயக்கம் போட்டு விழுந்தாள். சரசு அரவிந்தின் தாய் காரணம் நீண்ட நேரமாக அர்விந்த் எழுந்திருக்கவில்லை. எந்த தாயும் பிள்ளை மூச்சு பேச்சு இல்லாமல் கிடக்கும் போது எப்படி சும்மா இருப்பாள். அழுது களைத்து மயக்கம் போட்டு விழுந்து விட்டாள். தூரத்தில் ஆம்பியூலன்ஸ் அலறிக்கொண்டே பறந்து வந்தது சிவப்பு விளக்கு சுழன்று கொண்டே இருந்தது. அரவிந்தின் உயிர் அதில் தான் ஊசலாடிக் கொண்டு இருந்தது.

அனுசா...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுசாவிற்கு இளமைக் காலத்தில் இருந்தே அரவிந்தை நன்றாகத் தெரியும். பக்கத்து வீட்டிலிருப்பதனால் மட்டுமன்றி, ஓரளவு தூரத்து சொந்தமும் கூட. நிர்வாண உலகத்திலிருந்து விடுபட்டு, பள்ளிக்கு முன்பின்னாகப் போனதும், மாலை நேரங்களில் விளையாடி மகிழ்ந்ததும், இடையிடையே போட்டி போட்டுக் கொண்டு 'டா டீ' சொன்னதும் மறக்க முடியாதவை. ஆனால் இயற்கையின் நிகழ்வுகள் இப்படிப்பட்ட சந்தோஷ சாம்ராச்சியத்தையே கலைத்து விடக் கூடியவை என்பதை அப்போது அரவிந் உணரவில்லை.

நாங்கள் எல்லாம் குழந்தைகளாகவே இருந்திருக்கப்படாதா?

குழந்தைப் பருவத்தைக் கடந்து, ஆளாகிய பின் அவளோடு கதைப்பதையே அடியோடு விட்டு விட்டேன். எப்போதாவது தேவை கருதிக் கதைத்தது முண்டு.

அதன் பிறகு ஆறு வருடங்கள் கழித்து அவனுக்கு பக்கத்தில் எதிரும் புதிருமாக அமர்ந்திருக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்து விட்டார்கள் அவள் பெற்றோர்கள். அதன் நிமித்தம் அவனுக்கு முன்னால் நாலைந்து மாதமாக நாணிக்கோணி அமர்ந்திருக்கிறாள்.

அங்கே தான் ஆரம்பிக்கின்றது இருவருக்கும் இடையேயான காதல். அவளுக்கு கொடுக்கப்பட்ட கணக்கு அப்படியே கடதாசியில் கண்மூடிக் கிடக்கின்றது. பேனா அசைய மறுத்து அப்படியே நிலைகுத்தி நிற்கின்றது. நிமிர்ந்து பார்த்தாள். அரவிந், இமைகள் இமைக்காமல் அவளையே பார்த்தபடி இருந்தது.

அனுசா உனக்கு ஒன்னு சொல்லட்டுமா என்று கேள்வியை தொடுத்தான் அரவிந்த். சற்றும் எதிர்பாராத அனுசா ஏக்கத்தின் உச்ச கட்டத்தை அடைந்தாள். ஆனால் அரவிந் அதை அப்படியே நிறுத்தி விட அவள் மனது பறக்க ஆரம்பித்து. எதை சொல்ல வந்திருப்பார் உன்னை பிடிக்கும் உன்கூட வாழ ஆசைப்படுகிறேன் என்பதையா, இல்லை நான் அவரை மறைமுகமாக காதலிக்கிறேன் என்பதையா, அவரை அடிக்கடி பார்வையால் கொள்ளும் என் கண்களை பற்றியா, இல்லை முதல் நாள் நான் பள்ளிக்கூட கலாச்சார நிகழ்வுக்கு சேலை கட்டி வந்தபோது என் முந்தானை அவிழ்ந்த சமயம் குத்திவிட்டதையா என சிந்தித்து கொண்டு இருந்தாள். அனுசா என்ன யோசிக்கிறாய் கடுமையா.... கணக்கை செய்து முடி என்றான் அரவிந்..

நாட்கள் ஓடியது அனுசா சுருங்கி அனு ஆனாது அதற்கு அவள் பாட்டி தான் காரணம் அவருக்கு சா என்பது பிடிக்காது உயிரோடு இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதே உனக்கு சா என்று வைச்சுட்டாள் உன்னோட ஆத்தா. சொல்ல சொல்ல கேட்டாளா என்று அடிக்கடி பாட்டி அம்மாவோடு சண்டைபிடிப்பாள். அரவிந்தும் "அனு" என தன் பெயரை சுருக்கி கொண்டது அனுசாவை மேலும் அரவிந்தோடு நெருக்கமாக்கியது.

ஆனால் நட்புக்குள் எளிதில் காதல் வந்துவிடுகிறது. இங்கு ஓர் எழுதப்படாத விதி நண்பர்களாக இருப்பவர்கள் ஒருபோதும் காதலர்களாக மாறக்கூடாது என்று. ஆனால் காதலின் பிறப்பிடம் நட்பு என்பதை யாரும் புரிந்து கொள்ள முயற்சிப்பதில்லை. காதலித்த பிறகும் சிறந்த நண்பர்களாக இருக்காலாம் என்று யாரும் உணர்ந்து கொள்வதுமில்லை.

அப்படித்தான் அரவிந், அனுசா இருவரும் ஒருவரை ஒருவர் ஒருதலையாக காதலித்தனர். ஆனால் அரவிந்துக்கு அவளிடம் பிடித்ததே அவள் வெகுளித்தனம் தான். அத்தோடு அவள் சிரிக்கும் போது அப்பப்போது தோன்றி மறையும் அந்த சுரங்க குழியும். ஒருமுறை அனுசாவின் குதிரை வால் பின்னலை மாத்தி இரட்டைசடையாய் பின்னி விட்டான், அத்தோடு பாவடை சட்டையை தாவணியாக மாற்று அழகாய் இருப்பாய் என்று அரவிந் சொன்னதில் இருந்து அவள் அப்படியே தன்னை மாற்றிக்கொண்டாள்.

அனு உனக்கு ஒன்று சொல்லனும் என்று ஆரம்பித்தான் மறுபடியும் அரவிந். அதற்குள் சரசு அரவிந்தை அழைக்கவும் வெளியே சென்று சிறுது நேரம் கழித்து வந்தான். அதற்குள் இவள் மனம் குரங்காக மாறி அவனோடு குடித்தனம் நடத்தி விடும் அளவிற்கு தாவியது. வந்தவன் கையில் ஒரு கடாதாசியோடு வந்தான். இவளுக்கு எல்லை இல்லாத ஆனந்தம் அது காதல் கடிதமாக இருக்கும் என்று.

எவ்வளவு ஆனந்தப்பட்டாலோ அப்படியே இடி விழுந்தது போல மாறிவிட்டாள். ஏன் என்றால் அதில் அரசாங்க முத்திரை ஒட்டப்பட்டு கீழ் கையெழுத்தும் இடப்பட்டு இருந்தது. அனு நான் வரா கிழமை கொழும்பு போறன் அங்க தான் எனக்கு வேலை கிடைச்சிருக்கு. உனக்கும் இந்த வெள்ளியோட பரீட்சை முடியுது தானே. என்று சொல்லிவிட்டு பெருமூச்சு விட்டான் அரவிந்.

இது கடைசி பரீட்சை நல்லா செய் அப்பத்தான் கம்பஸ் போகலாம் என்று சொல்லி விட்டு இவ்வளவு நேரம் படிச்சதும் காணும் நாளைக்கு பரீட்சை இருக்கு போய் படுத்து துங்கு குட்நைட் என்று விட்டு விடைபெற்றான் அரவிந்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவிந் ஊரில் இருந்து மட்டும் அல்ல அனுசா மனதில் கட்டி பூட்டி வைத்திருந்த மண்கோட்டையை கண்ணாடி அறைக்குள் சென்ற காட்டு யானை போல சுக்கு நூறாக உடைத்து விட்டு வெளியேறினான் அரவிந்த். நாட்கள் நகர்ந்து பரீட்சை பெறுபேறுகளும் வந்தது அனுசா அந்த மாவட்டத்தில் முதல் மாணவியாக தெரிவானாள் கம்பஸ்க்கு. அதில் இருந்து சற்று அவள் நடத்தைகளில் வித்தியாசம் தெரிந்தது அனுசா முதல் நிலையாக வருவதற்கு காரணமாய் இருந்த அரவிந்திடம் கூட அவள் அதை சொல்லவில்லை. நண்பன் போட்ட கடாதாசி மூலம் அவன் அதை அறிந்து பெரிதும் சந்தோஷப்பட்டான் அரவிந்.

பல்கலைக்கழகம் சென்றவள் அங்கே தன்னை முற்றுமுழுதாக மாற்றி கொண்டாள். இரட்டை சடை பின்னலை மட்டுமல்ல அரவிந் கட்ட சொன்ன தாவணியோடு சேர்த்து அரவிந்தையும் மாற்றிக்கொண்டாள் அனுசா. அங்குதான் அறிமுகமாகினான் கதிர். இருவரும் நன்றாக படிப்பார்கள் அத்தோடு அனுசா தன்னுடைய தகுதிக்கு ஏற்றால் போல் கதிர் பொருத்தமாக இருப்பான் என்பதால் காதலித்து கல்யாணம் செய்து கொண்டாள். இதற்குள் தங்கைக்கு திருமணம் வைத்திருப்பதாகவும் உடனே புறப்பட்டு கிளம்பி வரச்சொல்லி சரசு கடிதம் போட்டிருந்தாள். அரவிந் ஊரை பார்ப்பதை விட எனக்காக காத்திருக்கும் அனுவை பார்க்க போகிறேன் என்கின்ற சந்தோஷத்தில் துள்ளி குதித்த படி புறப்பட்டு வந்தான்.

ரெயில் ஏறி இருக்கையில் அமர்ந்து இன்பக்கடலில் மூழ்கினான். போனவுடன் எப்பிடியாச்சும் அனுவிட்ட லவ்வ சொல்லிடனும் எப்பிடிச்சொல்லாம் என தனக்குள்ளே நூறு இருநூறு தடவைகளுக்கிடையே ஒத்திகை பார்த்துக் கொண்டான். அதிகாலை ஸ்டேசன் வந்து சேர்ந்தான். விமல் வண்டியோடு வந்து காத்திருந்தான். வீடு வந்து சேர்ந்தான் அரவிந். அனு வரவில்லை அன்று இரவு வருவதாக அவள் தாய் அரவிந்திடம் கூறினாள். கலியாண வேலைகள் அத்தனையும் அப்படியே போட்டபடி கிடந்தது. கம்பை ஊன்றி கலர் பல்ப்பை மாட்டிக் கொண்டு இருந்தான். ஓர் கார் வந்து நின்றது. முதலில் கதிர் இறங்கி கதவை திறந்தான். அனுசா பின் இறங்கினாள் இவன் கண்களை அவனால் நம்பவே முடியவில்லை.

அப்போது கீழே ஏணியை பிடித்துக்கொண்டு இருந்த விமல் இதுதான் அனுசாட மாப்பிள்ளை கல்யாணம் கட்டி இரண்டு மாதம் ஆச்சு என்றான். அவன் வேலை செய்வது கரண்ட்டோடு என்பதை கூட மறந்து விட்டான் அப்போது தான் சாக்கடித்து நிலை தவறி விழுந்தான் அரவிந். ஆம்பியூலன்ஸ் மருத்துவமனையை அடைந்தது. நாளு சக்கர நாற்காலி வேகமா வந்தது உடனே மருத்துவர்கள் தீவிர சிகிச்சை பிரிவிற்கு கொண்டு சென்றனர். நீண்ட நேரமாக போராடி கொண்டு இருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கிடையில் மீண்டும் ஆம்புலன்ஸ் சிவப்பு விளக்கு சுழன்றபடி வேகமாக வந்தது. அதில் ஒரு இளைஞன் உடனே தாதியர்கள் அவனையும் அழைத்து கொண்டு அவசர சிகிச்சை பிரிவிற்கு விரைந்தார்கள். அந்த இளைஞன் மதுபோதையில் காரை செலுத்தி அருகில் இருந்த மரத்தில் மோதி அவன் முகம் முற்றிலும் சேதமாகி இருந்தது மருத்துவர்கள் முகமாற்று சிகிச்சை செய்தாள் அவனை காப்பாற்ற முடியும் என்றார்கள் எதிரே அழுது கொண்டு இருந்த அனுவிடம். அவன் வேறு யாரும் இல்லை கதிர் தான். கலியாணத்திற்கு வந்தவன் நண்பர்களோடு பார்ட்டி ஒன்றில் கலந்து விட்டு வீடு திரும்பிய போதுதான் விபத்துக்கு உள்ளாகி இருந்தான். வெளியே சரசு நீண்ட நேரமாக அழுது கொண்டு இருந்தாள். அவசர சிகிச்சை பிரிவில் இருந்து வந்த வைத்தியரிடம் சரசு பதறியடித்து வினவினாள் " சாறி அம்மா நாங்க எவ்வளவு முயற்சி செய்தும் உங்க மகன காப்பாற்ற முடியலை அவர் மூளைச் சாவடைந்து விட்டார். அவரோட உடல் உறுப்புகள் தானம் பண்ணிங்க என்ட உங்க மகன் பல உயிர்களை காப்பாற்றுவான் என்றார். உடனே சரசு சம்மதித்தாள் அரவிந்தின் முகம் அறுவைச்சிகிச்சை மூலம் கதிருக்கு மாற்றப்பட்டது. கதிரும் காப்பாற்ற பட்டான் இப்போது கதிரின் சிந்தனைகளோடு அரவிந்தன் முகத்தோடும் வாழ்ந்து கொண்டு இருக்கிறாள். அனுசா. உணர்வுகள் உண்மையென்றால் ஒருபோதும் காதல் யாரையும் ஏமாற்றாது.

ஏற்றுக்கொள்ளபடுகிறதோ மறுதலிக்கபடுகிறதோ என்பது முக்கியமல்ல வாழ்க்கையில் ஒரு தடவை எனினும் காதல் செய்திடுங்கள் இப்பிரபஞ்சத்தில் பாவப்பட்ட நாட்களை கொண்டாடி தீர்ப்பதற்கு ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதம்

இ.தக்ஷன்
14ஆம் தலைமுறை
கணினி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
கற்கைநெறி

கனவு உலகின் கலாச்சாரம் - நாம்
மறப்பதில்லை அதன் சமாச்சாரம்
பாரதத் தாயின் நாட்டியம் - நம்
உள்ளத்தை ஈர்த்த நடனாலயம்

சிரிக்கும் சிலம்பினுட் சிதறும்
பரல்களில் ஒரு பாதி.
தத்தகிட தத்தமென தாளமிடும்
தாளடியில் சிறு பாதி.
தாளிசைக்கு தலையாட்டும்
தோடுகளில் ஒரு பாதி.
கம்பனவன் கைபோலே கவிபேசும்
கருவிழியில் சிறு பாதி.

கொய்தபின்னும் குதித்தாடும்
கார்குழல் மலர்களின் சிறுமீதி.
வில்லென வளைந்திடும் வண்ணத்தோகை
விழிகளின் வழியேயான நவரசத்தை
நித்திலமாய் உணர்த்திடுதே நடனமது
நாட்டிய மங்கையின் பாரதத்தை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உயிர்த்தமிழின் தமிழ் பண்பாடு

பா.தர்மியா
14ஆம் தலைமுறை
கனிய வளங்களும் தொழில்நுட்பம்
கற்கைநெறி

புதைத்து தொலைத்ததை
கிழித்து திறக்கிறோம்
மரித்து மறந்ததை
மீளத் துதிக்கிறோம்
இலவம் பஞ்சிலும், அலரி நஞ்சிலும்
அடைந்த பேறுகள் அழிந்த போதிலும்...
கோவின் சாணமும் ...
கோவில் மணி ஓசையும் ...
மீளக் கேட்கையில்
மீளும் இவ்வஞ்சமே!
ஆக தமிழன் ஆண்ட நல் தரணி எங்கிலும்
ஈன்ற புதல்வர்கள் இன்று தேடிடும்
தங்கம் யாது எனில்
தமிழன் பண்பாடேனும் அழியா நுட்பமே!
கலியுகம் கலைந்திடும் காலம் முழுவதும்
தேடல் தொடரினும்
தேடிக்கிடைப்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுதின் பாதியே
முழு மதியே தேய்ந்திடும் நாளை வகுத்தவன்
நல் நாட்கள் வகுத்திடும்
பஞ்சாங்கம் படைத்தவன்
எதிரி கொன்றிட
ஈட்டி துடைத்தவன்
நாட்டை காத்திட
நல் கோட்டை அமைத்தவன்
காட்டு விலங்குடன் காதல் புரிந்தவன்
தீதே ஆயினும்
பதிலாய் நன்மை கொடுத்தவன்
கொடையில் தேரினை கொடிக்கு கொடுத்தவன்
ஆக ஆயிரம் கீழடி தோண்டிலும்
தோன்றலில் புகழொடு தோன்றிய
தமிழின புதுமை மறையுமோ?
மானம் பெரிது என மறை உலகிலே மறைதமிழன் நாட்டிய
மாண்பு சாகுமோ?
வீரம் புகட்டிய வீர மறவர்கள் புதைந்த நிலத்திலே!
கோழைச்செடிகளின் விதைகள் முளைக்குமோ?
ஆக மறைந்ததாய் துலங்கிடும்
ஆண்ட தமிழின்
அரிய நுட்பங்கள்
தோண்ட தோண்ட துலங்கிடும்
அதுவே உண்மை
தமிழன் பண்பாட்டை காட்டிடும்
அவன் தொண்மையே!!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவளும் தாயாவாள்...

ச.சுகிர்தன்
14ஆம் தலைமுறை
விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் கற்கைநெறி

மீனாட்சி ஆசை ஆசையாய் வளர்த்த தன் ஒரே பையன்தான் “ராம்”. அவனுக்கு 25 வயதானதும் திருமணம் செய்துவைக்க பெண் தேடினாள். அவள் எதிர்பார்த்த விதத்தில் பெண்கள் யாரும் கிடைக்க வில்லை இருந்தும் அவள் பெண் தேடுவதை நிறுத்தி விட வில்லை. பல இடங்களில் ஜாதகம் கொடுத்தாள், பல தரகர்கள் அவளின் தேடலில் இணைந்து கொண்டார்கள். அவளின் தேடலில் இத்தனை எதிர்பார்ப்புகள் இருந்தது. இருபதுக்கு மேற்பட்ட இடத்தில் சொல்லிவைத்தாள். 30, 40 பெண்களை அலசி ஆராய்ந்தாள். கிடைக்கும் பெண்கள் எல்லோரினதும் ஒழுக்கம் பார்த்து, மரியாதை பார்த்து, படிப்பு பார்த்து, பண்பு பார்த்து, குலம் பார்த்து, குடும்பம் பார்த்து, இத்தனை பார்த்தும் பல நாட்கள் தேடலின் விளைவில் கிடைத்தவள்தான் “யோதி” அவளின் ஜாதக பொருத்தத்தை மட்டும் பத்துக்கு மேற்பட்ட இடத்தில் பார்த்தாள். எதுவும் போட வேண்டாம் பெண்ணை மட்டும் அனுப்பி வையுங்கள் மகளைப்போல் பார்த்துக்கொள்வதாக அவள் தந்தை தாயிடம் வாக்கு கொடுத்து யோதியை நிறைய செலவு செய்து பையனுக்கு ஆடம்பரமாக திருமணம் செய்து வைத்தாள். பையனின் திருமணத்தை ஆடம்பரமாக செய்வதில் அம்மாவை விட சந்தோஷம் யாருக்கும் இருக்காது.

திருமணம் முடிந்தும் ஒரு சில நாட்களுக்கு நிறைய சம்பிரதாயங்கள் இருப்பதால் யாரும் யாரையும் கண்டு கொள்ளவில்லை. இதற்குள் முதலிரவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்தது. ராம்க்கும் யோதிக்கும் இடையே ஒருவித நெருக்கம் உருவாகியது. சொந்தபந்தங்கள் எல்லாம் ஊருக்கு சென்றபின் காலையில் எழுந்து காபி போடப்போன மீனாட்சிக்கு உதவி செய்ய மருமகள் யோதியும் கிச்சனில் வந்து நிற்க, மீனாட்சிக்கு சற்று பயம் தொற்ற ஆரம்பித்தது. இருபத்தைந்து வருடங்களாக தன் கட்டுப்பாட்டில் இருந்த சமையலறையில் முதன்முறையாக உரிமையோடு இன்னொரு பெண் வந்து நிற்கிறாளே! என எல்லா அம்மாக்களுக்கும் ஏற்படுகிற முதல் சிறுபயம் அதுதான்.

அவனுக்கு காபி strongகா இருந்தாதாம்மா புடிக்கும் நான் போட்டுத்தர்றேன் கொண்டுபோய் கொடு என்று மீனாட்சி யோதியிடம் சொல்ல கோயில் மாடு மாதிரி அவளும் தலையசைத்தாள். கொஞ்ச நேரத்தில் காபியும் தயாரானது காபியை எடுத்துக் கொண்டு சென்ற யோதியை பார்த்த படியே நின்றாள் மீனாட்சி. காபியை கொண்டு சென்ற யோதி எதார்த்தமாக கதவை சாத்திக்கொள்ள, மீனாட்சிக்கு மட்டும் படபடப்பாகவே இருந்தது. பின் ராம்க்கு காபியை பரிமாறினாள் யோதி. இதற்குள் யோதி கை கழுவ தண்ணீர் தருதல், அவ்வப்போது ரகசியமான சிணுங்கல் பேச்சு, எப்போதும் மகனுடனே இருப்பது, மகனும் அவளுடனே இருப்பது என அன்றாட நடவடிக்கைகள் எல்லாம் மீனாட்சிக்கு எதையோ இழந்தது போன்ற தடுமாற்றத்தை உண்டாக்கியது. இவ்வளவு நாள் எழுப்பிவிடுவதில் இருந்து காபி கொடுப்பது சாப்பாடு பறிமாறுவது, துணி துவைப்பது, காத்திருப்பது, கால் அமுக்குவது என எல்லாவற்றுக்கும் தன்னை எதிர்பார்த்த மகனுக்கு இவை எல்லாவற்றையும் செய்ய புதிதாக ஒரு பெண் வந்திருக்கிறாள் அப்படியென்றால் மீனாட்சியின் உரிமை பறிபோனதாய் உணர்வதில் தவறேதும் இல்லையே...!

அவன் என் மகன், முதல் உரிமை எனக்குத்தான், என்று நினைக்கத்துவங்கிய மீனாட்சி மனம் மருமகளை போட்டியாக நினைக்க ஆரம்பித்தது. அவனுக்கு நான் முக்கியமா? இல்லை நீ முக்கியமா? என்கின்ற போட்டிக்கு பின்னால் இருக்கின்ற உளவியல் ரீதியான "பொஸஸ்ஸிவ்நஸ்ஸை" புரிந்துகொள்ளாமல் மருமகளும், தன்னை எந்த வேலையும் செய்யவிடுவதில்லை, எல்லாவற்றிலும் குற்றம் கண்டுபிடிக்கிறாங்க என்று தன் பங்கு போட்டியையும், உரிமைச்சண்டையையும் துவங்க அது மெல்ல வளர்ந்து ராமால் எந்தபக்கமும் பேசமுடியாத அளவிற்கு மோசமாகி விட்டது. அவனது நிலை ஏதோ ஒரு நாள் ரென்ஷனில் மீனாட்சியை திட்டிவிட அந்த நொடிமுதல் அம்மாவின் மனம் உடைந்துபோய் தன் மகன் மனைவி பேச்சை கேட்டு என்னை உதறித்தள்ளிவிட்டான் என்று புலம்பத்தொடங்கிவிட்டாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுய நிலை திரும்பிய ராம்க்கு அப்போது தான் தெரிந்தது தான் அம்மாவிடம் பேசியது தவறு என்பது. அதை மீண்டும் மீட்டெடுக்கவே முடியாது, ஆனால் இதை எப்படி சரிசெய்வது? இதை சரிசெய்யும் சக்தி யோதிக்கு மட்டுமே இருக்கிறது. திருமணமாகி வந்தவுடன் எந்த பெண்ணும் முதலில் கணவனுக்கு நெருக்கமாவதற்கு முன் மாமியாருடன் நெருக்கமாகி அவர் உங்களுக்கு மகன், அதன் பிறகுதான் என் கணவன், அதனால் முதல் உரிமை உங்களுக்குத்தான் என்கின்ற நம்பகத்தன்மையை அவர் மனதில் விதைத்திருக்க வேண்டும். ஆனால் யோதி அப்படி செய்திருக்கவில்லை.

அப்படி விதைத்திருந்தால் மீனாட்சி மனது திருப்தி அடைந்திருக்கும் மருமகளை யாரோ என்று நினைக்காமல் மகள் போல் நினைத்து மகனை விட்டுகொடுத்திருந்திருப்பால். ஆனால் அப்படி எந்த மருமகள் தான் செய்கின்றார்கள். யாரும் செய்வதில்லை, வரும்போதே கணவன் மீதான தனது உரிமையை நிலைநாட்டுவதிலேயே அவர்களது முழுகவனமும் இருக்கிறது.

இதனால் 25 வருடமாக வளர்த்த மீனாட்சியின் மனம் தன்னிடமிருந்து மகனை பிரிக்கவந்த எதிரியாக மருமகளை வெறுப்புடன் பார்க்க ஆரம்பிக்க தொடங்கியதில் பிழை ஏதும் இல்லை. ''பொஸஸ்ஸிவ்நஸ்'' என்பது அடிப்படையளவுக்கு அதிகமான அன்புதான். அவ்வளவு அன்பு கொண்டவர்கள் அடுத்தவர்களை காயப்படுத்த விரும்ப மாட்டார்கள். அத்துடன் அவர்களுக்கு பிடித்த ஒன்றை இலகுவில் விட்டுக் கொடுக்கவும் நினைக்க மாட்டார்கள். ஒரு குழந்தை நீண்ட நேரமாக ஒரு பொம்மையை வைத்து விளையாடும். அது உறங்கும் போதும் அதை தன்னோடு அணைத்துக் கொண்டுதான் உறங்குகின்றது. அப்படித்தான் எல்லா அம்மாக்களும் மகன்களை தங்கள் பொம்மையாகவே நினைத்து விடுகின்றார்கள். பொம்மையை பிடுங்கும்போது குழந்தைக்கு ஏற்படும் அதே வலிதான் ஒவ்வொரு அம்மாவுக்கும்.

யோதி என்ன செய்திருக்க வேண்டும்..! "உங்கள் மகனை எனக்கும் மிகவும் பிடிக்கும்" என்பதை மட்டும் உணர்த்திவிட்டு கொஞ்சம் காத்திருந்திருக்க வேண்டும். மீனாட்சியே முழு சந்தோசத்துடன் ராமை விட்டு கொடுக்கும் வரை யோதி காத்திருந்திருக்கலாம். மருமகள்களே முதலில் எல்லோரும் புரிய வையுங்கள் உங்கள் மாமியார்களுக்கு "உங்கள் மகனை பிரித்துச் செல்ல வரவில்லை, உங்களிடமிருந்து யாரும் பிரித்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் வந்திருக்கிறேன்" என்பதை மட்டும் உணர்த்திவிடுங்கள். உங்களுக்கு கணவன் மட்டுமல்ல போணஸாக ஒரு அம்மாவும் கிடைப்பாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மனம் ஒரு குழந்தை

பா.மிதுசன்
14ஆம் தலைமுறை
தேயிலைத்தொழில்நுட்பம்
கற்கைநெறி

மனம் ஒரு குழந்தை, அது
மலரைக் கண்டால் பறிக்க சொல்லும்
ஆனால் அதனை ரசிக்கச் சொல்லாது
மங்கையை பார்த்தால் புண்முறுவல் செய்யும்
அவர்கள் வயதை அறியாது
அனைத்தையும் நம்பும் ஆனால்
பின்னால் நடப்பதை அது அறியாது
இத்தனைக்கும் மனம் ஒரு குழந்தையே...!!
இருளைக் கண்டு அச்சமுறும் ஆனால்
இருளகற்ற தீர்வைத் தேடாது
அனைத்திலும் ஆசை கொள்ளும்
அதில் உள்ள ஆபத்தை அறிந்து கொள்ளாது !!
இயல்பாய் கதைக்கும் அதனுள்
இலக்கணங்கள் பார்க்காது
இறுதியில் கலக்கமுற்றால் - அம்மா
என்றுரைக்கும் அத்தனைக்கும்
மனம் ஒரு குழந்தையே....!!!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யுகதர்ஷனா ஜீவானந்தராசா
14ஆம் தலைமுறை
கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் கற்கைநெறி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சதுர்சிகா சாந்தகுமார்
16ஆம் தலைமுறை
தேயிலை தொழில் நுட்பம் மற்றும் பெறுமதி சேர்ப்பும் கற்கைநெறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மட்டங்களுக்கு இடையிலான கவிதை போட்டியில் வெற்றியீட்டிய ஆக்கங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

## என் உயிரினும் மேலான தமிழ்மொழி

ஆகாசனா கருணாமூர்த்தி
தரம் 11
கிளி/முருகானந்தா கல்லூரி

பேச்சுத் தந்தாயே பேரன்னை தமிழ்மொழியே
மூச்சுத் தந்தவளின் முதலன்னை நீதானே
மொழியினில் மூத்தவளும் நீயே இனியவளும் நீயே
பூமியிலே புகுந்தோர்க்கு புதுமை புகன்றவளும் நீயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உயிரினும் மேலான தமிழன்னை நீதானே!

இன் சொலை இறைக்கும் இனிய மொழி நீதானே
வன் சொலை வதைக்க வந்தவளும் நீயே
மண்தோன்றா காலத்தில் மலர்ந்த ஒரு மொழியும் நீ தானே
நானிலம் ஆண்ட தன் மொழி நீதானே.

உயிருடன் வந்து உய்ந்த மொழி நீதானோ!
ஈறாறு உயிரினையும் மூவாறு மெய்யினையும்
ஈன்ற பெரும் பேரன்னை நீதானே
மூவேந்தர் போற்றிய முது மொழியும் நீதானே
முத்தமிழ் இயற்றிய மூத்தவளும் நீதானே.
உயிரினும் மேலான உதிரத்தில் கலந்த மொழியும் நீயே!

விழுமியம் விதைத்த அந்த வீரத்தாய் நீதானே
மூவுலகும் ஆண்ட முதியவளும் நீயே
முருகனைக் கவர்ந்த முன்மொழியும் நீதானே
மானிடர் வடித்த சிற்பியும் நீதானே
என் உயிரினும் மோலான தமிழன்னை தாயவளே

அகத்திணையும் புறத்திணையும் அகத்திலே கொண்டு
அவதரித்த அரிய மொழியும் நீநானே.
இலக்கியத் தோடு இலட்சியம் வளர்ந்த
இனிய மொழி நீதாானே !
இல்லையென்போர்க்கு இல்லையென்னாத
ஈதல் மொழி நீதானா !
உன்னை என் உயிரினும் மேலான மொழியென்பேனே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

## என் உயிரினும் மேலான தமிழ்மொழி

அ.கபில்ஷன்
தரம் 10
மு/செம்மலை ம.வி

சங்கம் வைத்து சான்றோர் வளர்த்த என் மொழி
சந்தம் கலந்து சங்கீதம் இசைத்த மொழி
அங்கம் முழுதும் அலை பாயும் என்மொழி
பங்கம் பெறா பழைய மொழி தமிழ்மொழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிசூடிய மும் மன்னர் வளர்த்தது செந்தமிழ்
பாரதியின் பாட்டிலே பைந்தமிழ்
செம்மொழியாய் போற்றப்பட்டதோ என்மொழி
தரணி எங்கும் பரணி பாடிய தொண்மொழி.......

பரவலர் பாட்டிலும் நாவலர் ஏட்டிலும்
நடனம் பயின்றாள் தமிழ்மொழி
ஆயிரம ஆண்டுகள் மேலாக ஆண்டதும் என்மொழி
ஆலயம் முழுவதும் ஆர்ப்பரிக்கும் என் தமிழ்மொழி.

நாடுகள் பல நாடியவள் என்மொழி.
தனக்கென்று ஓர்நாடு கொண்டிராத தனிமொழி
தங்கமெனபோற்றி தகதகத்த என்மொழி
தமிழர் தன்மானம் காத்த தண்மொழி

காவியங்கள் பலகண்ட என்மொழி.
ஓவியங்கள் பல வரைந்த ஒரு மொழி .
என் உதிரத்தில் உறைந்துள்ள என்மொழி
தமிழன் உறவிலேயே நிலைத்த தமிழ்மொழி.

ஆதி அறிந்து அந்தம் காணா என்மொழி.
சாதி கொண்டிரா சாகித்தயமான மொழி.
தாய்மண்ணோடு பண்ணிசைத்தமிழ்மொழி.
தாலாட்டுப்பாடிய தாயுணர்வில் வந்த தமிழ்மொழி

என் உயிரிலே கலந்த மொழியே -தமிழ்மொழியே
நீ நீடுழி வாழ்க நிரந்தரமாய் வாழ்க!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

## சிந்தையை அலங்கரிக்கும் இயற்றமிழே

அ.பாத்தியா றிஸா
தரம் 11
மன்/அடம்பன் ம.ம.வி

கல் தோன்றி மண் தோன்றா
காலம் முதல் தோன்றிய முத்தமிழாம் எம்மொழி:
சிந்தையில் விந்தை காணும்
இயற்றமிழாம் எம் தமிழ் மொழி !

தாய் மொழியின் அடையாளமாம் தமிழ் மொழி !
அறிவிற்கு இலக்கணம் வகுத்தது எம் மொழி
சிந்தையை விரிவாக்க பிறந்தது எம் மொழி
உலகில் பூத்த விந்தை மொழியாம் எம் தமிழ் மொழி !

அம்மா தொடங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவை வரை
சிந்தை புகட்டியது
விந்தை தமிழ்

அடி முடி தேடினாலும்
அகராதியை புரட்டினாலும்
முழுமையாய் அர்த்தம் கண்டிராத
விந்தையாம் எம் தமிழ் மொழி!


எல்லையில்லா இயற்றமிழே
அந்தம் இல்லா பைந்தமிழே
சிந்தையை அலங்கரிக்க - நீ செய்த
விந்தை தான் எத்தனையோ?

பிறந்ததும் நான் அழுதேன் என் தமிழில்
வளர்ந்தும் நான் பேசியது செந்தமிழே
மனிதனாக்கியதும் என் இயற்றமிழே
என் இறப்பிலும் என் உயிர்த்தமிழே!

கதைகளின் காவியமாக உயிர்களின் நீ ஓவியமாக
சிந்தையை விந்தையாக்க பிறந்தாய் இயற்றமிழே!
உன் புகழ் நிலைக்கட்டும். வையமெங்கிலும்
வாழ்க தமிழ் வாழிய வே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AATHITHYA
*Advertising*

**Best Digital & Offset Printers**




226/11, Modern Complex, Badulla.

055 2228676 | 0777 938 936

aathithyaad@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINTED BY
AATHITHYA ADVERTISING
226/11, MODERN COMPLEX, BADULLA
055 222 86 76 | 0777 938 936

9 786245 856558

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org